# பண்டைத் தமிழர் பண்பாடு

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

தொகுத்தவர்
வித்துவான் திரு. ஐயன் பெருமாள் கோனர்
தமிழர் விரிவுரையாளர்
அர்ச். சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

புத்தக நிலையம்
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை

முதற் பதிப்பு—பிப்ரவரி 1950
மறு ,, —ஏப்ரல் 1951
மறு ,, —ஏப்ரல் 1951

விலை ரூபாய் 1-12-0

Maruthy Press, Royapettah, Madras.

# முன்னுரை

அமிழ்தினு மினிய தமிழ் வழங்கும் திருநாடு பழம் பெருமை வாய்ந்தது; பண்பாட்டிற் சிறந்தது. தமிழகத்தின் மேன்மையும், அருங்கலைகளின் மாட்சியும், அறநெறி திறம்பாத ஆண்மையும், வாணிபத்தின் சீர்மையும் இன்ன பிறவும் தமிழ் இலக்கியத்திலே பொய்யறியாப் புலவர்களால் புகழப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டிலும் மொழியிலும் தலை சிறந்த ஆர்வ முடைய அறிஞர் பலர் அவற்றைக் கட்டுரைகளின் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். அத்தகைய கட்டுரைகளில் ஒன்பதைத் தொகுத்துப் 'பண்டைத் தமிழர் பண்பாடு' என்னும் பெயரால் நவரசத் தமிழ் விருந்தாகத் தருகின்றார் இந்நூலின் தொகுப்பாசிரியர். பண்டைத் தமிழர் மேம்பாட்டை நன்கு விளக்குகின்ற இந் நூலைத் தமிழ் கூறு நல்லுகம் ஏற்றருளு மென நம்புகிறோம்.

புத்தக நிலையத்தார்.

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் நாடு ... | 1 |
| 2. | தமிழ் மொழி ... | 16 |
| 3. | தமிழ்க் கலைகள் ... | 26 |
| 4. | இசைக்கலை ... | 44 |
| 5. | தமிழர் படைத்திறம் ... | 58 |
| 6. | வீரத் தாய்மார் ... | 70 |
| 7. | தமிழர் வாணிபம் ... | 81 |
| 8. | தமிழகமும் சோழரும் ... | 98 |
| 9. | தமிழ்ப் புலமை ... | 106 |

# 1. தமிழ் நாடு

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

இதுபோழ்து, நாம் வதியும் தமிழ் நாட்டின் எல்லை, பன்னிரண்டு ஜில்லாக்கள் அளவில் கட்டுப் பட்டுக் கிடக்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னரோ தமிழ் நாடு, சேர நாட்டையும், தெலுங்கு நாட்டின் ஒரு பகுதியையும் உடன்பெற்றிருந்தது. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தொல்காப்பியத்துக்குப் பாயிரம் கூறப் புகுந்த ஆசிரியர் பனம்பாரனார் "வடவேங்கடம் தென் குமரி, ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து" என்று தமிழ் நாட்டின் வரம்பு குறித்துப் போந்தார். அவர் காலத்துக்கு முன்னர்த் தமிழ் நாட்டின் வடகோடு, விந்தியம் வரை முட்டியிருந்த தென்றும் அவ் வரையினையும் கடந்து நின்றதென்றும் ஆராய்ச்சிக்காரரர் கூறுப. தென்கோடாகக் குறிக்கப் பெற்ற குமரி என்பது, இக்காலத்தில் ஒரு முனைக்கு வழங்கப்படினும், பழந்தமிழ் நூல்களில் அஃதோர் ஆற்றிற்கு வழங்கப்பட்டு வந்தது. அவ் வாற்றிற்குத் தெற்கே பஃறுளி என்னும் மற்றுமோர் ஆறு

ஓடியதாகவும் நூல்கள் அறிவிக்கின்றன. அவ்யாறுகளின் இருப்பு: "தெனு அதுரு கெழு குமரியின் தெற்கும்," "நெடியோன் நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" என வரூஉம் புறநானூற்றானும், அழிவு: "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங் கடல் கொள்ள" என வரூஉஞ் சிலப்பதிகாரத்தானும் அறியக் கிடக்கின்றன.

இவ்வாறுகள் வளஞ்செய்த செழிய நிலப் பரப்பே குமரி நாடென்று சொல்லப்படுவது. அந்நாடு, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கடலால் கொள்ளப்பட்டது. இப்பொழுதுள்ள இந்துமகா சமுத்திரம் என்னும் பெருநீர்ப்பரப்பு நிலப்பரப்பா யிருந்த தென்றும், ஆண் பெண் மக்கள் தோற்றம் முதன் முதல் உற்றதென்றும், அந்நிலம் பின்னைக் கடலால் விழுங்கப் பட்டதென்றும் ஆசிரியர் ஏர்னஸ்ட் ஹெக்கல், ஸ்காட் எலியட் உள்ளிட்ட அறிஞர் பலர் தமது ஆராய்ச்சியிற் கண்ட உண்மையை உலகுக்கு உணர்த்தியிருக்கின்றனர். இதனை அவ்வறிஞர்கள் எழுதியுள்ள "ஹிஸ்டரி ஆப் கிரியேஷன்" (**History of Creation** - படைப்பு வரலாறு), "லாஸ்ட் லெமூரியா" (**Lost Lemuria**-மறைந்த லெமூரியா) முதலிய நூல்களிற் காண்க. லெமூரியா என்னும் நிலப்பரப்பே தமிழ் நூல்கள் கூறுங் குமரி நாடு.

இத் தொன்னிலப் பரப்பின் அழிவு போக, எஞ்சி நிற்பதே இதுபோழ்து நாம் வாழும் தமிழ்த்தாயகம். இத் தமிழகத்தின் தொன்மையை எக்கால அளவு கொண்டு கூறுவது? அது சரித்திர காலத்தையுங் கடந்து நிற்

பது. "இத்தொன்மை வாய்ந்த நாட்டிற் பிறந்தவர்கள் நாம்" என்று சொல்லும்போது, என்னை அறியாதே என்பால் இறுமாப்பெழுகின்றது.

* * * *

தமிழ்நாடு, வெப்பமும் தட்பமும் ஒப்பவாய்க்கப் பெற்றுண்மையான், அதன் இயற்கை வளன், உடல் நலத்துக்கும் உயிர் நலத்துக்கும் உறுதுணை செய்யும் நிலையில் அமைந்திருக்கின்றது. குளிர் மிகுந்த நாடு, மக்கள் உடல் நலம் பேணத் துணைநின்று, உயிர்க்குரிய குணநலம் அரிதே வழங்கும். வெம்மை செறிந்த நாடோ, உடல் நலத்துக்கும் ஊறு செய்வதாகும். இரண்டும் ஒப்ப வாய்ந்த இடமே மக்கள் வாழ்விற்கு உரியதாகும். அப் பேற்றை நந்தமிழகம் பெற்றிருக்கின்றது. இவ்வியற்கை நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று பாகுபடுத்தி, அதனதன் இயல்புக்கேற்ப வாழ்வு நடாத்தி, இயற்கையின்பந் துய்த்தவர்கள் நம் பண்டைத் தமிழ் மக்கள். அவ்வியற்கை வாழ்வே இதுபோழ்து வேண்டற்பாலது.

* * *

தமிழ்நாட்டின் மலைகளின் நிலையும், காடுகளின் செறிவும், ஆறுகளின் ஒழுக்கும், வயல்களின் செழுமையும், கடலின் ஓதையும் எழுத்தோவியர்க்குப் பெருவிருந் தாவன. வேங்கடத்தெழுங் கடவுள் மணமும், பொதிகை யிலெழுந் தென்றக்காலும் ஒன்றி விராவி நீலம் முதற் கோடுகளில் தாக்குற்றுத் தேங்குமாறு கீழும் மேலும் இடையீடின்றித் தொடர்ந்தும் அடர்ந்தும் அரண் செய்யும் மலைக் கோவையின்

கோலமும், அங்ஙனந் தேங்கும் இயற்கை யமிழ் தைச் சேமித்து உயிர்கட்கு ஊட்ட நீட்டுமாபோல் அம்மலைக் கோவையினின்றும் கவடுங் கோடும் அரும்பினாலெனச் சுருள் சுருளாகவும் திரள் திரளாகவும் இவர்ந்தும் இழிந்தும் விட்டும் தொட்டும் கருவூலங்களை யொத்து நிற்கும் வரைக்குலங்களின் அமைவும், அவைகளின் துணைபெறு சிற்றில்களென ஆங்காங்கே சிதறிச் சிதறித் திகழுங் குன்றச்சூழல்களின் பொலிவும், கண்ணையும் மனத்தையும் கவர்வனவாம். இயற்கையோடியைந்த இன்ப வாழ்வளிக்கும் இயற்கை நிலையங்களாய நீலகிரி முதலிய பல மலைகள் உயிர்களை ஓம்பி வருகின்றன.

வாழ்வுக் கியைந்த காடுகளும் தமிழ் நாட்டில் அமைந்திருக்கின்றன. மலைகளோடு மிடைந்தும் தனியே சிறந்துஞ் செறியுங் காடுகள் வெயில் தகைந்து அளிக்குங் காரிருள் நீழலும், வண்டு துவைப்பத் தேன் பிலிற்றும் பூங்காவனங்களினின்றுங் கமழும் நறுநாற்றமும், வான் பரந்த பொழில்களின் நிரையும், கான் பரந்த தூறுகளின் துதைவும், பசுஞ் செடிகளின் ஈட்டமும், கொழுங் கொடிகளின் பின்னலும் உள்ளத்தைக் குளிர்விப்பன அல்லவோ? வான் முகடுகளினின்றும் முடுகி, இடியென எழுந்து வீழுஞ் சாரல்களின் விரைவும், பரலையும் அறலையும் அரித்தரித்துப் பளிங்குருகிப் பாயுமாபோல் இழிதரும் அருவிகளின் முழவும், பாட்டெனப் பரந்து செல்லும் ஆறுகளின் அணியும், வேறு பல நீர்நிலைகளின் பரவலும், உரைகடந்த அகச்செவிக்கு இன்பூட்டுவன அல்லவோ? பாலியும், பெண்ணையும், காவிரியும், கொள்ளிடமும், வையையும், பொருநை

யும், அகில் தாங்கி மணிகொழித்து அதிர்ந்தோடும் அழகை எழுத்தால் எழுதல் முடியுமோ? இவ் வாறுகள் பாய்ந்து வளஞ்செய்யும் வயல்களின் செழுமையைச் செப்பவும் வேண்டுமோ? வயல் களின் பரந்த பசுமை, பசுங்கடல் நினைவையன்றோ ஊட்டுகிறது? மருதத்துக்கே உறையுளாய் நன்னிலங்கொண்ட தஞ்சையை நெற் களஞ்சிய மாக வாய்க்கப்பெற்ற பெருமை நந்தமிழ் நாட்டுக்கு உண்டு. இத்தமிழ் நாட்டின் வரம்பில், மணி யுதிர்த் தரங்கம் பாடும் பாட்டுக்கு என்றுதல் ஓய்வும் உண்டோ?

இசைமயமான இயற்கை நிலத்தில் வாழ்வு நடாத்தி, அவ் வியற்கைத் தமிழைச் சுவைத்த வர்கள் நம் முன்னோர்கள். 'தமிழ்' என்பதற்கு 'இனிமை' என்பது பொருள். ''தமிழ் தழீஇ இய சாயலவர்'' என்றும், ''தமிழ் சேர் காஞ்சி'' என் றும் புலவர்கள் 'இனிமை' என்னும் பொருள் படத் 'தமிழ்' என்னுஞ் சொல்லை ஆண்டிருத்தல் காண்க. பழமை மக்கள், இயற்கையி லூறுந் தமிழையே, பின்னைத் தாங்கள் அவ்வியற்கைப் பொருளுக்கிட்ட சொன்மொழிக்கும் வழங்கினோர் கள் போலும்! இயற்கை இனிமையோடு—தமி ழோடு — அம்மக்கள் கொண்ட வாழ்விலெழும் இன்பக் கிளர்ச்சியால், தாங்கள் மாந்த, இனிமை—தமிழ்—உறையுளாம் இயற்கையைச் சொல்லோவியமாக எழுதுவது அவர்களது பெரு விளையாட்டு. அச் சொல்லோவியங்களைக் கொண்ட இன்பப் பெட்டகங்கள் கலித் தொகை, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள்.

* * * *

பழந் தமிழ் மக்கள் தங்கள் வாழ்வை இரு கூறாகப் பிரித்து வாழ்ந்தார்கள். அவை அகவாழ்வு புறவாழ்வு என்பன. அகவாழ்வாவது—ஒத்த நலன், ஒத்த குணன், ஒத்த கல்வி முதலியனவுடைய ஒருவனும் ஒருத்தியும் கூடி நடாத்தும் இல்லற வாழ்வு. அவ் வாழ்வு, இன்பவாழ்வாக இயங்க வேண்டுமேல், அதற்குப் பொருள் இன்றியமை யாது வேண்டற் பாலது. ''பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை'' என்றார் பொய்யா மொழியாரும். அப்பொருள் எவ்வாறு கிடைக்கும் ?

பொருட்பேற்றிற்குக் கல்வியும் தொழிலும் தேவை. கல்விப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் பெறுதற்குச் சிறந்த அமைப்புக்கள் இன்றியமை யாதன. அவ்வமைப்புக்கள் செவ்வனே இடை யூறின்றி இயங்க நாட்டில் அமைதி நிலவல் வேண்டும். மாற்றார் பகை கடிந்து, அமைதி காக்க நல்லரசு வேண்டும். நல்லரசில்லையேல், நாடு காடாகும். ஒழுங்கு பட்ட அரசிய லிருந்தாலன்றி, அகவாழ் வெனும் இல்லறம் ஒழுங்குபட நடை பெறல் அரிது. இவ்வரசு, கல்வி, பொருள் முதலிய வற்றைக் கொண்டதே புறவாழ்வென்பது. இதனால் அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் உள்ள தொடர்பு நோக்கற்பாலது. அவை யிரண்டும் உடல் உயிர் போன்றன. அகவாழ்வு அவ்வந்நாட்டு இயல்புக் கேற்றவாறு அமைந்து கிடப்பது. அவ்வாழ்விற்கு அரணுமாறு அவ் வந் நாட்டு இயல்புக்கேற்ற வண்ணம் புறவாழ்வும் அமைதல் வேண்டும். அகமும் புறமும் ஒன்றுபட்ட வாழ்வே இயற்கை வாழ்வாகும். பழந் தமிழ்மக்கள் கோலிய முறை வழி, எங்கணும் வாழ்வு நடை பெற்று வரின் உலகில் போர் ஏது ? அடக்கு முறை ஏது ?

* * * *

பண்டைத் தமிழ் நாட்டில் பிறப்பால் சாதிப் பாகுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. நிலப் பாகுபாடு ஒன்றே அந்நாட்டில் நிலவியிருந்தது. ''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா —செய்தொழில் வேற்றுமை யான்'' என்றார் நந் தமிழ்ப் பெரியாரும்.

பழந்தமிழ் நாட்டில் பெண் மக்கள் நிலை எவ்வாறிருந்தது என்பதும் ஆராயற்பாலதே ** 'தலைவனுந் தலைவியும் ஒத்த கல்வியுடையரா யிருந்தார்' என்னுங் குறிப்பும், 'பெண்மகள் தனக்கினிய ஒருவனைத் தனக்குரிய தலைவனாகத் தானே தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தாள்' என்னுங் குறிப்பும் இன்ன பிறவும் பழந்தமிழ் நாட்டுப்பெண் மக்கள் நிலையைப் புலப்படுத்தும். விரிவு களவியலிற் பார்க்க.

''பெண்ணை வெறுத்தல் பேரின்பம்'' என்னும் பாழுங் கொள்கை இடைக்காலத்தில் தோன்றியதாகும். பெண்ணழகில் அன்புக் கடவுளுண்மையுணரும் பெருமை வாழ்வு பெற்றிருந்தார்கள் நம் பண்டைத் தமிழ்மக்கள். இறந்துபடாது இன்றும் உள்ள பழந்தமிழ் நூல்கள் அறம் பொருள், இன்பம் என்னும் மூன்றையே அறிவுறுத்துதல் காணலாம்.

* * * *

''பழந்தமிழர்கள் கடவுளுண்மையில் உறுதி இல்லாத மக்களா'' என்று சிலர் கடாவலாம். அவர்கள், கடவுள் உண்மையில் உறுதியுடையவர்களே. ஆனால், அவர்கள் கொண்ட கடவுள் எது? அவர்கள் கடவுளைக் 'கந்தழி' என்னும் பெயரால் வழுத்தினார்கள். கட்டற்ற ஒன்று 'கந்தழி' என்பது. அழுக்காறு, அவா, வெகுளி முதலிய கட்டுக்கள்

கடந்து விளங்கும் இன்ப அன்பே அக் 'கந்தழி' என்னுங் கடவுள். ''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே'' என்று பின்வந்த தமிழ் நாட்டன்பர்—மணிவாசகனார்— அருளியிருத்தலை நோக்குக. அவர், கடவுளை 'இன்பமே' என்றும், 'அன்பே' என்றும் விளித்திருத்தலை யோர்க. அவ் வன்புக் கடவுள் யாண்டில்லை? இயற்கையெல்லாம் அவ் வன்புக் கடவுள் வடிவல்லவோ?

* * * *

இயற்கையை விடுத்து, இறைவனை எவ்வாறு காண்டல் முடியும்? இதுபோழ்து உலகம் போற்றும் கவியரசர் ரவீந்திரநாத் தாகூரது கொள்கை, பெரிதும் பழந்தமிழர் கொள்கைக்கு அரண் செய்வதெனச் சுருங்கச் சொல்கிறேன்.

''பெண்ணுக்கு உரிமை நல்கிய என்னருமைத் தமிழ் நாடே! இதுபோழ்து யாண்டுளாய்'' என்று அலமருகிறேன். அவ்வுரிமை நாட்டை மீண்டுங் காண எவர் முயலல் வேண்டும்? தமிழகத்திற் பிறந்த நாமல்லவோ முயலல் வேண்டும்? என்னுடன் பிறந்த அருமைத் தமிழ் மக்களே! அந் நாட்டைக் காண வீறு கொண்டு எழுங்கள்! எழுங்கள்!

இனித் தமிழ் நாட்டின் கல்வி, இசை, ஓவியம், மருத்துவம், வானாராய்ச்சி, தொழில், வாணிபம், அரசியல், வீரம் முதலியவற்றின் மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். தமிழ், இயல் இசை நாடகம் என்னும் மூன்று வழியிலும் வளர்ந்து வந்தது. தமிழ்க் கல்வித்திறனை யுணர்த்தப் பழைய சங்கமருவிய நூல்களும் பெரியபுராணம்,

கம்பராமாயணம், தேவார திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களும் கருவிகளாகத் துணை புரிகின்றன.

தமிழ் நாட்டுக்கெனச் சிறப்பாக இசை யுண்டு. இதனை வலியுறுத்தச் சிலப்பதிகார அரங்கேற்று காதை ஒன்றே சாலும். தமிழ் நாட்டின் இசைச் சிறப்பைக் காலஞ்சென்ற தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய "கருணாமிர்த சாகரம்" என்னும் விரிந்த நூலில் பரக்கக் காணலாம். தமிழ் நாட்டின் மருத்துவ மாண்பைச் சித்த நூல்கள் தெரிவிக்கின்றன. நாடி பார்த்து நோய் இயல்பு உணர்தலும் பாடாணங்களில் மருந்து செய்வதும் தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்பாகும்.

தமிழ் மக்கள் வான ஆராய்ச்சியில் வல்லுநராயிருந்தார்கள் என்பதற்கு,

"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிதுநிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்தென் போரும் உளரே * *"

எனவரூஉம் ஒரு புறப் பாட்டை எடுத்துக் காட்டுவதோடு நின்று விடுகிறேன். இது குறித்து, அணித்தே இவ்வுலகு நீத்த அறிஞர் சாமிக் கண்ணுபிள்ளை செய்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து பெருக்கவேண்டுவது நந் தமிழறிஞர் கடமை.

தமிழ் மக்களின் ஓவியப் பெற்றியை விரித்துக் கூறவேண்டுதில்லை. பழைய சோழர் கட்டிடங்களும், பழைய கோவில்களும், அமராவதி, மாவலிபுரம் முதலிய விடங்களி

லுள்ள சிற்ப நுட்பங்களும், பழந்தமிழ் மக்களின் அணிகலன்களும், அவர்கள் பாட்டுக்களும் தமிழ் ஓவியத்தின் உயர்விற்கு நிலைக்களன்களா யிருக்கின்றன. தாகூர் முதலிய கவிவாணரும் தமிழர் ஓவியத்தைப் போற்றி யிருத்தல் கருதத்தக்கது. "நெடுநிலை மாடத் திடை நிலத் திருந்துழி" என்றும், "நிரைநிலை மாடத் தரமிய மேறி" என்றும், "வேயா மாடமும்" என் றும், "மான்கண் காலதர் மாளிகை இடங் களும்" என்றும் இளங்கோ அடிகள் தமிழ் மக்கள் கட்டிடங்களைச் சிறப்பித்திருக்கிறார்.

தமிழ் மக்களது தொழின் முறைகள், சிலப் பதிகாரம் - இந்திர விழவூரெடுத்த காதையிலும், மணிமேகலை - கச்சிமா நகர் புக்க காதையிலும் கடல்மடை திறந்தாலெனப் பொழியப்பட்டிருக் கின்றன. "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும், கட்டு நுண்வினை" கண்டவர்கள் நந் தமிழ் .மக்கள்; "கிழியினுங் கிடையினும் தொழில் பல பெருக்கிய" வர்கள் நந்தமிழ் மக் கள்; "பாலாவியன்ன" மிக மெல்லிய ஆடை நெய்தவர்கள் நந்தமிழ் மக்கள். இயற்கை இன்ப வாழ்விற்கு இன்றியமையாத தொழில் பல தமிழ் நாட்டில் இருந்தன.

தமிழ் நாட்டார் பண்டை நாளில் பிறநாட்டா ரோடு செய்துவந்த வாணிபப் பெருக்கை நோக்குழித் தமிழ் நாட்டின் வளனும், தொழின் முறைகளும் நன்கு புலனாகும். அந்நாளில் தமிழ் மக்கள், காலிற் பிரிவதோடு, கலத்திற் பிரிந்தும் கடல்கடந்து வாணிபம் செய்தார்கள். 'காலிற் பிரிதல்' 'கலத்திற் பிரிதல்' என வரூஉம் பழந்தமிழ் நூல்களின் வழக்கும், "திரைகடல் ஓடியும் திரவியந் தேடு" என்னும்

பழமொழியும் தமிழ் மக்கள் கடல் கடந்து செய்த வாணிகப் பெருக்கைக் குறித்தல் காண்க. பண்டைத் தமிழ் நாடு, கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, பாபிலோன், எகிப்து, ரோம், கிரீஸ், சிரியா முதலிய நாடுகளோடு வாணிகஞ் செய்ததைத் தற்காலச் சரித்திரக்காரர்கள் நன்கு ஆராய்ந்து பல நூல்கள் எழுதியுள்ளார்கள். அந் நாடுகளுக்குத் தேக்கு, சந்தனம், தந்தம், தோகை, மிளகு, ஏலம் முதலியன தமிழ் நாட்டினின்றும் அனுப்பப்பட்டன என்பதற்குப் பல அகச் சான்றுகள் இருக்கின்றன.

யவனர்க்கும் தமிழ் மன்னர்க்கும் இருந்த உறவும், அங்கும் இங்கும் ஒற்றர்களும் மெய்க் காப்பாளர்களும் தங்கியிருந்ததும் தமிழ் நூல்களில் வெள்ளிடை மலைபோல் அறியக்கிடக்கின்றன. யவனர் முதலிய தமிழ்ச் சொற்கள் தமிழ் நூல் களில் நுழைந்ததும், தோகை முதலிய தமிழ்ச் சொற்கள் துகி முதலிய சொற்களாக மருவி ஹீப்ரு முதலிய மொழிகளில் நுழைந்ததும் ஆராயத் தக்கன. இவ் வுண்மைகளைத் திரட்டிச் சரித்திர வடிவாக உலகுக் கீந்த கனகசபைப் பிள்ளை, சவரிராய பிள்ளை, நல்லசாமிப் பிள்ளை, சூரிய நாராயண சாஸ்திரியார், சீநிவாச பிள்ளை முதலிய தமிழ் மக்களது நன்றி என்றும் மறக்கற் பாலதன்று.

இவ்வுலகிற் றுறைகள் யாவும் நேர்பட இயங்குதற்கு அந்நாளில் நிலைக்களனாக நின்றது அரசியலே யாகும். நல்லரசியல் இல்லா நாட்டில் அமைப்பேது? வாழ்வேது? அற ஒழுக்கம் ஏது? ஒரு நாட்டின் நாகரிகமோ அநாகரிகமோ அந் நாட்டின் அரசியலையன்றோ பொறுத்து நிற்கும்? அரசியல் என்பது, உலகிடை

மறவினை மலியாது, அறவினை மலியுமாறு செய்தற்கு ஏற்பட்ட ஓர் அமைப்பு. அது குடியாட்சியோ கோனாட்சியோ எவ்வாட்சியோ பற்றி இயங்கினும் இயங்குக. அதனால் குடிமக்கட்குக் கேடு விளைதலாகாது என்பதொன்றே கவனிக்கற்பாற்று.

* * * *

பழந் தமிழ் நாட்டில் வளர்ந்த அரசியல, பெரிதும் அறத்தையும், அன்பையும், அருளையும் அடிப்படையாகக் கொண்டு நிலவியது என்பதற்குச் சான்றுகள் பலவுள.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்று புறநானூறு, உலகத்துக்கு உயிர் அரசு என்பதைத் தெரித்தல் காண்க. உயிரனைய அரசு, கோல் கோடி, மறவினை பெருக்கின், நாட்டு நிலை என்னும்? அந்நாட்டினும் கடும்புலி வாழுங் காடே நன்று. ஒரு நாட்டார் தமது நிறை காக்க வேண்டுமேல், முதலாவது அவர் நல்லரசு கோலிக் கொள்ளுதல் வேண்டும். தமிழ் மக்கள், அரசின் பெற்றி யுணர்ந்த முதியவர்களாகலான், அவர்கள் அரசை உயிரெனக் கொண்டார்கள். அம்மக்கள் நிலைக்கேற்ற முறையில், அரசு அந்நாள் அமைந்திருந்தது. பழந்தமிழ் அரசின் நடுநிலையையும், அருட்டன்மையையும் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

* * * *

பழந்தமிழரசின் அமைப்பு முறைகளை விரித்தற்கு அஞ்சுகிறேன். "படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்னுந் திருக்குறளான் அரச அங்கமும், "குடிதழீஇக் கோலோச்சு

மாநில மன்னன்—அடிதழீஇ நிற்கும் உலகு" என்னுந் திருக்குறளான் அரசியல்பும் விளங்கப் பெறுகிறோம். 'ஐம்பெருங்குழு' வொடு 'எண் பேராய' முங்கொண்டது நந் தமிழரசு என்று சுருங்கச் சொல்கிறேன். தமிழ் அரசின் போர் முறைகளைத் தொல்காப்பியம் முதலிய விரிந்த நூல்களிற் பார்க்க. அக்காலக் கடற் போர் முதலியவற்றைப் பதிற்றுப்பத்து முதலிய நூல் களிற் காண்க.

'இருபதாம் நூற்றாண்டு நாகரிகத்தில் முதிர்ந் தது' என்று சொல்லப்படுகிறது. இந்நாகரிக நூற்றாண்டில்' ஐரோப்பாவில் நடைபெற்ற பெரும் போரில், ஜெர்மானியர் பெல்ஜியத்தில் நிகழ்த்திய கொடுமைக்கோர் அளவும் உண்டோ? * * கிறிஸ் துவ நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்னரே, நந் தமிழ் மக்கள் போர் முறைகளை ஒழுங்குபடக் கோலியிருந்தார்கள். அம்முறைகள் தமிழ் மக் கள் நாகரிகத்தைப் புலப்படுத்துகின்றன. மாற்றார் மீது அறப்போர் துவங்குவதற்கு முன், தமிழ் வீரர்கள் ஆன், ஆன் அனைய அந்தணர், குழந்தை, பெண் முதலியோரைப் போர் நிலத்தினின்றும் விலகுமாறு அறிவுறுத்தி, அன்னார் அவண் இருந்து விலகிய பின்னர், அம்பு சொரிவார்கள். போரி னும் அறநெறி காத்த அருள்நாடு நந்தமிழ் நாடு.

*  *  *  *

முன்னை நாளில் இசைபட வாழ்ந்த தமிழ் மக்களின் குண நலன்கள் பலப்பல. அவைகளுள் ஒன்றைச் சிறப்பாக ஈண்டுக் குறிக்கிறேன்; அதா வது விருந்தோம்பல். விருந்தோம்பலில் தமிழ் மக்கள் பேர் பெற்றவர்கள் என்பது எவரும்

அறிந்த தொன்று. வாழ்க்கையே விருந்தோம்ப லுக்கென்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

" இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு "

என வருஉந் திருக்குறளை நோக்குக. பாரதப் போருக்கு அழைக்கப்பட்ட தமிழ்மன்னன், போரிற் கலவாது, போரில் தலைப்பட்டவர்க்குச் சோறூட்டும் அறத் தொண்டேற்றது இங்கு, நினைவிற்கு வருகிறது.

இவ் விருந்தொம்பும் நீர்மை இக்காலத் தமிழ் நாட்டில் அருகி வருதலைக் காணக் கண்ணீர் பெருகுகிறது. காரணம் என்னை ? வறுமையா ? அன்று ; அன்று. தற்கால நாகரிகக் கல்வியால் ஏற்பட்டுள்ள ஆன்ம நேய ஒருமைப் பாட்டழிவே யாகும். மீண்டும் அந் நேயம் பெறநாம் பழந் தமிழ் நாட்டைப் புதுமுறையில் காண்டல் வேண்டும்.

* * * *

" இத் தமிழ்நாட்டவராகிய நாம், பலப்பல சாதியினராய்ப் பலப்பல சமயத்தவராய்ப் பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கிறோம் ; ஒருமைப் பாட்டுக்கு வழியும் உண்டோ " என்று சிலர் வினவலாம் ; சிலர் கருதலாம். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்துநின்று நம்மனைவரையும் ஒருமைப்படுத்தி நிற்பது ஒன்றுளது. அதன் மீது நாம் கவலை செலுத்துவமேல், அது வேறுபாடுகளை வீழ்த்தி, ஒருமைப்பாட்டை உண்டு பண்ணும். அஃது எது ? அதுவே நமது அருமைத் தமிழ்.

தமிழ்நாட்டிற் பிறந்து, தமிழ் நாட்டில் வளர்ந்து, தமிழ் நாட்டைத் தாய் நாடாகக் கொண்ட எல்லாரும் பெரிதும் தமிழே பேசு

இன்றனர். பிறநாட்டினின்றுந் தமிழ்நாட்டிற் குடிபுகுந்தோர் சிலரே. அவரும் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டிருத்தல் கண்கூடு. அச் சிலரது வழக்க ஒழுக்கங்களையும், வழிபாடு முதலியவைகளையுங் கொண்ட பலரும் தமிழரே யாவர் பழமையில் பற்றுடைய மற்றவர் தமிழரென்பதை விளக்கவேண்டுவதில்லை. இவ்வனைவரும் 'தமிழ்' என்னும் அமிழ்தை நாடோறும் வாழ்வீற் பருகுஞ் சகோதரரே யாவர். இவர்கள் தங்களுக்குள் ஒருமை காட்டுந் தமிழ்மொழியிற் பற்றுக்கொண்டு உழைப்பார்களாயின், தமிழ்நாட்டில் ஒருமைப்பாடு நிகழும் என்பது திண்ணம்.

சமய வேற்றுமை, கடைச் சங்கப் புலவர்கள் காலத்திலேயே தலைகாட்டிற்று. அன்னார் சமயவழிபாட்டில் பன்மைப்பட்டு நின்றும். தமிழை வளர்ப்பதில் ஒருமைப்பட்டு நின்றமையான், இவ்வொருமை அப்பன்மையை விழுங்கி, நாட்டை ஓம்பியதை ஆராய்ந்து, உண்மை கண்டு ஒருமைப்படுவோமாக ஆதலால், நம்மை ஒருமைப் படுத்த வல்ல தமிழை வளர்க்க முயல்வோமாக.

# 2. தமிழ் மொழி

[வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்]

(பரிதிமாற் கலைஞன்)

தொன்று தொட்டுத் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளுடைய தென்று பலருங் கூறுகின்றனர். அம் மூவகைப் பாகுபாடுகளின் இயல்புகளைக் குறித்துச் சிறிது ஆராய்வாம்.

இயற்றமிழ்மென்பது தமிழர் யாவர்மாட்டும் பொதுமையின் இருவகை வழக்கினும் இயங்கு கின்ற வசனமுஞ் செய்யுளுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண் இலக்கியங்களும் இலக்கணங்களுமாகிய யாவுமடங்கு மென்க. எனவே, இயற்றமிழ் 'செந்தமிழ் கொடுந்தமிழ்' என்ற வகைப் படுதலு மொக்கும். ஒக்கவே, "செந்தமிழ் வசன நூல்களும் செந்தமிழ்ச் செய்யு ணூல்களும், கொடுந்தமிழ் வசன நூல்களும், கொடுந் தமிழ்ச் செய்யுணூல்களும்" இவ்வியற் றமிழின் கண் அடங்கு மென்பது தானே விளங் கும். தமிழிற் புலவரும் அல்லாரும் ஒத்தியங் காமையான், இப் பிரிவிற்கு இடமுண்டாயிற்று. தமிழ் வழங்கும் நாட்டிற்குள்ளும் இப்பிரிவு ஏற் படுவதாயிற்று.

"செந்தமிழ் நாடே,
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப"

என்ற சூத்திரத்தாற் செந்தமிழ் நாடு இன்ன

தென்பது அறிக. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு குறு நிலங்களும் கொடுந் தமிழ் நாட்டின்பாற் பட்டன.

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்"

என்ற பழைய வெண்பாவினாற் கொடுந்தமிழ் நாடு இன்ன தென்பது அறிக. இனிச் செந்தமிழ் நாட்டைச் சோணாட்டின்கண் வைத்துச் சூத்திரஞ் செய்தாருமுளர்.

"செந்தமிழ் நாடே,
மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கும்
மையறு சோழ வளநா டென்ப"

என்பதுங் காண்க. இது தமிழர்கண் மீது சைனர்க் குண்டாகிய பொறாமை காரணமாக எழுந்ததே யாம்.

முற்காலத்துச் சங்கச் செய்யுட்களும் அவற்றினுரைகளும், இடைக்காலத்துக் 'கம்ப ராமாயண' மாதிய நூல்களும் அவற்றினுரை களும், இக்காலத்து வெளிப்படுஞ் செய்யுணூல் களுமாகிய யாவையும் இயற்றமிழாம். இவ் வியற்றமிழ் இசைத் தமிழ்க்கும் நாடகத் தமிழ்க் கும் முன்னர்த் தோன்றினமை பற்றி அஃது இவ்விரண்டற்கும் முன்வைக்கப் படுவதாயிற்று. அன்றியும் இயற்றமிழே இவ்விரண்டற்கும்

உயிரென விளங்குவது. இயற்றமிழின்றி இவ்விரண்டுந் தனித்தியங்குவனவல்ல.

இசைத் தமிழென்பது, பண்ணொடு கலந்துந் தாளத்தொடு கூடியுமியங்குஞ் செந்தமிழ்ப் பாட்டுக்களானும் கொடுந் தமிழ்ப் பாட்டுக்களானுமியன்ற இலக்கியங்களும் அவற்றினிலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண், கீர்த்தனங்களும், வரிப்பாட்டுக்களும், சிந்து ஆனந்தக்களிப்பு கும்மி தெம்பாங்கு முதலியனவும் அடங்குமென்க. இயற்றமிழின் கண் வழங்குஞ் சொற்களுஞ் சொற்றொடர்களுமின்றி இசைத் தமிழெங்ஙனம் இயங்க முடியும்? அன்றியும் இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசையெடுத்துத் தாளமறுத்துப் பாடப்படின், அவை இசைத் தமிழின் பாற்படும். இராகத்தொடு மட்டில் இயைத்துப் பாடப்படும் பாடல்கள் இயற்றமிழன்பாற் பட்டனவாக மதிக்கப்படுமேயன்றிப் பிறிதில்லை. தாளமும் உடன் கூடிய வழியே அவை இசைத்தமிழின்பாற் படுமென்க. முற்காலத்து வழங்கிய 'பெருநாரை', 'பெருங்குருகு', 'இசை நுணுக்கம்,' 'தாள வகையோத்து' முதலியனவும், இடைக்காலத்துத் தோன்றிய 'தேவாரம்' முதலியனவும், இக்காலத்து வெளியிடப்பட்டுலாவுகின்ற 'கந்தபுராண கீர்த்தனை,' 'பெரியபுராண கீர்த்தனை,' 'சங்கீத சந்திரிகை' முதலியனவுமாகிய யாவையும் இசைத் தமிழாம். இவ்விசைத்தமிழ், நாடகத் தமிழ்க்கு முன்னர்த் தோன்றினமைபற்றி முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும் இவ்விசைத் தமிழே நாடகத் தமிழிற்குச் சிறப்பும் விளக்கமும் தந்து நிற்பதாம். இசைத் தமிழில்வழி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை; ஆடையற்ற நங்கை வெளிப்படாதவாறு போல, இசையற்ற நாடகத் தமிழும் வெளிப்படுதலின்றி உள்ளடங்கியே யிருத்தல்

வேண்டும். எனவே நாடகத் தமிழிற்கு இயற்றமிழும் இசைத் தமிழும் இன்றியமையாச் சிறப்பினவாம். ஏன்? இயற்றமிழும் இசைத் தமிழுங் கூடிய வழியே நாடகத் தமிழ் பிறக்குமென்று கூறுதலே அமைவுடைத்தாம்.

"அன்றியும் நாமுணர்ந்த பிறமொழிச் சரித்திரங்களிலும் உற்றுநோக்குழி, இயற்றொடர் நிலைச் செய்யுட்களும் இசைத்தொடர் நிலைச் செய்யுட்களுமாகிய பாமுறைகளின் தொடக்கங்கள் ஒருங்கேனுந் தனித்தேனும் நாடகக்கலையின் தொடக்கங்களுக்கு முன்னரே யிருந்துளவென்பது மலையிலக்கே. இவ்விரண்டுஞ் சேர்ந்துழியே நாடகமானது நாகரிகமுள்ள நாடுகளனைத்திலுங் கலைகளு ளொன்றெனக் கருதத்தக்கவாறு தோன்றி வளர்கின்றது. இம்முறைக் கிணங்கியே நந்தம் தமிழ்மொழியின் கண்ணும் இயற்றமிழும் இசைத் தமிழும் நாடகத்தமிழிற்கு முற்படுவன வாயின. அன்றியும் மேற்கூறியவாற்றான் இயற்றமிழும் இசைத் தமிழுங் கூடியவழியே நாடகத்தமிழ் பிறந்த தென்பதூஉம் பெற்றாம். இதுபற்றியன்றே தமிழ்மொழியை இயலிசை நாடகமென முப்பகுதியாக்கி முறைப்படுத் தோதியது மென்க" என்ற நாட்கவியலுடையார் கூற்றையும் உற்று நோக்குக.

இனி இடைக்காலத் தொடக்கத்தில் தோன்றிய இசைத் தமிழிலக்கிய நூலாகிய மூவர் 'தேவார'ங்களும் தமிழிற்கேயுரிய பண்ணுந் திறமும் பயின்றனவாகி யொளிர்கின்றன. அத் தேவாரங்களுக்குப் பின்ன ரேற்பட்ட இசைத் தமிழிலக்கிய நூல்களில் வடமொழி யிராக வமைப்புந் தாளவமைப்புங் காணப்படுகின்றன. அதன்மேல் இன்றை நாள்களிலுலவுறும் இலக்கிய

மும் இலக்கணமுமாகிய இசைத்தமிழ் நூல்களெல்லாம் 'மேளகர்த்தா' என்னும் வடநூலைத் தழுவியே அமைக்கப்பட்டிருக்கின்றன. சிற்சில நூல்கள் நாட்டியத்திற்குரிய வடமொழிப் பரத தாளங்களினும் ஏற்பட்டிருக்கின்றன. இசைத் தமிழின்கண் ஏற்பட்ட வடமொழிக் கலப்பு இவ்வளவுதான்.

பழைய இசைத்தமிழ் நூல்களுட் பெரும்பாலன இறந்துவிட்டன. இரண்டொன்று மட்டில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவைதாமுஞ் சின்னாட்களில் வெளியிடப்படாவிடின் அழிந்து படினும் படும். இவ்வாறு இசைத்தமிழ் நூல்கட்குக் குறைவு நேரக் காரணம் யாது? இடைக் காலத்திலிருந்த மக்களுக்குள் ஒழுக்கச் சீர்திருத்தஞ் செய்யப் புகுந்த போலி யாரியர் சில்லோரால் விளைந்த கேடாமிது. இவ்வுலக வாழ்க்கைக்கு அறம் பொருளின்பமென்ற மூன்றுஞ் சிறந்தனவாமென்னு முண்மையை நன்குணராது, 'அறமே யாவரும் பின்பற்றுதற்குரியது, மற்று இன்பம் கைவிடுதற்குரியது' என்று எண்ணி, இசையினால் இன்பம் மிகுதலின் அதனையுங் கடிய வேண்டுமென்று புகுந்து, ஆரியருஞ் சைனரும் ஒருங்கு சேர்ந்து இசைத்தமிழைப் பெரிதும் அலைத்துத் தொலைக்க முயன்றனர். [இசை நாடகங் காமத்தை விளைக்குமென்றுரைத்தார் உரையாசிரியர்களுள் தலைநின்ற நச்சினார்க்கினியரும்.] அம்முயற்சிகளில் அநேக நூல்கள், அந்தோ! அழிந்து போயின. இதுபோழ்து எஞ்சியிருப்பன மிகச் சிலவே. இவற்றை இறைவன் பாதுகாத்தருள்க. மேற்கூறிய மருட்கை யுணர்ச்சி இக்காலத்தினும் பலரிடங் குடி கொண்டிருகின்றது, இஃதென்னே!

நாடகத் தமிழென்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசமில்லாத வேலைக்காரர்

களுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும், நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப் பட்டது; அது கேட்போர்க்குங் காண்போர்க்கும் இன்பம் பயவாவிடின், சாமானிய சனங்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின் அஃது இன்பச் சுவையோ டியல்வதாயிற்று. உலகத்தினியல்பினை உள்ளதை யுள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத் தமிழேயன்றி வேறில்லை. இயற்றமிழும் இசைத் தமிழுஞ் சேர்ந்தவழியே நாடகத்தமிழ் பிறந்ததெனினும் நாடகத் தமிழிற்கு வேறு தனிப் பெருஞ் சிறப்புளது. முன்னையன இரண்டும் கேள்வியின்பம் மட்டிலே பயப்பனவாய் நிற் கின்றன. இவ்விரண்டனடியாகப் பிறந்த நாடகத் தமிழோ கேள்வியின்பம் பயப்பதேயன்றிக் காட்சி யின்பமும் உடன்பயக்கின்றது. இச்சிறப்புப் பற்றியே பிற நாடுகளிலுள்ள பிறமொழிப் புலவர் கள் நாடகங்களை மிக்க மேன்மையுடையனவாக மதிக்கின்றனர்.

அத்துணைப் பெருமைவாய்ந்த நாடகத் தமிழின் தோற்றமென்னை? "தமிழ் நாடகம் முதலிலுண்டானது மத உணர்ச்சிக்காகவே யென் பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல்பாடல்களிரண்டையுஞ் சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. சில காலத் தின் பின்னர்க் கதை நடையான மனப்பாடங்களும் உடன்கூடின; அதன்மேல் முதலிற் பாடலாயுள்ள உரையாடல்களும் பின்னர் வசனமாயுள்ள உரை யாடல்களும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. பிற் பாடு நாடகத் தமிழ் 'வேத்தியல், பொதுவியல்' என்ற இருபிரிவினதாகி அரசர்களானும் ஏனையோ ரானும் ஆதரித்து வளர்க்கப்பட்டது. கி. மு. மூன்று நூற்றாண்டினுதல் அல்லாக்கல் அதனினுஞ்

சற்று முற்காலத்திஞுதல் நாடகத்தமிழ் உயர் நிலையுற்றிருந்திருத்தல் வேண்டும். நாமுணர்ந்த பழமையான நாடகத்தமிழ் நூல்கள் அனைத்தும் அக்காலத்தே நின்று நிலவின வாதலினென்க. ஆகவே அது குற்றங்குறைவு இல்லாது உண்டான தொரு தொழிலென்றே முதலில் மதிக்கப்பட்டது" என்று 'நாடகவியல்'லின் முகவுரைக்கட் கூறிய கூற்றையுங்காண்க.

இவ்வாறு தோன்றிவளர்ந்த நாடகத் தமிழ் வீழ் நிலையை யடையப் புகுந்தது. அதற்குற்ற காரணம் யாது? ஒழுக்க நிலை வகுக்கப் புகுந்த ஆரியருஞ் சைனரும் நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகுகின்ற தென்ற போலிக் கொள்கை யுடையராய்த் தமது நூல்களிற் கடியப் படுவனவற்றுள் நாடகத்தையுஞ் சேர்த்துக் கூறினர். அக்காலத்திருந்த அரசர்களுக்கும் இதனை அறிவித்து நாடகத் தமிழைத் தலையெழ வொட்டாது அடக்கிவந்தனர். ஒளவையாருந் திருவள்ளுவரும் ஒருங்கே புகழ்ந்த இல்லற வாழ்க்கையையே தீவினையச்சத்தின்பாற் படுத்துக் கூறுஞ் சைனர்கள் நாடகத்தமிழைக் கடிந்தது ஓராச்சரிய மன்று. இவ்வளவு கட்டுப்பாட்டுக் கிடையில் நாடகத்தமிழ் எவ்வாறு தலையெடுத்து ஓங்கப்போகின்றது? ஆதலின் நாளாவட்டத்தில் அது சிறிது சிறிதாக வீழ்ந்து கொண்டே வாராநின்றது. அதன்மேல் இயற்றமிழ்க் காப்பியங்கள் நாடெங்கும் மலிந்து சிறந்து நாடகத்தமிழை வளரவொட்டாது தடுப்பனவாயின.

இவ்வாறு நாடகத்தமிழ்க்கு நாற்புறத்திலுந் தடைகள் அமைக்கப்பட்டபின் அஃது அழிநிலை யடையத் தலைப்பட்டது. பண்டிதராயினுர் கடிந்து நாடகத் தமிழைக் கை விடவே, அது

பாமரர் கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தளவிலே நிற்கின்றது. அக்காலத்துச் சங்கப் புலவர்கள் செய்த 'பரதம்,' 'அகத்தியம்,' 'முறுவல்,' 'சயந்தம்,' 'குணநூல்,' 'செயிற்றியம்,' 'மதிவாணர் நாடகத் தமிழ் நூல்,' 'கூத்த நூல்,' என்ற நாடகத் தமிழ் நூல்களெல்லாம் யாண்டுப் போயொளித்தன? 'சிலப்பதிகாரம்' என்னும் நாடகக் காப்பியம் மட்டிலே தப்பித்தவறி வெளியேறி விட்டது. அதனை வெளிப்படுத்திய **பண்டித சிகாமணி சாமிநாதையர்க்குத்** தமிழுலகஞ் செய்யக் கடவ கைம்மாறென்னே!

இனிப் பரதநாட்டிய நூல் காமக் கணிகையர் வயப்பட்டுத் தாழ்வடைந்து நிற்கின்றது. அதனையும் அறவே வொழிக்கப் புகுந்து முழங்குகின்றனர் சிலர். எனினும் கி. பி. பதினேழா நூற்றாண்டினிறுதி தொட்டுக் கூத்து நூல்கள் சில வேரற்று வீழ்ந்த நாடகத் தமிழினின்றும் கிளைப்பனவாயின. இடையிடையே கவிக்கூற்று மேவி, இழிசினர் நடக்குமியல்பினவாகிக் கூத்தும் பாட்டுங்கொண்டு நடப்பனவெல்லாம் கூத்து நூல்களாம். சீர்காழி அருணாசலக் கவிராயர் செய்த 'இராம நாடக'மும், குமரகுருபர சுவாமிகள் செய்த 'மீனாட்சியம்மை' குறமும், திரிகூடராசப்பக் கவிராயர் செய்த 'குற்றாலக் குறவஞ்சி'யும் இக்கூத்து நூலின்பாற் படுவனவாம். 'முக்கூடற் பள்ளு' முதலியனவுங் கூத்து நூல்களேயாம். இவையெல்லாம் இயற்றமிழ்ப் புலமை சான்ற பாவலர் இயற்றியனவாம், 'சுத்தானந்தப் பிரகாசம்' என்றதோர் பரத நூல் இடைக்காலத்தின் தொடக்கத்திலேற்பட்டு வெளிப்படாமலிருக்கின்றது. பின்னர் கி. பி. பதினெட்டா நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த அரபத்த நாவலர் என்பார்

'பரத சாஸ்திரம்' என்றதோர் நூல் செய்துள்ளார்.

நாடகசாலையை உலகத்தின் பிரதிபிம்பமென்றெண்ணி ஆங்கு நடித்துக் காட்டப்படுவனவற்றுள் தமக்கு வேண்டிய நற்பகுதிகளை மட்டிலேற்றுப் போவதே நன் மக்களியல்பு. உழைத்த உள்ளத்திற்கு இன்பந் தந்து ஊக்கம் விளைப்பன நாடகங்களே. சிற்சிலர் அறிவு திரிந்து வேறுபட்டாராயின் அஃது அவரது இயற்கைத் தன்மைகளுளொன்றுமே யன்றி நாடகத்தால் விளைந்த செயற்கைத் தன்மை யன்றும். தவறுள்ளவிடத்திலன்றே திருத்தம் வேண்டும்? புண்ணுள்ள இடத்திலன்றோ சிகிச்சை செய்யப்படும்? மக்கள் சிலர் தமது தீக்குணத்தால், நாடகசாலை சென்றும் நாடகங்கள் படித்தும் கெட்டாராக அதனைக் காகதாலியமாய் நாடகத்தின் தலையிலேற்றி, நாடகத் தமிழே தீதென்று கடிதல் எவ்வாறு ஏற்புடைத்தாகும்? காரணமொரு புறத்திலிருப்ப, அதனைக் கண்டு அகற்ற மாட்டாது மயங்கிக் காரணமல்லாதவற்றைக் காரணமென்று கூறுதல் தருக்க நூற் குற்றமன்றோ?

"நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
விறையே தவறுடை யான்"

என்று 'குறிஞ்சிக்கலி'யிற் கூறியதனை யொக்கும் இவரது செயல்.

இது நிற்க. சென்ற சில்லாண்டுகளாக, நாடகத் தமிழ் அறிவுடையோர் சிலரது உதவி கொண்டு தலையெடுத்து வளரா நின்றது. இதற்கு

வடமொழி நாடகப் பயிற்சியும் ஆங்கில நாடகப் பயிற்சியும் மிகப் பயன் படுவன வாயின. இவ்வாறு புது வழியிற் புனையப்பட்டு வெளிப்படும் நாடகங்கள் இன்னும் அதிகரித்தல் வேண்டும். இவற்றை யொழுங்கு படுத்துதல் கருதி, யாம் 'நாடகவியல்' என்றதோர் இலக்கண நூல் செய்திருக்கின்றனம்.

இனிச் சிலர் 'நாடகம்' என்ற சொல் வடசொல்லாதல் கண்டு, ஆரியரோடு கலந்த பின்னரே தமிழர்களிடத்தில் நாடகத் தமிழ் ஏற்பட்டிருத்தல் வேண்டு மென்கின்றனர். இக்கூற்று வடமொழியில் 'வாய்' என்பதற்குத் தக்க சொல்லில்லாமையால் வடமொழியாளர்க்கு வாயில்லை யென்பது போலும்.

அஃதன்றியும் 'கூத்து' என்ற சொல்லே ஆதியில் தமிழர்கள் வழங்கியது; கூத்துப் பலவற்றுள் நாடகமென்பது கதை தழுவி வருங் கூத்து. எனவே நாடகமென்ற சொல் வழக்கின் முன்னரே, நாடகத் தொழில் வழக்கும் நாடக நூல் வழக்குந் தமிழர் மாட்டுண்டென்பது பெற்றும்.

# 3. தமிழ்க் கலைகள்

[ மகா மகோபாத்தியாய, டாக்டர் சுவாமிநாத ஐயர் ]

கலைகளுக் கெல்லாம் தெய்வமாக விளங்கும் தேவியைக் கலைமகளென்று வழங்குகின்றோம்.

"ஆய கலைக ளறுபத்து நான் கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை —தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்."

என்ற செய்யுளால் கலைகள் அறுபத்து நான்கென் பதனையும் அவற்றைக் கலைமகள் அருளிச் செய்பவ ளென்பதையும் அறியலாம்.

"எண்ணெண் கலையு மிசைந்துடன் போக"

என்ற சிலப்பதிகார அடியால் அறுபத்து நான்கு கலைகளுண்மை பெறப்படும்; அவை அக்கர இலக் கண (அக்ஷர லக்ஷண) முதல் அவித்தைப் பிரயோகம் வரை உள்ளனவாகும். வேறு வகை யாகக் கூறுவதும் உண்டு. அறுபத்து நான்கு கலைகளையன்றி அவற்றைப் பின்பற்றிய கலைகளும் உள்ளன என்பர்.

## வேறுபாடுகள்

அந்தணருக்குரிய கலைகள் இவை, மன்னருக் குரிய கலைகள் இவை, வணிகருக்குரிய கலைகள் இவை, வேளாளருக்குரிய கலைகள் இவை மகளிருக்குரியன இவை, பொது இவை என அவற்றுள் வேறுபாடுண்டு. தமிழிலுள்ள பழைய நூல்களில் தமிழ் நாட்டிலும் பிறநாட்டி

லும் இருந்த கலைகளைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. அத்தகைய கலைகளிற் பலவற்றிற்குரிய நூல்கள் அக்காலத்தில் தமிழில் இருந்தன; இக்காலத்தும் சில உள்ளன.

## இசையும் நாடகமும்

தமிழ் நாட்டுக் கலைகளில் மிகச் சிறப்பாக இருந்து வந்தவை இசையும் நாடகமுமாம். பழைய நூல்களிற் காணப்படுகின்ற பலவகை இசைக் கருவிகளைப்பற்றிய செய்திகள் இக்காலத்தில் எந்த வகையாலும் அறியமுடியாமல் இருக்கின்றன. தோற்கருவி வகைகளில் அளவிறந்தனவும், யாழ் வகைகளிற் பலவும், தாளம் முதலியவற்றில் அவ்வாறே பலவும் இருந்தன வென்று தெரிகின்றது. இசையானது முத்தமிழ்களுள் ஒன்ருகக் கூறப்படுவதிலிருந்தே அக்கலை மிக விரிவுடையதென்று தோற்றுகின்றதன்றோ? இசைச் சங்கமொன்று, பண்டைக்காலத்தில் இருந்ததென்றும், அதில் பல புலவர்கள் இருந்து இசைப் பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்து வந்தார்களென்றும், இசையைப் பற்றிய பல நூல்களை அவர்கள் இயற்றியுள்ளார்களென்றும் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்கள் அறிவிக்கின்றன. பிற்காலத்திலும் அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் சங்கீத வித்துவான்கள் பலர் இருந்து வந்தார்கள்.

நாடகக் கலையையும் தமிழர்கள் நன்கு போற்றி வந்தார்களென்பதை அது முத்தமிழி லொன்ருக வைக்கப்பட்டிருப்பதால் அறியலாகும். நாடகம் பலவகைப் படுதலையும், அதற்கு உரியவர்களுடைய இலக்கணங்களையும், பிறவற்றையும் விரிவாகக் கூறும் நூல்கள் பல முன்பு இருந்தன; இப்

பொழுது அழிந்து விட்டன. சிலப்பதிகாரத்தால் மட்டும் சில செய்திகள் தெரியவருகின்றன.

ஓவியம்

ஓவியக்கலை அல்லது சித்திரசாஸ்திரம் மிக வுயர்ந்த நிலையில் இருந்தது.

"ஓவியச் செந்நூ லுரை நூற் கிடக்கையும்"

என்ற மணிமேகலையடி ஓவிய சம்பந்தமான நூல் இருந்தமையை அறிவிக்கின்றது. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார், ஓவிய நூலென ஒன்றைக்கூறி அதிலிருந்து சில விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றார். ஓவியம் வல்லார் பலர் தமிழ் நாட்டில் நிறைந்திருந்தனர்;

"எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும்"

என்ற மதுரைக் காஞ்சிப் பகுதியால் இது விளங்கும். மாடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன;

"மாடக்குச் சித்திரமும்"

என்பது மாடங்களுக்கு அழகு செய்வது சித்திரமென்ற தமிழ் நாட்டார் கொள்கையைக் காட்டுகின்றது.

"சுடும ணோங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டுநிற் குநரும்" *

என்பதில் மாளிகைகளிற் பலவகை ஓவியங்கள் காண்போர் கண்களைக் கவர்ந்து நின்றமை கூறப்படுதல் காண்க. ஆடைகளிற் சித்திரங்

* மணிமேகலை

களை எழுதும் வழக்கம் பழமையானது: படமென்னும் பெயர் இக்காரணத்தாலேயே வந்தது (படம்-வஸ்திரம்). ஒத்த அன்பினளாகிய தலைவி யொருத்தியைப் பெற முடியாமையால் வருந்தும் தலைவன் தனக்கும் அவளுக்கும் உள்ள அன்பை வெளிப்படுத்த எண்ணிப் பனைமடலாற் செய்த குதிரை யொன்றில் ஏறிவருவா னென்றும் அப்பொழுது தலைவியைப் போன்ற படமொன்றை யெழுதி அதில் வைத்து எடுத்து வருவானென்றும் அகப்பொருள் நூல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் படத்தைக் கண்ட ஊரார் இன்ன மங்கையிடம் இவன் அன்பு பூண்டுள்ளானென்று ஐயமற அறிவாராம். இச் செய்தியால் ஒருவரைப் பார்த்து அவரைப்போலவே சித்திரம் எழுதும் வன்மை அக்காலத்தில் இருந்ததென்று அறிந்து கொள்ளலாம். ஓவியம் எழுதுவோர்கள் முதலில் தாம் கருதியிருக்கும் உருவத்தைக் குறித்துக் கொண்டு பின்பு வர்ணங்களை யமைத்து அதனை அழகுபடுத்துவார்கள். அவ்வாறு முதலில் எழுதப்படுவது புனையா ஓவியம் என்று வழங்கும். நெடுநல்வாடையிலும் மணிமேகலையிலும் புனையா ஓவியம் உவமையாக எடுத்தாளப் பட்டிக்கிறது. திரைச் சீலைகளில் சித்திரங்கள் அமைக்கப் பெற்றிருந்தன; பாயற் கட்டிலைச் சுற்றிக் கட்டப்படும் திரைகளிலும் படுக்கையின்மேல் விரிக்கும் துணிகளிலும் மேற் கட்டியிலும் சித்திரங்கள் எழுதப்பட்டன; நெய்யும் பொழுது ஆடைகளிற் சித்திரங்களை அமைத்து வந்தார்கள்.

## சிற்பம்

சிற்பக்கலையில் வல்லுநர்கள் மண்ணிலும், செம்பு பொன் முதலிய உலோகங்களாலும்,

கல்லாலும், சுண்ணும்பினுலும், மரத்தினுலும், தந்தத்தினுலும் பலவகைப் பாவைகள் முதலிய வற்றை அமைத்தார்கள். மண்ணுற் பாவை அமைப்பவர் மண்ணீட்டாள ரெனப்பட்டனர். தந்ததினுல் தேர் முதலியன அமைக்கப்பட்டன. கல்லில் அமைந்த சிற்பங்களில் தமிழ்நாடு மிகவும் சிறந்ததென்பதை யார்தாம் மறுப்பார்? பிற்காலத்தில் பல்லவர்கள் சோழர்கள் முதலியவர்களுடைய அரசாட்சியில் தமிழ்நாட்டுக் கோயில்கள் சிற்பத்திறன் அமையக் கட்டப்பட்டன. அக்காலத்தில் பல சிற்பிகள் அவ்வரசர்களால் *முற்றூட்டுப் பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய கைவன்மையை இன்றும் வெளிப்படுத்திக் கொண்டு விளங்கும் கோயில்களைக் காணும் பிறநாட்டார் வியப்படைகின்ருர்கள். சோழ நாட்டுச் சிற்பிகள், 'திருவலஞ்சுழிப் பல்கணி, திருவீழிமிழலை வெளவானத்திமண்டபம், ஆவுடையார் கோயிற் கொடுங்கை என்னும் மூன்றைப் போலச் செய்ய இயலா; மற்றவற்றைப் போலச் செய்வோம்' எனவும், கொங்கு நாட்டில், 'தாரமங்கலம், தாடிக்கொம்பென்னும் இரண்டிடங்களிலுள்ள சிற்பங்களைப்போல இயற்ற எங்களால் இயலாது' எனவும் உடன்படிக்கையெழுதிக் கொடுக்கும் வழக்கமுண்டென்னும் கர்ண பரம்பரைச் செய்திகள் அவ்விடங்களில் உள்ள சிற்பத்தின் உயர்வை வெளிப்படுத்துகின்றன.

மரத்தினுலும் உலோகத்தினுலும் பலவகை வண்டிகள் செய்யப் பெற்றன. அவை வையம், பாண்டில், தேர் முதலிய பலவகையானவை. தாமரைமலரைப் போன்ற வண்டிபொன்றின் வருணனை பெருங்கதையிற் காணப்படுகிறது.

* முற்றூட்டு—சர்வமானியம்

## அணிகள்

பொன்னாலும் வெள்ளியினாலும் நவமணிகளாலும் செய்யப் பெற்ற பலவகை அணிகள் அக்காலத்தில் அணியப்பட்டு வந்தன. அவற்றை இயற்றும் நல்ல தேர்ச்சியுடையவர்கள் இருந்தார்கள்; நவமணிகளைப் பற்றிய இலக்கணங்களையும் நன்கு அறிந்திருக்கின்றனர். அவற்றிற்குரிய நூல்கள் பல இருந்தன. சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலுள்ள மேற் கோட் சூத்திரங்களிலும் நவமணிகளைப் பற்றிய வரலாறுகள் பல கூறப்படுகின்றன. கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணங்களிலும், பழைய சாஸனங்களிலும் நவமணிகளுக்குரிய குணங்களும் குற்றங்களும் சொல்லப்படுகின்றன.

## நெய்தல்

நெய்யுந் தொழிலிலும் தமிழ் நாட்டார் சிறப்பெய்தியிருந்தனர். பருத்தியினாலும், எலி மயிர் ஆட்டு மயிர் முதலியவற்றாலும், பட்டினாலும் ஆடைகள் நெய்யப்பெற்று வந்தன. கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரும் பிறரும் பஞ்சினை நூற்று வந்தனர்.

"நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற் கைவன் மகடூஉ உத்தனது கைமாண்பினால் ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது"

என்ற இறையனாரகப் பொருளுரையும் மகளிர் நூற்று வந்த வழக்கத்தை விளக்குகின்றது.

## ஆடைகள்

ஆடைகளிற் பலவகை உண்டு. நீல நிறம் முதலிய பலநிறக் கச்சுக்களும், ஆடைகளும், பூத்தொழில் அமைந்த கலிங்கங்களும், முடிச்சுக்களை

யும் மணிகளையும் விளிம்பிலேயுடைய பட்டுடைகளும் இருந்தன.

பாம்பின் சட்டையையும் மூங்கிலில் உரித்த தோலையும் பாலாவியையும் புகையையும் ஆடைகளுக்கு உவமையாக நல்லிசைப் புலவர்கள் கூறியிருப்பதனால் மிக மெல்லிய ஆடைகளைத் தமிழ் நாட்டார் அணிந்து வந்தனரென்பது வெளியாகின்றது.

"இழைமருங் கறியா நுழை நூற்கலிங்கம்" 1
"இழையணி வாரா வொண்பூங் கலிங்கம்" 2

என்பன ஆடைகளின் நுண்மையை வெளிப்படுத்துகின்றமை காண்க.

"பொருந்து பூம்பொய்கைப் போர்வையைப் போர்த்து" 3

என்பதில் பொய்கை வடிவு எழுதின படாமொன்று சொல்லப்படுகின்றது.

## மாலை தொடுத்தல்

**மாலைகளைத் தொடுப்பதிற்** பலவகையான விசித்திர முறைகளைத் தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன. "மலராய்ந்து தொடுத்தல்" என்று **சீத்தலைச் சாத்தனாரும்,** "கடிமலர்ச் சிப்பம்" என்று **கொங்கு வேளிரும்** அத்தொழிலைக் குறிக்கின்றனர். **இண்டை, கண்ணி,** தார் முதலிய பல வகைகள் மாலைகளில் உண்டு.

## மடைநூல்

உணவு **சமைக்கும் முறைகளைக்** கூறும் நூல் **'மடைநூல்'** எனப்படும். அதைப்பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, மணிமேகலை, பெருங்கதை முதலிய **நூல்களிற்** கூறப்படுகின்

---

1. மலைபடுகடாம் 2. புறநானூறு 3. சீவகசிந்தாமணி

றன. பலவகை உணவு வகைகள் தமிழ் நூல்களிற் காணப்படுகின்றன. காலத்திற்கு ஏற்ற உணவுகளையும் சாதி, நிலம் முதலியவற்றிற்கேற்ற உணவுகளையும் அந் நூல்களால் அறிந்துகொள்ளலாம். சீவகசிந்தாமணியில் முத்தியிலம்பகத்தில் இருதுநுகர் வென்னும் பகுதியில் சில பெரும்பொழுதிற்குரிய உணவு வகைகள் கூறப்பட்டுள்ளன.

## சோதிடம் முதலியன

சோதிடம், நிமித்தம் பார்த்தல் முதலிய கலைகள் தமிழில் இருந்தன. அக் கலைத் திறனுடையார் காலக் கணிதரென்றும் கணிகளென்றும் கூறப்படுவார். கணிதத்திற் சிறந்த சிலர் சங்கத்தேயிருந்த நல்லிசைச் சான்றோர்களுள்ளும் காணப்படுகின்றனர். அரசன் போர்புரியச் செல்லும்பொழுது நற்சொல், காக்கை கரைதல் முதலியவற்றால் நிமித்தம் பார்ப்பது வழக்கம். அகத்திணையுள்ளும் பலவகை நிமித்தங்கள் சொல்லப்படுகின்றன. விரிச்சி (நற்சொல்), தோள் கண் முதலியன துடித்தல், காக்கை கரைதல், பல்லி ஒலித்தல் முதலிய நிமித்தங்கள் உண்டு. கட்டுவிச்சி யென்னும் வெறியாடுபவளாற்* கட்டுப் பார்த்தலும் வெறியாடுபவனாகிய வேலனாற் கழங்கு பார்த்தலுமாகிய நிமித்தங்கள் தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ளன.

## வான சாஸ்திரம்

வான சாஸ்திரப் பயிற்சியும் அக்காலத்தே இருந்தது. சந்திரன் பரிவேடங் கொள்ளுங்

* முறத்தில் நெல்லை வைத்து எண்ணி நிமித்தம் பார்த்தல்.

காலத்தில் குறிஞ்சி நிலத்தார் மணம் செய்வார்கள். நெடுநல்வாடையில் கட்டிலுக்கு மேலே கட்டியிருக்கும் மேற்கட்டியில் பன்னிரண்டு ராசிகளும் எழுதப்பட் டிருந்தன வென்னும் செய்தி உள்ளது; நட்சத்திரங்களின் பெயர்களிற் சில சங்க நூல்களில் வந்துள்ளன. அரசர் முதலியவர்கள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டாடும் வழக்கம் முன்பே இருந்து வந்தது. கோச் சேரமான் யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை இறக்குங் காலத்தைக் கூடலூர் கிழார் ஏழு நாட்களுக்கு முன் ஒரு விண் மீன் விழுந்தமையால் அறிந்தனர்; அவன் துஞ்சிய காலத்து, " இதனை முன்னரே அறிந்தேன் " என்று வருந்தி ஒரு செய்யுள் கூறியுள்ளனர். அதில் மீன் விழுந்த நாளில் இருந்த நட்சத்திரங்களின் நிலை காணப்படுகிறது. இவற்றால் நட்சத்திரங்களைப் பற்றிய அறிவு இருந்தமை உணரப்படும்.

## மருத்துவம்

**மருத்துவ** நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப் புலவர்கள் பலரும் இருந்ததைப் பழைய நூல்களால் அறியலாம். மூலிகைகளைப் பற்றிய ஆராய்ச்சி விரிவுற்றிருந்தது. தமிழ் வைத்தியம் சித்த வைத்திய மென்னும் பெயரால் இக் காலத்து வழங்கப்படுகிறது. இப்பொழுதுள்ள நூல்கள் பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டினர் பயின்று வந்த முறைகளை அறிந்த பிற்காலத்தார் எழுதியவை. அவை பெருஞ் சிறப்புடையன. ஆயுர்வேதத்தைப் பற்றிய செய்தி சிலப்பதிகாரத்தில் உள்ளது.

## நகரமைப்பு

**நகரமைப்பு**, வீடுகட்டுதல் முதலிய வற்றைப் பற்றிய சிறந்த அறிவும் தமிழ்நாட்டாருக்கு

இருந்து வந்தது. நகரங்களில் உள்ள வீதிகள் ஒழுங்காக அமைந்திருந்தன. பல படைகள் வகைவகையாக இருந்தன. சந்தி, சதுக்கம், அம்பலம், மன்றம், பொதியில் முதலிய இடங்கள் இருந்தன. அசுத்த நீரை ஊருக்கு வெளியே போக்குதற்குரிய கரந்து படை அல்லது கரந்துறை (underground drainage) என்னும் ஜலதாரைகள் வீதியின் நடுவிற் கீழே இருந்தன. கற்களால் அவை மூடப்பட்டிருக்கும். வேண்டின் நீரை நிரப்பியும், வேண்டாவிடிற் போக்கியும் விடுதற்குரிய வாவிகள் இருந்தன. அவை எந்திர வாவி யெனவும், இலவந்திகை யெனவும் கூறப்படும். மக்கள் மாலைநேரங்களிலும் வேனிற்காலத்திலும் புகுந்து மகிழ்தற்குரிய பல சோலைகள் இருந்தன; செய் குன்றங்களும் உண்டு. அரசர் முதலியவர்களுக்குத் தனித்தனியே வீதிகள் இருந்தன.

பலவகைத் தொழில் செய்வார்க்குரிய வீதிகள் முறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் மதுரை, காவிரிப் பூம்பட்டினம், வஞ்சிமாநகர், காஞ்சி முதலிய நகர அமைப்புக்களைப் பற்றிச் சொல்லும் பகுதிகளால் அக்காலத்தில் நகரங்கள் அமைக்கப் பட்ட முறைகள், இவற்றிலிருந்த தெருக்கள், இடங்கள் முதலியவற்றைப் பற்றிய பல செய்திகளை அறியலாம். அப்பகுதிகள் படிக்கப் படிக்க இன்பத்தை அளிப்பனவாகும்.

மதுரைநகரத்திலும் காவிரிப் பூம்பட்டினத்திலும் நாளங்காடி, அல்லங்காடி யென்ற இரு

வகைக் கடைத்தெருக்கள் இருந்தன. நாளங்காடி காலைக்கடை; அல்லங்காடி மாலைக்கடை. அவ்விரு நகரங்களிலும் பல வகைக் கோயில்கள் இருந்தன. காவிரிப்பூம் பட்டினத்திற் பண்டசாலைகள் பல உண்டு.

அரசர்கள் வாழும் நகரங்களில் அகழியும் மதிலும் இருந்தன. மதிலின்மேற் பகைவர்களைத் தடுப்பதற்குப் பலவகைப் பொறிகள் அமைக்கப் பெற்றிருந்தன. கோட்டை வாயில்களும் ஊருக்குள் பிறரறியாதவாறு வெளியிலிருந்து புகுதற்குரிய நுழை வழிகளும் உண்டு. காஞ்சி நகர் தாமரை மலர்போல அமைந்துள்ள தென்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவமி சழகத்
தரும்பொகுட் டனையதே யண்ணல் கோயில்" *

என்பதில் மதுரையும் அவ்வாறுகூறப்பட்டுள்ளது. பெருங்கதையில் இராசகிரிய மென்னும் நகரத்தைத் தாமரை மலராகவும் பல வகைத் தெருக்களைப் புறவிதழ், புல்லிதழ், அகவிதழ் முதலியவைகளாகவும், அரசன் அரண்மனையை நடுவிலே யமைந்த கர்ணிகையாகவும் ஆசிரியர் உருவகம் செய்துள்ளார். இதனால் நகரங்கள் அழகும் ஒழுங்கும் சிறந்த வீதிகளால் அமைந்திருந்தன வென்பது உணரப்படுகின்றதன்றோ?

## கட்டிடச் சிற்பம்

வீடுகளை அமைப்பதில் சில முறைகள் அக்காலத்தில் உண்டு.

---

* பரிபாடல்

"பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து" *

என்பதனால் அவரவர்களுக்கேற்றபடி மனைகள் அமைக்கும் வழக்கம் இருந்ததென்பதை அறிந்து கொள்ளலாம். வீடுகளைக் கட்டுவதற்காக அஸ்திவாரம் போடும் காலம் நெடுநல்வாடையிற் காணப்படுகின்றது. கோபுரங்களும், வாயின்மாடங்களும், நிலா முற்றங்களும், தெற்றிகளும், அறைகளும் அமைக்கப்பட்டன. வீடுகளின் நிலைகளிற் சித்திர வேலைகள் செய்யப்பட்டிருந்தன. கஜலக்ஷ்மியின் திருவுருவம் நிலைக்கு மேலே மத்தியில் முற் காலத்தும் அமைக்கப்பட்டமையை நெடுநல்வாடை முதலியவற்றால் அறியலாம். மாடங்களாகவே சில வீடுகள் கட்டப்பட்டிருந்தன. வீட்டின் சுவர்களிற் பலவகைச் சாளரங்களை வைப்பதுண்டு; 'காலதர்' என்று அவை கூறப்படும்; காற்று போகும் வழி யென்பது பொருள். இதனால் உடல் நலமும் கவனிக்கப் பெற்று வந்தமை தெரிகின்றது.

கூப நூல்

கிணறுகளை வெட்டும் முறைகளை யறிவிக்கும் கூபநூல் ஒன்று உண்டு. இன்ன இடத்தில் வெட்டினால் நல்ல நீர் இருக்கு மென்பதை அதனால் எளிதில் அறியலாம். உதயணன் இந்நூலில் தேர்ச்சியுடையவனாக விருந்தா னென்ற செய்தி பெருங்கதையில் காணப்படும்.

---

* நெடுநல்வாடை.

## காவல் நூலும் கரவட நூலும்

காவல் காத்தற்குரிய காவல்நூல், கரவட்நூல் முதலிய பல நூல்களின் பெயர்கள் தெரிய வருகின்றன. நூலேணியை அரையிற் சுற்றியவர்களாய்க் கறுப்புடையை அணிந்து கொண்டு கள்வர்கள் பதுங்கி வருவார்களென்றும், அவர்களை ஒற்றி யறிந்து காவலர்கள் பிடிப்பார் களென்றும், அக்காவலர்கள் காவல்நூல், கரவடநூல் என்னும் இரண்டிலும் வல்லவர்களாக இருந்தார்களென்றும் மதுரைக் காஞ்சியும் அதன் உரையும் அறிவிக்கின்றன. தக்கயாகப் பரணி உரையாசிரியர்,

'உடன்கள்ளரும் ஒற்றிக் கொடுப்போரும் பெருநிலை நிற்போரும் கரவட சாத்திரமும்' வேண்டும்.

என்று ஓர் இடத்திற் களவுக்குரிய உபகரணங்கள் சிலவற்றைத் தெரிவிக்கின்றார்.

## போர்க்கலை

போருக்குரிய கலை தமிழ்நாட்டில் தனி இலக்கணத்தோடு இருந்தது. தொல்காப்பியம் புறத்திணையியலிலும் பன்னிரு படலத்திலும் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களிலும் கூறப்பட்ட புறத்திணைத் துறைகளிற் பெரும்பாலன போரையும் அதனைச் சார்ந்தவற்றையும் பற்றிய செய்திகளைக் கூறுவனவாம். பகைவர்களுடைய நாட்டிலுள்ள பசுக்கள் மகளிர் முதலியோருக்குப் போரினால் ஏதும் வருமென்று அஞ்சி, "யாம் போர் செய்யப் போகிறோம்; மகளிர் முதலியோர் இந்நாட்டை நீங்கிக் காவலுடைய நாட்டிற்குச் சென்று விடுங்கள்" என்று போர்புரியச் செல்வோர் பறை யறைவிப்பார். தாமே செல்ல ஆற்றலில்லாத பசுக்களை அப்பகைவரது நாட்டிலிருந்து

தம் நாட்டிற்குக் கொண்டுவந்து விடுவார்கள். அது முதல் போர் தொடங்கப்படும்.

நிரைகவர்தல், போர் செய்யப் புறப்படுதல், மதிலை வளைத்தல், போர் செய்தல், வெற்றி யுறுதல் என்று போரில் பல பெரும் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை வெட்சி முதலிய திணைகளாக நூல்கள் வழங்குகின்றன. அவ்வத்திணைக்குரிய மலர்களைச் சூடிக்கொண்டு போர்புரிதல் வழக்கம். ஒவ்வோர் அரசருக்கும் தனித்தனி அடையாளப் பூக்கள் உண்டு. போர்புரிகையில் அவற்றை வீரர்கள் அணிந்து கொள்வதால் அவர்களை இன்னாருடைய படையைச் சேர்ந்தவர்களென்று எளிதில் தெரிந்துகொள்வார்கள். அத்தகைய பூக்களைப் பொன்னாற் செய்வித்து அணிந்து கொள்வதும் உண்டு. புறத்திணைகளுள் ஒவ்வொன்றிலும் பல துறைகள் உண்டு. தோணிகளில் ஏறி அகழியிற் போர் புரிதலும், மதில் மீதேறிப் போர் புரிதலும் ஆகிய பலவகைப் போர்கள் உள்ளன. வீரர்களுக்குள் படைத்தலைவர்கள் முதலிய பல வேறுபாடுகள் உண்டு. சேனாதிபதிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. அவற்றுள் ஏனாதி என்பது ஒன்று. அப்பட்டத்துக்குரிய மோதிரம் ஏனாதி மோதிரமென்று வழங்கப்பெறும். வீரர்களுக்குரிய பல ஆயுதங்களின் பெயர்களை நூல்களிற் காணலாம். வேல், வாள், அம்பு, கிடுகு என்பவற்றிற் பலவகைகள் உண்டு.

## கப்பற்றொழில்

தமிழ் நாட்டார் கப்பல்களைச் செய்து அவற்றைப் பலவகையிற் பயன்படுத்திக் கொண்டனர். காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் உள்ள

பல பண்டசாலைகளில் பல நாடுகளிலிருந்து வந்த பண்டங்கள் இருந்தன வென்று பட்டினப்பாலை தெரிவிக்கின்றது. பிற நாட்டிலிருந்து கப்பல் களிலும் பல பண்டங்கள் வந்து குவிந்தன.

> "வாலுளைப் புரவியோடு வடவளந் தரூஉம்
> நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை"

என்ற பெரும்பாணாற்றுப்படை யடிகளால் குதிரைகள் முதலிய வடநாட்டுப் பொருள்கள் தமிழ்நாட்டுக்கு நாவாய்களில் வந்தமை தெரியவரும்.

## கட்டுரை வகை

'கட்டுரை வகை' என்ற ஒரு கலையின் பெயர் மணிமேகலையிற் கூறப்படுகின்றது. தொடுத்துக் கூறும் சொல்வன்மையே அது பெருங்கதை யாசிரியர் 'வாக்கின் விகற்பம்' என அதனைக் குறிப்பார். இன்னாரிடம் இன்னபடி பேசவேண்டு மென்பதும், இன்ன பொருளை இவ்வாறு அமைத்துப் பேசவேண்டு மென்பது மாகிய பல வரை யறைகளை இலக்கியங்களை நுணுகி ஆராய்வதனால் அறியலாம். அரசர் முதலியவர்களிடத்தில் ஒரு துயரச் செய்தியையோ, அறிவுரையையோ கூறப் புகுங் காலத்து அவர்களை வாழ்த்தி அவர்களு டைய பெருமையைச் சொல்லிப் பாராட்டிய பின்னரே அவற்றைச் சொல்லுதல் புலவர்கள் வழக்கம். வாழ்த்தின் வகைகளுக்குரிய இலக்கணங் கள் சில உண்டு.

## அளவை நூல் முதலியன

அளவை நூல், எண்ணூல், கணுநூல். கோழி நூல், குதிரை நூல், யானை நூல், புதையல் நூல். யோக நூல் முதலிய நூல் வகைகளும், கரந்துறை

கணக்கு, கோலங் கோடல் முதலிய வேறு பல கலைகளும் இருந்தன.

தங்களுடைய கருத்துக்களைப் பிறருக்கு அறிவிப்பதற்குரிய பல வழிகள் தெரியவருகின்றன. கோவலனுக்கு மாதவி தாழை மடலில் செம்பஞ்சு குழம்பிற்றோய்த்த பித்திகை யரும்பினால் ஒரு திருமுகம் எழுதி அனுப்பினாளென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. வாசவதத்தையின் வண்ணமகளாக இருந்த மானனீகை யென்பவளும் உதயணனும் தத்தம் உள்ளக்கருத்தை வாசவதத்தையின் முகத்தில் யவனமொழியில் ஒருவருக்கொருவர் எழுதி விடுத்த சித்திர வெழுத்துக்களால் அறிந்துகொண்டார்களென்ற ஒரு செய்தி பெருங் கதையில் காணப்படுகிறது. அந்நூலில் இவ் வரலாற்றைக் கூறும் பகுதி முகவெழுத்துக் காதை யென்றே பெயர் பெறும்,

அரண்மனையில் இருந்த நாகமாலை யென்பவள் அங்கே நடந்த நிகழ்ச்சிகளை மந்தணமாகச் சீவகனுக்கு அறிவித்து வந்தாள். அவள் ஒரு குவளை மலருக்குள் ஒரு திருமுகம் வைத்து அனுப்பினா ளென்றும், அக்குவளையின் காம்பே அத்திருமுக வோலையின் சலாகையாக அமைந்திருந்த தென்றும், அவ்வோலை அகவிதழுக்குள் பொருத்தப் பெற்றிருந்த தென்றும், அதனுள் எழுதப் பட்டவை துகிலிகைக் கணக்காலெழுதப் பட்டவை யென்றும், அதனை அதற்கு அமைந்த முறைப்படி சீவகன் பிரித்துக் காப்பிற் சுற்றி வாசித்தறிந்தானென்றும் சீவக சிந்தாமணியால் அறியலாம்.

இவ்வாறு பலவகைக் கலைகளும் அவற்றிற்குரிய நூல்களும் தமிழ்நாட்டில் மலிந்திருந்தன.

அவற்றில் வல்லாரும் பலர் இருந்தனர். பிற நாட்டுக் கலைவல்லார் இந்நாட்டில் வந்து தம் ஆற்றலைப் புலப்படுத்தி வந்தனர்.

> "மகத வினைஞரு மாராட்டக் கம்மரும்
> அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
> தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி" *

வாழ்ந்து வந்தனர். பிற நாட்டாரிடமிருந்து கற்றவற்றையன்றித் தமிழ் நாட்டாரே அறிந்து பயின்ற கலைகளும் நூல்களும் பல உண்டு.

## செய்யவேண்டுவன

இக்காலத்தில் மேனாட்டாருடைய உதவியினாற் பல புதுக்கலைகள் உலகில் உலவுகின்றன. அவற்றிற்குரிய நூல்கள் பல ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ளன. அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வருதல் வேண்டும். பண்டைக் காலத்தினர் பிறமொழியிலுள்ள கலைநூல்களை மொழி பெயர்த்துக் கொண்டது போல இக் காலத்துக்கேற்ற நூல்களையும் பிறமொழிகளி லிருந்து அறிஞர்கள் பெயர்த் தமைத்தல் முறையேயாகும். நம் நாட்டிற் சிறந்தோங்கி யிருந்த சிற்பம் முதலிய கலைகளின் திறத்திலும் நம்முடைய முயற்சி சிறக்க வேண்டும். ஏட்டுச்சுவடிகளில் உள்ள கலை நூல்களை ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்த வேண்டும். நான் ஏடுதேடச் செல்லும் பொழுது முதன்முறை கண்ட பலவகைக் கலை நூல்களிற் பெரும்பாலன மறுமுறை சென்ற பொழுது அருமையறிந்து பாதுகாப்பார் இன்மையாற் சிதைந்து போயின, பல காணப்படவில்லை. அதை நினைக்கையில் இப்பொழுது கிடைப்பவற்றை

* மணிமேகலை.

யேனும் அறிஞர்கள் பாதுகாத்து ஆராய்ந்து வெளியிட்டால் நலமாயிருக்குமேயென்று தோற்று கிறது. கலைவல்லார்களுடைய குடும்பங்களிலுள் ளோரிடம் பல செய்திகளை வாய்மொழியாகக் கேட்டறியலாம். அவ்வாறு அறிந்து பலவற்றைத் தொகுக்கலாம். எனக்கு இந்த ஐயங்களிற் சில வேறு ஊர்களுக்குச் சென்றிருந்த பொழுது அங்கங்கே யிருந்த முதியவர்களால் நீங்கின. என்னுடைய இளமையில் திருவீழிமிழலையில் சிறந்த சிற்பியொருவர் இருந்ததைப் பார்த்திருக் கிறேன். அவர் பல விஷயங்களைத் தெளிவாகச் சொன்னார். சீவகசிந்தாமணியில் வந்துள்ள யானைப் பேச்சு இப்பொழுதும் வழங்கி வருகின்றனவா வென்று திருவிடைமருதூரி லிருந்த ஒரு யானைப் பாகனைக் கேட்டேன். அவன் அவை அப்படியே வழங்குகின்றன வென்றும், யானையின் இலக்கணங் கள் முதலியவற்றைப்பற்றித் தமிழில் எழுதப் பெற்றுள்ள சுவடி யொன்று உள்ள தென்றும் கூறினன். அதைப் பார்க்கவெண்ணிப் பெறமுயன் றும் அது கிடைக்கவில்லை. இப்பொழுது கிடைத் துள்ள பழைய நூல்களிலும் கல் வெட்டுகளிலும் கலைகளைப்பற்றிய விஷயங்கள் பல உள்ளன. அவற்றை ஆராய்ச்சி செய்து வெளியிட்டால் உலகத்திற்கு மிகவும் பயன்படும்.

---

# 4. இசைக்கலை

[சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் 1936-ம் வருஷத் தொடக்கத்தில், சுவாமி விபுலானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.]

மகா மகோபாத்தியாய சுவாமிநாத அய்யரின் அரும்பெரும் முயற்சியின் பலனாக கடந்த நூற்றாண்டின் இறுதியிலே சங்க இலக்கியங்கள் வெளியாயின. இந்நிகழ்ச்சியானது மிகவும் முக்கியமானதாகும். அந்த இலக்கியங்களிலே விலைமதிக்கவொண்ணாத பொக்கிஷங்கள் இருக்கின்றன. அவை மூடுமந்திரமாகவே இருக்கின்றன. அப்பொக்கிஷங்களால் தற்காலத்துத் தமிழ் மக்கள் பலனடையவில்லை. அவைகளை அறிவு மேம்பாட்டிற்காக உபயோகித்துக் கொள்ளவுமில்லை. புராதன தமிழ் நாட்டு ஞானிகளது அறிவுபதேசங்கள் தமிழ் மக்களுக்குப் புத்துயிர் அளிக்கத் தக்கவையாகும்.

## தமிழர் பூர்வீகம்

தமிழர் மிக்க புராதன மக்கள். ஏசுநாதர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர் எகிப்து, கிரீஸ், முதலிய அயல் நாடுகளுடன் வர்த்தகம் நடத்திவந்தனர். இந்தியாவின் பல பாகங்களிலும் வசித்துவந்தனர். அவர்களது பூர்வீகத்தைப் பற்றி அபிப்பிராய பேதம் உண்டு. தமிழர் வேறு நாட்டிலிருந்து குடியேறியவர்கள் அல்லர் என்பதற்கு ஆதாரங்கள் பல உள.

குமரிக்குத் தெற்கே தமிழர் வசித்துவந்த பெரும் பாகத்தைக் கடல் கொண்டது. புராதன தமிழர் சங்கீதக்கலை, மிக்க அபிவிருத்தியடைந்திருந்தது.

## கால பாகுபாடு

நாம் கவனிக்கவேண்டிய விஷயம் சங்கீதமாகும். இது சம்பந்தமாகக் கால பாகுபாடு செய்துகொள்ளுவது அவசியமாகும். காலத்தை மூன்று பிரிவுகளாக்கலாம். முதல் பிரிவான சங்க காலமானது சரித்திர காலத்திற்கு முற்பட்டதாகும். இடைக்காலம் 7-வது நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாகிறது. அக்காலத்தில்தான் சோழமன்னர்களது ஆட்சி செழித்திருந்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றியிருந்தார்கள். சங்கீதக் கலையும் புத்துயிர் பெற்றது. கடைக்காலம் 14-வது நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாகிறது. சங்க காலத்தையே இரு கூறுகளாக்கலாம். முதல் பாதியில் பௌத்த சமயம் பரவவில்லை. இரண்டாவது பாதியில் பௌத்த சமயமும், ஜெயின சமயமும் பரவிவிட்டன. ஏசுநாதர் பிறத்தற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு பௌத்தர்கள் வடநாட்டிலிருந்து தமிழகம் புகுந்தனர். அதற்கு முன்பு தமிழ்மொழி தனி இயல்புடனிருந்தது.

## பாணர் குணாதிசயங்கள்

நான் பேசப்போகும் பாணர், சங்ககாலத்தவர்கள்; அவர்கள் கலையுணர்ச்சியே உருவானவர்கள்; எனினும் ஏழைகள்; அவர்களுக்குச் சொந்த வீடு வாசல்களில்லை. அவர்கள் தத்தம் மனைவிகளுடனும், யாழ்களுடனும் ஒரு குறுநில மன்னரது சபையிலிருந்து மற்றொரு குறுநில மன்னனிடம்

செல்வார்கள்; அம்மன்னர்களை மகிழ்வித்துப் பரிசில் பெறுவார்கள். பாணனது மனைவியின் பெயர் பாடினி; இவள் யாழ்வாசிக்க மாட்டாள்; நடனமே செய்வாள்.

தமிழ் மொழியிலே இலக்கிய சம்பிரதாயங்கள இருக்கின்றன. காதல், இல்லறம் இவை சம்பந்தப்பட்டது அகத்திணையாகும். புறத்திணை போரிடல் முதலிய நடவடிக்கைகளைக் குறிப்பதாகும். குறுநில மன்னரது இல்லற வாழ்க்கைக்குரிய பாத்திரங்களைக் கீழ்க்கண்ட தொல்காப்பியச் சூத்திரத்தால் அறியலாகும்:

"தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,
பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,
கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்,
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப."

எக்காலத்திலும் காதல் வாழ்க்கை இடையூறுகள் இல்லாமல் இருப்பதில்லை. புராதன தமிழ் மக்கள் நாகரிகமடைந்து விளங்கியதால் மனைவிமார்களுடன் சச்சரவு ஏற்பட்டகாலத்து அநாகரிக மக்களைப்போல் நடக்கவில்லை. சமாதானத்திற்குச் சிரிய முறையையே கையாண்டனர். குடும்பத்தில் சச்சரவு ஏற்படுமானல் பாணன் அங்குச் சென்று தனது சாதுரியத்தால் சச்சரவைச் சமாதானஞ் செய்வான். பாணனுக்கு அந்தப்புரத்தில் செல்ல யாதொரு தடையுமில்லை. எனினும் இந்தப் பாணர்கள் ஊர்களுக்கு வெளியே தனியான இயற்கை வளப்பமுள்ள இடங்களிலேயே வாசஞ் செய்வார்கள். அவர்கள் வாழும் இடங்களின் சுற்றுப் புறங்கள் மனதைப் பரவசப்படுத்த வல்லனவாக இருக்கும்.

## புராதன வாழ்க்கையின் சிறப்பு

விழாக் காலங்களிலே அரச சபையில் பாணன் யாழ் வாசிப்பது, பாடினி ஆடுவது வழக்கம். அக்காலத்து வாழ்கை தற்காலத்து வாழ்க்கையைப் போன்றதல்ல. ரோமாபுரி சாம்ராச்சியம் நிலைத்திருந்தபோது அந்நாட்டுமக்கள் எத்தகைய வாழ்க்கை நடத்தினரோ அத்தகையதே புராதன தமிழரது வாழ்க்கை யாகும். அரச சபையில் தங்கக் கிண்ணியிலே மதுவை எல்லோரும் பருகுவார்கள். அம் மதுவை இளம் பெண்களே வழங்குவார்கள். உள்ளூரிலே செய்த மது அல்லாமல் அயல் நாட்டி லிருந்து வரும் மதுவையும் பருகினுர் களாம். பாணன் இன்றி அரசசபை பூரணமாகாது. குறுநில மன்னர்கள் போருக்குச் சென்று திரும்பிய போதும், வேட்டையாடித் திரும்பிய போதும் பாணன் தனது இன்னிசையால் அவர்களுக்கு உற்சாகமூட்டுவான். குறுநில மன்னர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்த போது பாணனுக்குப் பொன் தாமரையைப் பரிசளிப்பார்கள்; பாடினிக்குப் பொன் மாலை யளிப்பார்கள். பாணனுக்கும், பாடினிக்கும் அரசசபையில் நன்மதிப்பும் சமத்துவமும் அளித்து வந்தனர். அவரது தொழிலுக்கும் மதிப்பிருந்தது. குறுநில மன்னர்கள் பாணனுக்கு எல்லா வித சௌகரியங்களையும் செய்து தங்களை விட்டு நீங்கவேண்டாமென்று வற்புறுத்தினுலும் அவன் ஓரிடமே இருப்பதில்லை. அவ்வப்போது கிடைத்த செல்வத்தைச் செலவிட்டு மற்றொரு அரசசபைக்குச் செல்வதே வழக்க மாகும். இத்தகைய பாணர்கள் தங்கள் யாத்திரையின் போது நடு வழியில் ஒருவரை யொருவர் சந்திப்ப துண்டு. ஒரு பாணன் மற்றவனுக்கு, தனக்குப்

பரிசளித்த வள்ளல் இருக்கும் இடத்திற்கு வழி சொல்லுவதுண்டு. பரிசில் பெற்றுன் ஒருவன் தனக்குப் பரிசில் அளித்தவரது வள்ளன்மையையும், அவரது நகரங்களின் இயல்பையும், அவரிடமுள்ள நற்குண நற் செய்கைகளையும், அவரது அரண்மனையின் சிறப்பையும், பல திறத்தினரும் ஏத்தும்படி பலகுண விசேடத்தோடு அவர் வீற்றிருத்தலையும், பரிசில் பெறக்கருதிய பாணனொருவனுக்குக் கூறுவான். பாணர்கள் தேர்கள், குதிரைகள், யானைகள் முதலியவற்றைப் பரிசிலாகப் பெறுவார்கள். குறுநில மன்னர்கள் இந்தப் பாணரை அன்புடனும், சமத்துவத்துடனும், நன்மதிப்புடனும் நடத்துவார்கள்.

## யாழ்கள்

இந்தப் பாணர்கள் எடுத்துச் செல்லும் யாழ்கள் இருவகைப்படும். ஒன்று பேரியாழ்; மற்ருென்று செங்கோட்டியாழ். இந்த யாழ்களின் வருணனையைப் பத்துப்பாட்டில் காணலாம். இந்த யாழ்களின் அமைப்பு எவ்வாறிருந்த தென்பதை யூகிக்கக்கூடும். இந்த வாத்தியங்கள் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வந்தன. சிறிது காலத்திற்குப் பின்பு மகரயாழ், சகோடயாழ் என்ற இரு புதிய யாழ்கள் தோன்றின. முதலிரண்டு யாழ்களும் சங்க காலத்தவை; செங்கோட்டியாழான சிறிய யாழுக்கு 7 தந்திகள்; பேரியாழுக்கு 21 தந்திகள்; சகோட யாழுக்கு 14 தந்திகள்; மகரயாழுக்கு 17 தந்திகள், மகரயாழும் சகோட யாழும் சிலப்பதிகார காலத்திற்குப் பிற்பட்டவையாகும், பாணனுடனே அவனது மனைவியான பாடினி உடன் செல்வாள்: பாணன் யாழ்வாசிக்கும்

போது இவள் ஆடுவாள்; இவள் யாழ்வாசிப்பதே இல்லை. பாடினி கற்புடையவள்; கற்புக்கு அறிகுறி யான முல்லைமலரை அணிந்திருப்பாள். எனவே கற்புடைய மாதர்கள் அக்காலத்தில் நாட்டியம் செய்தனர் என்றால் அக்காலத்து நாட்டியம் விலை மாதருக்குரிய கலையாகி க்ஷீணதிசை அடையவில்லை என்பது விளங்கும். பின்னர் நாட்டியம் விறலியர், கூத்தர் இவர்களது கலையாயிற்று. விறலியரே யாழ்வாசிக்கவும் ஆரம்பித்தனர்.

கல்லாடம் மத்தியகால நூலாகும். அப் பொழுது ஆரியக்கலை தமிழ் நாட்டில் கலந்து விட்டது. அக்காலத்திலே 1000 தந்திகளை யுடைய நாரதப் பேரியாழ், 100 தந்திகளை யுடைய கீசக யாழ், 9 தந்திகளையுடைய தும்புருயாழ், ஒரே தந்தியுடைய மருத்துவயாழ் ஆகிய இவைகள் ஏற்பட்டன. இந்த யாழ்களின் இலக்கணங்களைக் கல்லாடம் என்னும் நூலில் காணலாம்.

தும்புரு யாழும், மருத்துவ யாழும் வீணை போன்றவையாகும். நூல்களிற் காணும் வருணனை யிலிருந்து அந்த இசைக் கருவிகள் அழகிய வேலைப் பாடமைந்தன வென்றும், விலையுயர்ந்த இரத்தினங் களை அக் கருவிகளுக்குள் போட்டிருந்தனர் என்றும், அழகிய மாதர்கள் உபயோகிக்கும் யாழ் களைப் பட்டால் செய்த அழகிய பெட்டிகளில் வைப்பார் என்றுந் தெரிகிறது.

## யாழின் வருணனைகள்

யாழின் வருணனைகளை இருபாணாற்றுப்படை களிலும், பொருநராற்றுப்படையிலும், மலைபடு

கடாமிலும், சிலப்பதிகாரம், கல்லாடம் இவைகளிலும் விரிவாகக் காணலாம். இனி நான் கூறப் போகும் விஷயங்கள் எல்லாம் அந்த வருணனைகளையே அடிப்படையாகக் கொண்டவைகளாகும். பேரியாழ் கையில் தூக்கிச் செல்லக் கூடியதாகும்; பிற்காலத்து நாரதப் பேரியாழ், தும்புரு யாழ் போன்றதல்ல. பேரியாழ் மூன்று ஸ்தாயிகளிலும், ஏழு ஸ்வரங்களை யொலிக்கும் 21 தந்திகளையுடையதாகும். 7 ஸ்வரங்களுக்கும் தமிழ்ப் பெயர்கள் வருமாறு:— குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

தாரம் என்பது வட சொல்லன்று. சமஸ்கிருதத்தில் உள்ள தாரம் என்பதற்கு வேறு பொருள் உண்டு. புராதன தமிழ் ஸ்வரங்கள் என்ன வென்பதையும், அவைகளுக்கும் தற்போதுள்ள ஸ்வரங்களுக்கு முள்ள சம்பந்தம் என்ன வென்பதையும் விவாதிக்கு முன்பு நாம் ஏழு ஸ்வரங்களின் தோற்றத்தைப் பற்றியும், பாணன் தனது யாழை எம் முறையில் வாசித்தான் என்பதையும் கவனிக்க வேண்டும். முதலில் தோன்றிய ஸ்வரம் தாரம் என்பதாகும். ஏனைய ஸ்வரங்கள் எவ்விதம் தோன்றின என்பது கீழ்க் காணும் பாட்டால் அறியலாகும்.

> "தாரத்துள் தோன்றும் உழையுழையுட் டோன்றும்
> ஒருங் குரல்குரலி னுட்டோன்றிச்—சேருமிளி
> யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
> கைக்கிளை தோன்றும் பிறப்பு."

தாரத்திலிருந்து உழையும், உழையிலிருந்து குரலும், குரலிலிருந்து இளியும், இளியிலிருந்து துத்தமும், துத்தத்திலிருந்து விளரியும், விளரியிலிருந்து கைக்கிளையும் தோன்றியது. தமிழ்ப்

பாணன் ஒவ்வொரு ஸ்வரத்தையும், ஏனைய ஸ்வரங்களோடு கூட்டிக் கூட்டி வாசிக்க ஆரம்பித்தான். ஒரு ஸ்வரத்தையும் அதன் பஞ்சமத்தையும் கூட்டி வாசித்தபோது இனிமையான நாதம் ஏற்பட்டதைக் கண்டான்.

ஒரு தந்தியால் ஒரு ஸ்வரம் ஏற்பட்டால் அதன் மூன்றில் இரண்டுபாகம் அந்த ஸ்வரத்தின் பஞ்சமத்தையும், அரைப்பாகம் உச்சஸ் ஸ்தாயியில் எட்டாவது ஸ்வரத்தையும் தோற்றுவிக்குமென்பதைப் பாணன் ஆரம்பத்திலேயே கண்டுகொண்டானென்று தெரிகிறது. இந்த விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு இசைப் புலவனும், இசைக் கருவி செய்வோனும் சங்கீத சாஸ்திரமொன்றைச் சிருஷ்டித்தனர்.

சிலப்பதிகார அரங்கேற்று காதையில் மாதவி என்ற நாட்டியப் பெண் அரங்கேறியது பற்றியும், கி. பி. ஆரம்ப நூற்ருண்டுகளிலே தமிழர்து நாகரிகம் எவ்வாறு இருந்தது என்பது பற்றியும் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. '1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர் நிலை' என்ற தலைப்புடன் கனகசபைப் பிள்ளை வெளியிட்ட நூலிலிருந்து ஒரு பாகத்தை வாசித்துக் காட்ட விரும்புகிறேன். சமூக வாழ்க்கை என்ற அத்தியாயத்திலே அந்த தமிழறிஞர் கூறுவதாவது:—

''அக்காலத்தில் நடிகச் சிறுமி 5-வது பிராயத்தில் கல்விகற்க ஆரம்பிப்பாள்; மூன்று வருடகாலம் தொடர்ச்சியாகக் கல்வி கற்பாள். அச்சிறுமியின் கல்வி தற்காலத்தில் பூரண கலையுணர்ச்சியுள்ள மாதரின் படிப்புக்குக் குறைவானதல்ல.

அவளுக்கு ஆடவும், பாடவும், வசீகரத்துடனிருக்கவும் கற்றுக் கொடுத்தனர். யாழ், குழல், மத்தளம் இவை வாசிக்கவும், அயல் நாட்டு பாஷைகளில் இயற்றிய பாடல்களைப் பாடவும், சித்திரம் எழுதவும், உல்லாசமாக நீராடவும், நல்ல நிறமுள்ள மாவுகளைப் பூசிக்கொள்ளவும், அழகிய மாலைகள் தொடுக்கவும், நகைகளால் தன்னைத் தானே அலங்கரித்துக் கொள்ளவும், படுக்கையை அழகாகப் போடவும், பருவ காலங்களைக் கவனிப்பதோடு அந்தந்தப் பருவத்திற்குப் பொருத்தமானது எது வென்பதை யறிந்து கொள்ளவும், பலவித கலைகளின் முக்கிய விஷயங்களைப்பற்றி விவாதிக்கவும், மற்றவர்களது எண்ணங்களைத் தெரிந்து கொள்ளவும் கற்றுக் கொடுத்தனர். ஆடவரது மனத்தை வசீகரப் படுத்துவதற்கானதும அவர்களுக்குச் சந்தோஷம் உண்டு பண்ணுவதற்கானதுமான ஒவ்வொரு விஷயத்தையும் அவள் கற்றுக்கொண்டாள். பன்னிரண்டாவது வயதில் மன்னன் முன்பும், பிரபுக்கள் முன்பும் அவள் அரங்கேறுவாள். அவளுடன் ஒரு கவிஞனும், ஒரு இசையாசிரியனும், யாழ் வாசிப்பவன் ஒருவனும், குழல் வாசிப்பவன் ஒருவனும், மத்தளக்காரன் ஒருவனும் இருப்பார்கள். அரங்கமானது இரண்டடி உயரமும், 14 அடி அலகமும், 16 அடி நீளமுமுள்ள மேடையைப் போன்றிருக்கும். தூண்களின் மீது மேடைக்குமேல் 8 அடி உயரத்தில் விமான மொன்று அமைப்பார்கள். அந்த விமானத்தின் மீது இஷ்ட தெய்வங்களின் படங்கள் இருக்கும். விமானத்தின் நாலா பக்கங்களிலும் திரைகள் விட்டிருப்பார்கள். இரவில் அரங்கத்தைத் தீபாலங்காரம் செய்த பிறகே ஆடல் ஆரம்பமாகும். மேடையின் முன் பாகத்தில் 6 அடி அகலத்தை நடிகப் பெண்ணுக்காக ஒதுக்கியிருப்பார்கள். அவ

ளுக்குப் பின் இரண்டு அல்லது மூன்று பழைய நடிகப் பெண்கள் நின்ற வண்ணம் அவ்வப்போது சொல்லிக் கொடுப்பார்கள். அவளுக்குப் பின் இசைவாணர்கள் சிலர் இருப்பார்கள். இவர்கள் இடையிடையே பாடுவார்கள்; அப்போது நடிகச் சிறுமி ஓய்வு எடுத்துக் கொள்வாள். திரையைத் தூககியதும் மிக்க அலங்காரத்துடனிருக்கும் அச் சிறுமி தோத்திரப் செய்வாள். பிறகு பல பாடல் களைப் பாடுவாள்; ஆடுவாள்; வசீகரத்துடன் அபி நயங்கள் செய்வாள். அவள் தனது யௌவனத் தாலும், அழகாலும், இனிய குரலாலும், வசீகரத் தோற்றத்தாலும், இசை வல்லமையாலும் சபையி னரது உள்ளத்தைக் கொள்ளை கொள்வாள். அரசன் 1008 பொன் காசு விலையுள்ள பொன்மாலை யொன்று வெகுமதியாகக் கொடுப்பான். அதுவே பெரிய வெகுமானமாகும்.

ஒரு நாடகக் கணிகை அரங்கேறுவதற்கு அவசியமானவர்கள் வருமாறு;—

1. நாடகக் கணிகை.
2. ஆடலாசிரியன்.
3. இசையாசிரியன்.
4. கவிஞன்.
5. மத்தளக்காரன்.
6. குழலோன்.
7. யாழிசைப்போன்.

அரங்கேறுவது சம்பந்தமாகச் சிலப்பதிகாரத் திலுள்ள செய்யுட்களில் பல விவரங்களைக் காண லாம். அரங்கேற்று காதையில் 70-வது வரி முதல் 94-வது வரி வரையில் யாழிசைப்போனைக் குறிக்

கின்றன. அந்த வரிகளுக்குப் பூரணமாக அர்த்தம் தெரிந்து கொண்டால் பண்டைத் தமிழ் இசையினர் பொக்கிஷத்திற்குத் திறவுகோல் கிடைத்துவிடும். ஐந்து வருட காலத்திற்கு மேலாக நான் ஆராய்ச்சி செய்ததன் பலனாக சிறிது ஒளி கிடைத்துள்ளது. அந்த வரிகளுக்கு அடியார்க்கு நல்லார் விளக்கவுரை எழுதவே இல்லை. அடியார்க்கு நல்லார் காலத்திலேயே பண்டைத் தமிழிசை புறக்கணிக்கப்பட்டதென்று தெரிகிறது. மத்திய காலத்தில் கலைவல்லவர்களாக இருந்த சமண சந்நியாசிகளும், பௌத்த சந்நியாசிகளும் ஆடல், பாடல் என்ற இருகலைகளையும் புறக்கணித்தனர்.

காலஞ் செல்லச் செல்ல, தமிழ்ப் பாணனின் நிலை எவ்வாறு மாறுதலடைந்தது என்பதைக் கவனிக்கலாம். 7-வது நூற்றாண்டில் தமிழ் நாட்டின் அரசியற்றுறையில் கலைவளர்ச்சி சம்பந்தமாகவும் புதிய சகாப்தம் ஏற்பட்டது. அக்காலத்தில் தான் சைவப் பெரியார்களான திருஞான சம்பந்தரும் அப்பரும் தோன்றினார்கள். அவர்களது தோற்றம் புதிய சகாப்தம் ஏற்பட்டதற்கு உரிய முக்கிய காரணங்களில் ஒன்றாகும். திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும் அவரது மனைவியான விறலியரும் திருஞான சம்பந்தரைச் சந்தித்தனர். அக்காலத்தில் திருஞான சம்பந்தரது பக்தி ரசம் ததும்பும் பாடல்கள், பெண்கள் எல்லோரது மனத்தையும் உருக்கிவந்ததோடு அவர்களது மனம் சீரிய லட்சியங்களை நாடும்படியும் செய்தன. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனரது இசைக்கு மிக்க மதிப்பு ஏற்பட்டிருந்தது. இவர் ஏனைய பாணரைப் போல வறுமையுடையவரல்லர்; நீலகண்டர் பெரிய பக்தர். ஞான சம்பந்தரும் நீலகண்டரும் ஒருவரையொருவர் சந்தித்ததிலிருந்து இருவரும் பெரிய நண்பர்களாயினர். ஞானசம்பந்தரது பண்களுக்கு

திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனைவியும் ஸ்வரம் கோத்து யாழில் பாடுவார்கள். தருமபுரத்தில் யாழில் வாசிக்க முடியாதவாறு திருஞான சம்பந்தர் யாழ்முரி என்ற பண்ணை இயற்றிய சம்பவமும், திருநீல நக்கர் என்ற பிராமண பக்தர் தீண்டாதவரான திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் அவரது மனைவிக்கும் தமது வீட்டிலே பூஜை அறையில் இடமளித்த சம்பவமும் சேக்கிழாரின் பெரிய புராணத்தில் விரிவாக வுள்ளன.

சைவப் பெரியார்களின் தேவாரப் பண்களும், வைஷ்ணவப் பெரியாரான நம்மாழ்வாரின் திருவாய்மொழியும் இசை யபிவிருத்திக்குச் சாதனங்களாக இருந்தன. தமிழ்மொழியிலே இன்று வரையில் அவைகளைவிட மேலான பக்தி ரசம் வாய்ந்த பாடல்களில்லை.

1904-வது வருடத்திலே புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள ஸ்ரீ கந்தசாமி கோவில் மலையில் கண்ட கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து அந்தக் கல்வெட்டுகளில் கண்ட விஷயங்களை ராவ் பகதூர் பி. ஆர். பந்தர்கார் பிரசுரித்துள்ளார். 7-வது நூற்றாண்டின் இசையைப் பொருத்தவரையில் அந்தக் கல்வெட்டுகளை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அந்தக் கல்வெட்டுக்களில் 7 பகுதிகள் உண்டு. அவை தேவநாகரி எழுத்துக்களில் உள்ளன. அவைகளின் அடியில் தமிழில் 'எட்டுக்கும் ஏழுக்கும் இவை உரிய' என்று கண்டிருக்கிறது. இவ் விஷயங்கள் ஆராய்ச்சிக் குரியனவாகும்.

9-வது நூற்றாண்டிலே பக்திமான்களான இரு பாணர்கள் தோன்றினார்கள். அவர்களில் ஒருவரான பாட்டிரனார் என்பவர் சுந்தர மூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமானும் இருந்த

காலத்திலிருந்தவர். மற்றொருவர் திருப்பாணாழ்வார்.

பெருங்கதையும், சீவக சிந்தாமணியும் 10-வது நூற்றாண்டைச் சேர்ந்தவை. யாழ் வாசிப்பது பற்றி அவ்விரு நூல்களும் குறிப்பிடுகின்றன. கதாநாயகன் கதாநாயகிக்கு இசை சொல்லிக் கொடுப்பதும், இருவருக்கும் இசைப் போட்டி நடப்பதும் வழக்கமென்று அவ்விரு நூல்களும் குறிப்பிடுகின்றன.

13-வது நூற்றாண்டிலே சாரங்க தேவர் சங்கீத ரத்னாகரத்தில் தமிழ்த்தேவாரப் பண்புகளைப் பற்றிச் சில இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். அவ்விஷயங்களை உதவியாகக் கொண்டு தேவாரப் பண்களை நிச்சயிக்கக் கூடும். தேவார ராகங்கள் பல தற்போது மறைந்துவிட்டன.

17-வது 18-வது நூற்றாண்டுகளிலே தஞ்சையில் அரசாண்ட நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் சங்கீதத்தை ஆதரிக்க ஆரம்பித்தனர். அப்பொழுது புராதன தமிழிசை முற்றிலும் மறைந்தது. அதற்குப் பதிலாக புதிய முறை தோன்றியது. வேங்கட மஹியின் சதுர் தண்டி—பிரகாசிகை (1660) தோன்றியது முதல் சங்கீத முறையில் புதிய சகாப்தம் ஏற்பட்டது. அது இன்றைக்கும் மாறவில்லை. ஷாஜி (1687—1711) சங்கீத அபிவிருத்தியை ஆதரித்தார். அவரும் ஒரு சங்கீத வித்துவானே. அவரது அரசபையில் திருவாரூர் இராஜகவியும் ஒரு சங்கீத வித்துவானாக இருந்தார். கிரிராஜ கவியின் பேரனே திருவையாற்று தியாகராஜ சுவாமிகள். பிறகு துலாஜாஜி (1763—1787) யின்

காலத்தவரான அருணாசலக் கவிராயர் இராமாயண கீர்த்தனம் பாடினார். அதன் பின் எட்டையபுரம் சமஸ்தானத்தைச் சார்ந்த முத்துசுவாமி தீக்ஷிதர் (1775), திருவாரூர் சியாமா சாஸ்திரியார் இவர்கள் தோன்றினார்கள்.

தற்போது சங்கீதத்தில் ஜனங்களுக்குச் சிறந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளது. தற்காலத்தவர்கள் சுயமாக சங்கீத அபிவிருத்தி வேலை செய்வார்களென்றும், புதிய முறைகளை சிருஷ்டி செய்து, சங்கீதத்தை 'ஜீவனுடைய சக்தி' யாக்குவார்களென்றும் நம்புவோமாக.

# 5. தமிழர் படைத்திறம்

(ரா. பி. சேதுப்பிள்ளை, பீ. ஏ. பீ. எல்.
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.)

## நாற்படை

அரசனுக்குரிய அங்கங்களுள் தலை சிறந்தது படை. படைத்திறத்தால் அரசன் உட்பகையை அழிப்பான்; புறப்பகையை ஒழிப்பான். முன்னாளில் தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை என்னும் நாற்படையுடைய அரசன் மிகச் சிறந்தவனாக மதிக்கப் பெற்றான்.[1] எல்லாப் படைகளுக்கும் மன்னனே மாபெருந் தலைவன்.

## யானைப் படை

நால்வகைப் படைகளுள் ஏற்றமும் தோற்றமும் வாய்ந்தது யானைப் படை. செருக்களத்தில் வீறுகொண்டு வெம்போர் விளைப்பதும், மாற்றார்க்குரிய மாடமதில்களைத் தாக்கித் தகர்ப்பதும் யானைப் படையே. அப் படைவீரர் யானையாட்கள் என்றும் குஞ்சரமல்லர் என்றும் குறிக்கப்பெற்றனர். வலிமை சான்ற அழகிய யானை பட்டத்து யானை என்று பெயர் பெற்றது. உயர்ந்த மேனியும், ஓங்கிய நடையும், சிறந்த கொம்பும், பரந்த அடியும், சிறிய கண்ணும், செந்நிற வாயும் உடைய யானையே அப் பதவிக்கு உரியதாயிற்று. அரசன் நாட்டைச் சுற்றிப் பார்க்கப் புறப்படும்பொழுதும், படையெடுக்கும் பொழுதும் பட்டத்துயானை

1. "உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை" திருக்குறள், 761.

மீதேறிச் செல்வான். அவன் கொடி தாங்கும் தகுதியும் அதற்கே உண்டு.

## சேர நாட்டு யானைப் படை

தமிழகத்தில் மலை நாடாகிய சேரநாடு யானைச் செல்வமுடையது. ஆதலால் அந் நாட்டுப் படையில் யானைப்படை சிறந்ததோர் அங்கமாக விளங்கிற்று. அந் நாட்டை ஆண்ட அரசன் ஒருவன் "பல்யானைச் செல்கெழு குட்டுவன்" என்று பாராட்டப்படுகின்றான்.[2] புலவர் பாடும் புகழுடைய வீரனாய் விளங்கிய அச் சேரன் வேழப்படையால் வெற்றிப் புகழ் பெற்றவன் என்பது வெளிப்படை.

## சோழ நாட்டு யானைப் படை

சோழ நாட்டின் வேழப் படைத் திறத்தினைப் பிறநாட்டு அறிஞர் எழுதியுள்ள குறிப்புக்களால் அறியலாகும். "சோழநாட்டு அரசாங்கம் அறுபதாயிரம் போர்க் களிறுகளை உடையது. போர்க்களத்திற் புகும்பொழுது அவற்றின் முதுகில் அமைந்த வீடுகளில் வீரர் நிறைந்திருப்பர்; தூரத்திலுள்ள பகைவர் மீது வில்லம்பு துரப்பர்; ஈண்டிய பகைவர் மீது ஈட்டியைப் பாய்ச்சுவர். போர் முனையில் வீரம் விளைத்து வெற்றி பெற்ற யானைகளுக்கு விருதுப் பெயர் கொடுப்பதுண்டு. அப் பெயர்கள் அவற்றின் கொற்றத்தைக் குறிப்பனவாக அமையும். நாள்தோறும் போர்க் களிறுகளை அரசன் பார்வை யிடுவான்" என்று சீனத்து அறிஞன் ஒருவன் எழுதிப் போந்தான்.[3]

---

2. இவனைப் பதிற்றுப் பத்து மூன்றாம் பத்தில் பாலைக் கௌதமனார் பாடியுள்ளார்.

3. சோழர்கள்—நீலகண்ட சாஸ்திரியார், இரண்டாம் பாகம், முதல் பகுதி, ப. 230.

## பாண்டி நாட்டு யானைப் படை

பாண்டி நாட்டை ஆண்ட வீர மன்னருள் ஒருவன் பெருவழுதி என்னும் பெயரினன். பகைவர்களை அறப்போரால் வென்று மறக்கள வேள்வி புரிந்தவன் அவன். யானைப் படை அவனிடம் சிறந்து விளங்கிற்று. "கொல்யானை பலவோட்டிக் கூடா மன்னர் குழாம் தவிர்த்த, பெருவழுதி" என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் அவனை வியந்துரைக்கின்றன.[4] பாண்டி நாட்டு மீனக் கொடி அவன் பட்டத்து யானை மீது பெருமிதமாக நிமிர்ந்து பறந்த காட்சியைக் கண்ட கவிஞர் ஒருவர்,

"கொல் களிற்று மீமிசைக் கொடி விசும்பு நிழற்றும் எங்கோ வாழிய"

என்று மன மகிழ்ந்து வாழ்த்தினர்.[5]

## வேளைப் படை

கண்ணிணைக் காக்கும் இமைபோல் அரசற்குக் காலத்தில் உதவி புரியும் வீரர்கள் முற்காலத்தில் இருந்தனர்; அன்னார் அணுக்கப் படையினர்; உற்ற விடத்து உயிர் வழங்கும் பெற்றியர். உடுக்கை யிழந்தவன் கைபோல் இடுக்கண் வந்த வேளையில் ஏன்று உதவிய அவ் வீரர், "வேளைக் காரர்" என்று அழைக்கப் பெற்றனர்.[6] தஞ்சைச் சோழ மன்னர் சேனையில் வேளைக்காரப் பட்டாளம் சிறந்து விளங்கிற்று.

---

4. வேள்விக்குடிச் செப்பேடுகள் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே வரையப் பெற்றன.
5. புறநானூறு 9. நெட்டிமையார் பாட்டு.
6. ஆபத்து வேளையில் அஞ்சேல் என்று அருள் புரியும் முருகவேளை "வேளைக்காரப் பெருமாள்" என்றார் அருணகிரிநாதர்.

## ஔவை கண்ட வீரன்

பழங்காலத்திலும் இத் தகைய வேளைப் படை வீரர் இருந்தனர் என்பது ஔவையார் பாட்டால் விளங்குகின்றது. ஒருநாள் ஓர் அரசனைக் காணச் சென்றார் ஔவையார். மது நிறைந்த பொற் கிண்ணம் அவன் முன்னே நின்றது. அங்கு முறுக்கு மீசையொடு மெய்காப்பாளனாக நின்றான் ஒரு சேவகன். அவன் முகத்தை ஔவையார் அமர்ந்து நோக்கினார்; அவன் ஊரும் பேரும் கேட்டறிந்தார்; முகமலர்ந்தார்; ஆர்வத்தோடு பேசலுற்றார்.

"அரசே! இவன் பிறந்தகுடியின் பெருமையை மூன்று தலைமுறையாக நான் அறிவேன். ஒரு போர் முனையில் உன் பாட்டன் பெரும் போர் புரிந்து கொண்டிருந்தான். அவன் வில்லினின்றும் போந்த அம்புகள் மாற்றார் சேனையைச் சின்ன பின்ன மாக்கின. அவ் வில்லின் செயல் கண்டு விம்மிதம் கொண்டு நின்றான் உன் ஐயன். அப் போது பகைவன் ஒருவன் விலாப்புறமாக நின்று வீசிய வேற்படை அவனை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தது. அதை அவன் அறிந்தானில்லை. நொடிப் பொழுதில் வேற்படைக்கும் அவனுக்கும் இடையே ஒரு வீரன் வந்து நின்றான். வெம்படை யைத் தன் மார்பில் ஏற்றான்; மடிந்து மண்மேல் விழுந்தான். அவனைத் தழுவி எடுத்தான் உன் பாட்டன்; கடும் புண்ணைக் கண்ணீரால் கழுவினான்;[7] அவன் விழுந்து பட்ட இடத்தில் வீரக்கல் நாட்டினான்.

---

7. "புரந்தார் கண்ணீர் மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்து கோட்டக்க துடைத்து"
என்ற திருக்குறள் ஈண்டுக் கருதத் தக்கது.

"அவ் வீரனுடைய பேரன் இவன். அந்த முறையில் அவன் பெயரே இவன் பெயர். அமர்க் களத்தில் இவனும் அருஞ்செயல் புரிய வல்லான். உனக்காக உயிரையும் கொடுப்பான். தியாகம் இவன் பிறவிக்குணம். ஆதலால் இக் கிண்ணத்தி லுள்ள மதுவை முதலில் இவனுக்கே கொடு" என்று கூறினார். அது கேட்ட அரசன் மன மகிழ்ந்து ஔவையார் பணித்தவாறே செய்தான்.[8]

## மூலப் படை

பல வகைப் படையையும் கையாண்டது பழந்தமிழ் நாடு. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்னும் அறுவகைப் படையையும் உடையராயிருந்தனர் தமிழ் மன்னர். ஆயினும் அவற்றுள் சாலச் சிறந்தது மூலப்படையே. அப் படை வீரர் வாழையடி வாழை போல் மன்னர்க்குப் படைத் தொழிலாற்றும் மறக்குலத் தினர்; பரம்பரையாற் பெற்ற பேராண்மையும் மனத்திண்மையும் உடையவர்; பகைவரது வெம் மையைத் தாங்கி நிலைகுலையாமல் நின்று போரிடும் தன்மையர். இத் தகைய மூலப் படையைத் "தொல்படை" என்றார் திருவள்ளுவர்.[9]

## விலைப் படை

வேந்தர்க்குரிய படைகளுள் விலைப்படையும் ஒன்று. "பொன்னின் ஆகும் பொருபடை" என்று அதன் தன்மையை உணர்த்தினார் சிந்தா

---

8. புறநானூறு. 290.
9. "உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிளத்துத்
தொல் படைக் கல்லாம் அரிது"
திருக்குறள், 762

மணியாசிரியர். முன்னாளில் விலைப் போர்வீரராக விளங்கியவர்களுள் ஒருவர் வேளிர்குலத் தலைவர். அவர் பேராண்மை வாய்ந்தவர்; மாற்றாரின் கூற்றுவர்; வெற்றிமேல் வெற்றி பெற்ற வீரர். சென்றவிடமெல்லாம் செருவென்று உயர்ந்தமையால் அவர் "முனையடுவார்" என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். போர் முனையிலே தோல்வியுற்றவர் பெரும்பாலும் அவருதவியை நாடுவர்; அதற்குக் கைமாறாகத் தக்க பொன்னும் பொருளும் கொடுக்க இசைவர். முனையடுவார் போர்க்கோலம் புனைந்து புறப்படுவார். மாற்றாரைத் தாக்குவார்; வெற்றி பெறுவார்; பேசிய பொருளைப் பெற்று மீள்வார்.

அவ்வாறு கிடைத்த பொருளிற் பெரும் பாகத்தை அவர் அறவழியிற் செலவிட்டார். வாளாண்மையால் வந்த பொருளை விருந்தோம்பலிற் செலவிட்டு அவர் இறைவன் திருவருளுக்குரியரானார்; திருத்தொண்டர் புராணத்திற் போற்றப் படுகின்ற அறனடியார் அறுபத்து மூவரில் ஒருவராய் விளங்குகின்றார்.[10]

## படைவகுப்பு

இன்னும், இக் காலத்துப் பட்டாள முறையில் அமைந்த படைகளும் முற்காலத்தில் உண்டு. விற்படை, வேற்படை, மற்படை, வாட்படை முதலிய படை வகுப்புக்களைத் தமிழ்ப் பாட்டிலே காணலாம். விற்கலையிலே தேர்ந்திருந்தது முற்காலத் தமிழ் நாடு. மலை நாட்டையாண்ட சேர மன்னர்க்கு வில்வித்தை குல வித்தையாகவே அமைந்தது. சேர நாட்டுக் கொடியில் வில்லின்

10. "அறைக்கொண்டவேல் நம்பி முனையடுவாற் கடியேன்" என்று திருத்தொண்டத் தொகைப் பதிகத்திலே பாடினார் சுந்தரமூர்த்தி.

வடிவமே எழுதப்பட்டிருந்தது. வில்லவன் என்பது சேர மன்னனுக்குரிய குடிப் பெயராக வழங்கிற்று. இன்றும் பழைய வில்லாண்மையைக் காட்டும் வழக்கம் ஒன்று மலையாள நாட்டில் உள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை மலையாள மன்னர் தம் அரண்மனையினின்று வில்லுடன் வெளிப்பட்டு அம்பெய்து மீண்டு வருகின்றார்.

## வட்டுடை

வீரர் உடுக்கும் உடை வட்டுடை என்று பெயர் பெற்றிருந்தது. வில்லாளருள் முதலாக வைத்து எண்ணப்பட்ட சீவகன், மாற்றார் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டு வரப் புறப்பட்டபோது வட்டுடை உடுத்திருந்தான் என்று சிந்தாமணி கூறுகின்றது. தாய் முகங்காணாது கதறியழுத கன்றுகளும், அவற்றின் துயர் கண்டு தரியாத ஆயர்களும் இன்புறும் வண்ணம் பசுக்களை மீட்டுத் தந்த சீவகனை "வட்டுடைப் பொலிந்த தானை வள்ளல்" என்று அக் காவியம் வியந்து புகழ்கின்றது. முழந்தாள் அளவாக வீரர் உடுக்கும் உடையே வட்டுடையாகும்.[11] விற்படையில் கை தேர்ந்த வீரர் தேர்ந்த வில்லிகள் என்று பெயர் பெற்றார்.

## வீரமுரசு

தமிழ்நாட்டு முடிமன்னர்க்கு மூன்று முரசம் உண்டு. ஒன்று நீதி முரசு; மற்றொன்று கொடை முரசு; இன்னொன்று படை முரசு. செம்மையின் சின்னம் நீதி முரசம்; வண்மையின் சின்னம்

11. சீவக சிந்தாமணி, 468. "வட்டுடை—முழந்தாள் அளவாக வீரர் உடுக்கும் உடை விசேடம்" என்றார் நச்சினார்க்கினியர்.

கொடை முரசம்; ஆண்மையின் சின்னம் படை முரசம்.

வெம்மை வாய்ந்த புலியை வீறுடன் தாக்கிக் கொம்பினால் பீறிக்கொன்ற பெருங்காளையின் தோலாற் செய்யப்படுவது வீரமுரசம். போர் ஒடுங்கிய காலங்களில் அது அரண்மனையில் ஒரு மணி மஞ்சத்தில் வீற்றிருக்கும். மன்னன் படையெடுக்கும் பொழுது அம் முரசம் மாளிகையினின்றும் எழுந்து முன்னே செல்லும்.

## இசைக் கருவிகள்

போர்க்களத்தில் வீர வெறியூட்டும் இசைக் கருவிகள் பல இருந்தன. பறையும் பம்பையும், திட்டையும், தடாரியும், முழவும் முருடும், கரடிகையும் தண்டியும் அத் தகைய கருவிகள்.[12] அவற்றின் பெயர்கள் ஒலிக்குறிப்பால் அமைந்தனவாகத் தோன்றுகின்றன. பம், பம் என்று ஒலிப்பது பம்பை; முர் முர் என்று ஒலிப்பது முருடு; கரடி போல் கதறுவது கரடிகை. இவ் இசைக் கருவிகள் ஒன்று சேர்ந்து ஒலிக்கும்பொழுது வீரரது தலை சுழன்று ஆடும்; நரம்புகளில் முறுக்கேறும்; போர் வெறி பிறக்கும்; வீரம் சிறக்கும்.

## மறவர்

மனத்திண்மை வாய்ந்த வீரரை மறவர் என்று அழைத்தனர் பழந்தமிழர். அவர் கல்லெனத் திரண்ட தோளர்; கட்டமைந்த மேனியர்; முறுக்கு மீசையர், தருக்கு மொழியினர்; வீறிய நடையினர்; சீறிய விழியினர்.

---

12. போர்க்களத்தில் முழங்கும் கருவிகளை ஒரு பாட்டிலே தொகுத்துரைத்தான் வில்லி. அதனை வில்லி பாரதம், பதினேழாம் போர்ச் சருக்கத்திற் காண்க.

"புகழ் எனின் உயிரும் கொடுப்பர்; பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்" [13]

## பேராண்மை

போர்க் களத்தில் முன் வைத்த காலைப் பின் வைத்த லறியாத மறவரே சுத்த வீரர். தம்மை நோக்கி வரும் படைக் கலத்தைத் துச்சமாகக் கருதுவது அவர் இயற்கை. படைக்கலம் வரும் போது விழித்தகண் இமைத்தல் அவர் வீரத்திற்கு இழுக்கு.[14] அன்னார் மாற்றாரது படைக்கலத்தாற் பெற்ற வடுக்களைப் பொன்னினும் மணியினும் மேலாகப் போற்றுவர்; அவற்றைப் புகழின் சின்ன மாகக் கருதிப் பெருமை கொள்வர்.

## தழும்பன்

முன்னாளில் தழும்பன் என்ற பெயருடைய தலைவன் ஒருவன் தமிழ் நாட்டில் வாழ்ந்தான். அவன் முகத்திலும் மார்பிலும் அடுக்கடுக்காக வடுக்கள் அமைந்திருந்தன. வேலாலும் வில்லாலும் மாற்றார் எழுதியமைத்த வீரப்படம் போல்

---

13. புறநானூறு-182,

14. "விழித்தகண் வேல் கொண்டு எறிய அழித்து இமைப்பின், ஓட்டன்றோ வன்கணவர்க்கு" என்றார் திருவள்ளுவர். பகைவர் எறிந்த வேல் தன்னை நோக்கி வரும் போது கண்ணிமைத்தல் தோல்வியாகும் என்பது இக் குறளின் கருத்து. தமிழ் நாட்டுச் சிறுவர்கள் ஆடும் விளையாட்டில் இக் கருத்தை இன்றும் காணலாம். "எனக்குப் பயப்படுவாயா: மாட்டாயா" என்று ஒருவன் கேட்பான். "பயப்படமாட்டேன்" என்று மற்றவன் சொல்வான். "அப்படியானால் கண்ணை விழித்துக்கொண்டு என் முன்னே நில்" என்பான். அப்படி மற்றவன் நின்றவுடன் இவன் தன் இரு கைகளையும் ஓங்கித் தட்டுவான். அப்போது அவன் கண்ணை மூடி விழித்தால் தோல்வி; கண்ணிமையால் நின்றால் வெற்றி.

விளங்கிற்று அவன் கட்டமைந்த மேனி. பகைவர் படைக்கலத்தால் உழுது வீரம்விளைத்த உடம்பினைப் பார்த்துப் பார்த்து இன்புற்றான் அவ் வீரன்; ஒவ்வொரு தழும்பின் வரலாற்றையும் பேசிப் பேசிப் பெருமிதம் அடைந்தான். நாளடை வில் அவனுடைய இயற் பெயர் மறைந்து போயிற்று. தழும்பன் என்ற சிறப்புப் பெயரே அவற்குரியதாயிற்று. தமிழ்ப் பெருங் கவிஞராகிய பரணர் முதலியோர் அவன் பேராண்மையை வியந்து பாடினர். [15]

## புலிப்பல்

போர் ஒழிந்த காலங்களில் கருங்கை மறவர் காட்டினுள்ளே போந்து கடும் புலிகளைத் தாக்கு வர்; அவற்றின் வாயைக் கிழிப்பர், பற்களைத் தகர்ப்பர்; வெற்றிப் பரிசாகிய அப் பற்களைக் கோத்துக் தம் குல மாதர்களுக்கு அணிகலனாகக் கொடுப்பர். அதுவே மறக்குடி மாதர் மதித்த நற்பரிசு.

> "மறங்கொள் வாய்ப்புலி வாய் பிளந்து பெற்ற
> மாலை வெண்பல் தாலி"

என்று பழந்தமிழ்க் கவிதை அதன் பெருமையைப் பாடிற்று. [16]

## புலிகடிமால்

முன்னாளில் கடும்புலி வாழும் காட்டிலே முனி வர் ஒருவர் தவம் புரிந்தார். அவர்மீது பாய் வதற்குப் பதி போட்டது ஒரு பெரும் புலி. வீரம்

---

15. பெரும் புண்ணால் அழகு பெற்ற தழும்பன் என்ற கருத்தமைத்துப் பாடினார் பரணர். "இரும்பாண் ஒக்கல் தலைவன், பெரும்புண் ஏர் தழும்பன்—" நற்றிணை, 300. நக்கீரரும் இவனைப் பாடினர்.

16. சிலப்பதிகாரம். வேட்டுவ வரி, 27-28.

வாய்ந்த தமிழ் மகன் ஒருவன் அப்போது அவ் வழிப் போந்தான்; புலிக்கும் முனிவருக்கும் இடையே பாய்ந்தான். அவ் விலங்கைக் கொன்று முனிவர் உயிரைக் காத்தான். அன்று முதல் 'புலிகடிமால்' என்று தமிழகம் அவனைப் புகழ்வதாயிற்று. அவன் குடி வழியில் வந்த தலைவர்க் கெல்லாம் அது பட்டப் பெயராக வழங்கிற்று.[17]

## வீரப் பெயர்

இன்னும் அந் நாளில் பல வகையான வீரப் பெயரிட்டு வாழ்ந்தனர் தமிழர். வேங்கை மார்பன் என்பது ஒரு சிற்றரசன் பெயர். அச் சொல்லிலே வீரம் வீறுகின்றது. இன்னும் விறல் மிண்டன், கோட்புலி முதலிய பெயர்களும் ஆடவர் பெயர்களாக அமைந்தன.[18] சிங்கன் என்ற பெயரும் அக்காலத்தில் வழங்கிற்று. பொதிய மலைக் கருகே சிங்கன் என்ற தலைவனால் ஆளப்பட்ட பாளையம் சிங்கன் பட்டி என்று பெயர் பெற்றது. புலமை சான்ற திருவள்ளுவரின் நண்பராகத் திகழ்ந்த தமிழ்ப் பெருமகன் ஏலேல சிங்கன் என்னும் பெயர் பெற்றிருந்தான் என்பர். இவ்வாறு வீரப் பெயர் பூண்டு, வீரம் விளைத்தனர் பண்டைத் தமிழர்.

## கொற்றவை வழிபாடு

தமிழ் வீரர் வணங்கிய தெய்வம் கொற்றவை ஆகும். வெற்றி தரும் தாயே கொற்றவை என்று பெயர் பெற்றாள்.

---

17. புறநானூறு. 201.

18. "அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட புலிக்கும் அடியேன்"

சுந்தரமூர்த்தி தேவாரம்-திருத் தொண்டத் தொகைப் பதிகம்.

"சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட்கொற்றவை"[19]

யின் கோயில் தமிழ் நாட்டுப் பாலை வனங்களிலும் மலைகளிலும் சிறந்து விளங்கிற்று. ஆனை மலைத் தொடரில் உள்ள அயிரை என்னும் குன்றின் மீது கொற்றவையின் கோயில் ஒன்று முற்காலத்தில் இருந்தது. மன்னரும் மறவரும் அங்கே குருதிப் பலி கொடுத்து வழிபாடு செய்தார்கள். நாளடைவில் அயிரை மலை என்ற பெயர் ஐவர்மலை என மருவிற்று. பஞ்ச பாண்டவர் என்னும் ஐவர்க்கும் உரியது அம் மலை என்ற கதை எழுந்தது. அதற்கு இசைய அங்கிருந்த கொற்றவை ஐவர்க்கும் தேவியாய பாஞ்சாலி என்று அழைக்கப் பெற்றாள்.[20]

## வீரத் தாய்

வீரத்தைப் பெண்ணாக வழிபட்ட பெருமை தமிழருக்கு உரியதாகும். இம் மாநிலத்தில் ஆதி சத்தியாக அமைந்தவள் கொற்றவை. பழமைக்குப் பழமையாய்த் திகழ்பவள், அவளே. தமிழகத்திற் படை வீடு கொண்டு அருளும் வீர முருகனை ஈன்ற தாய் அவளே.[21] அரந்தை கெடுத்து வரம் தரும் திறம் வாய்ந்தவள் அவளே.

---

19. சிலப்பதிகாரம். வேட்டுவ வரி. 63-64.

20. 'சேரன் செங்குட்டுவன்', ப, 181. பழநியிலிருந்து ஏழு மைல் தூரத்திலுள்ள ஐவர் மலையில் நூற்று அறுபதடி நீளமுள்ள குகையும், பழங் கோயிலும் உள்ளன. M. M. 111, 724.

21. திரு முருகாற்றுப்படை, முருகனை "வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவன்" என்றும், "பழை யோள் குழவி" என்றும் குறிக்கின்றது.

# 6. வீரத் தாய்மார்

[இராவ்சாகிப் மு. இராகவையங்கார்]

நம் புராதன நாடான பரதகண்டம், முற்காலத்தே பொருட் செல்வம், உணவுப் பொருள் முதலியவைகளுக்கு நிலைக்களமா யிருந்தது போலவே, வீர லக்ஷ்மி மகிழ்ந்து விளையாடற்குரிய களமாகவும், விளங்கிய தென்பதற்கு எண்ணிறந்த உதாரணங்களுண்டு. இச்செய்தி, இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களாலும் பிறவற்றாலும் எளிதிலுணரப்படும். இவ்வாறு வீரச் செயல்களுக்குப் பேர்போன பூமியாக நம் தேசம் விளங்கியதற்கு அநேக காரணங்கள் கூறலாம். ஆயினும், அவை எல்லாவற்றினுஞ் சிறந்த காரணமாகக் கூறத்தக்கது, அந்நாளில் தோன்றிய தாய்மாரின் பெருமையே யாகும். தாய்மார் மட்டும் அறிவும் ஆற்றலு முடையவராய்த் தம் மக்களை நல்ல வழிகளிற் கவலையோடு பழக்கி வருவாராயின் அம் மக்கட் கூட்டம் உலகத்தே பெருமையும் புகழும் பெற்று விளங்கத் தடை என்னை? தாய்ப்பாலோடு தீரமோ வீரமோ தியாகமோ கலந்து ஊட்டப்படுமாயின், அவை யென்றும் அழியாது உயர்வும் உறுதியும் பெறுமென்பது திண்ணம். "இளமையிற் கல்வி சிலையி லெழுத்து." "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பவை முதுமொழிகள் அன்றோ? அத்தகைய தாய்மார்களையுடைய தேசங்களே உலகத்தார் கண்முன்னே உயர்ந்து தோன்றுவன. உதாரணமாக — ஜப்பான் தேசத்தை எடுத்துக் கொள்வோம். சமீபத்தில் நடந்த

இரஷிய — ஜப்பானியப் பெரும் போரிலே, ஜப்பானியர் உலகம் வியந்து புகழத்தக்க வெற்றியை அடைந்த செய்தி நாமறியாத தன்று. தேச வளவிலும் ஜனத்தொகையிலும் தம்மினும் மிகப் பெரிய இரஷியருடன் எதிர்த்து ஜப்பானியர் வெற்றி பெற்றதற்கு வேறு காரணங்களுண்டேனும், முக்கிய மானது, அவர்கள் தாய், தந்தையரால் குழவிப் பருவமுதலே பெற்றுவந்த வீரப்பயிற்சி யென்றே தெரிகின்றது. ஜப்பானியச் சிறுவன் கொஞ்சிப் பேசும்படி, பெற்றவளால் முதலிற் கற்பிக்கும் வார்த்தைகள்—தேசாபிமானமும் தியாகமுமாகும். அவனது விளையாட்டுப் பொருள்கள் யுத்தாயுதங்களின் போலிகள். அவனுக்குப் போதிக்கப்படும் முதற்பாடங்கள் — அவ்வாயுதங்களை உபயோகிக்கும் முறையும், தீரமும், தன்மறுப்பும், பிற வீரக்குணங்களுமே. அவன் சிறுவயதிற் கற்றுக்கொண்டவை. தன்னாட்டின் நன்மைக்காக உயிரைவிடுவதே பெருங்கீர்த்தி யென்பதும், மானங்கெடவரின் மரணம் உயர்ந்தது என்பதுமே. இத்தகைய பயிற்சி சிறு பருவ முதலே நிகழ்ந்து வருமாயின், அந்த ஜனசமூகத்தை வெல்ல வல்லவர் உலகில் யார்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதன்றோ? இவ்வுண்மையை யறிந்து நடத்தி ஜப்பானாட்டின் சரித்திரத்தை உயர்வுபெற வைத்தவர், முக்கியமாக, அந்நாட்டுத் தாய்மார்களென்றே சொல்ல வேண்டும். அத்தாயர் தம் மக்களை ஒருங்கு கூட்டித் தைரியங்கூறிப் போர்க்கனுப்பி வந்ததும், யுத்தகளத்திற் சிறிதும் தளர்வின்றிப் போர்புரிய

வும், சமயம் நேரும் போது, நாட்டின் பொருட்டு மகிழ்ச்சியுடன், உயிரை விடவும் கடிதமூலம் எழுதித் தம்மக்களை ஊக்கப்படுத்தி வந்ததும் நாம் படித்துங் கேட்டும் உள்ளனவேயாம். இன்னும் யுத்தகாலத்தில் ஜப்பானியத் தாய்மார்கள் காட்டிய தேசாபிமான வீரச் செயல்களை அப்போது வெளி வந்த இரஷ்யோ — ஜப்பானிஸ் — வார் என்னும் புத்தகத் தொகுதிகளிற் பரக்கக் காணலாம். இவ் வரலாறுகள் இக்காலத்தவரான நமக்கு அருமை யுடையனவாகத் தோன்றினும். நமது பழைய சரிதங்களை ஆராயின், நம் நாட்டிலும் அத்தகைய வீரத்தாயரும், வீரமக்களும் மிகுதியாக இருந்தனர் என்பது தெரியலாம். மேற் கூறிய உண்மைகளை யெல்லாம் முற்று மறிந்து நடத்தவல்ல தாய்மார் களாகவே பண்டை மகளிர் இந் நாட்டில் விளங் கினர் என்பதற்கு வட நூல்களிலும் தமிழ் நூல் களிலும் பற்பல மேற்கோள்கள் உள்ளன. அவற்றில் வடமொழியிலுள்ள சிறப்பியல்களை மிகுதியாக அறிஞர்வாய்க் கேட்கக் கூடுமாதலின், தென் மொழியிலும் அன்னோரைப் பற்றி அமைந்த சிறப்பியல்புகளை மட்டும் நம்மவரறிய இங்கே கூறுவேன்.

தமிழ் மொழியிலுள்ள பழைய நூல்களாகிய புறநானூறு முதலியவற்றில் வீரச்சுவையே ஏனைய சுவைகளினும் மிகுதியாகக் காணப்படுவது. அவ் வீரம் பற்றி நிகழ்ந்த அற்புதச் செயல்களை யெல் லாம் கூறுவதற்கு இஃது இடமன்று. ஆயினும் அக்காலத்தே தாய்மார்களாற் சிறந்த வீரர்கள் எவ்வாறு உண்டாக்கப்பட்டார்கள் என்பது மட்டில் கவனிக்கத் தக்கது. இவ் வீரத் தாயர்க்கு இருந்தனவாக நூல்களிற் காணப்படும் குண விசேடங்களை நோக்கும் போது, உலக சரித்

ரத்திலேயே இத்தகைய பெருமை காண்டற்கரியது என்று தோன்றுமென்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டில் முற்கால முதலே இவ் வீரப் பெண்டிர்களின் பெருமையைப் புகழ்ந்து வந்த வழக்கமும் இருந்தது. புறப்பொருட் டுறைகளில் இது 'மூதின் முல்லை' என்று கூறப்படும்.

இவ்வீரப் பெண்டிரின் செய்கைகளாகத் தமிழ் நூல்களிற் கண்ட பாடல்கள் முழுதும் நல்லிசைப் புலமைவாய்ந்த பெண்மணிகளாலேயே பாடப்பட்டிருத்தலும் குறிப்பிடற் பாலது. பொன் முடியார் என்னும் பெண்புலவர், தாய், தந்தை, அரசன், மகன் முதலியவர்க்குரிய கடமைகள் இன்னதென்பதை அடியில் வருமாறு கூறுகின்ருர்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிருவாள் அருஞ்சம முருக்கித்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

இப்பாட்டால் அக்காலத்து வீரத்தாயரது மனநிலை இத்தகைய தென்பது தெளியப்படும். "என்றலைக் கடனே" என்பதனுல், பொன்முடியார் தம்மையே தாயாகக் கூறிக் கொள்ளுதல் காணலாம். பொருள் வெளிப்படை. இது போலவே தகடூர் யாத்திரை என்னும் பழைய நூலிலுள்ள அரிய பாட்டொன்று வருமாறு:—

"தருமமும் ஈதேயாந் தானமும் ஈதாம்
கருமமும் காணுங்கால் ஈதாம்—செருமுனையிற்

கோள்வாண் மறவர் தலைதுமிப்ப என் மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்.*

இப்பாட்டில், தாயொருத்தி 'தன் மகன் யுத்த களத்தே சாகப் பெற்றால், அதுவே தர்மமும் தானமும் கர்மமுமாகும்' என்று கூறிய அற்புதச் செய்தி குறிக்கப்பட்டுள்ளது. தன் அருமை மகன் போரில் மடிதல், நாட்டின் மேம்பாடு கருதியதேயன்றித் தன்னலம் கருதியதன்றுதலால் அச்செயலினுஞ் சிறந்த தர்மமும் தியாகமும் கர்மமும் பிறவில்லை என்பது கருத்து. எவ்வளவு உயர்வும் பெருமையும் கொண்ட சிந்தை முற்காலத்துப் பெண்டிர்க்கு இருந்ததென்பது இப்பாட்டை நோக்குவார்க்கு விளங்கும். இனி, மற்றொரு வீரத்தாயைப் பற்றிப் பூங்கணுத்திரை என்னும் பெண்பாற் புலவர் புறநானூற்றிலே பாடுகின்றார். "கொக்கின் இறகுபோல நரைத்த கூந்தலையுடைய முதியவள், தன் புதல்வன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும் மடிந்தான் என்னுஞ் செய்திகேட்டு அவனைப் பெற்றபோது தானடைந்த மகிழ்ச்சியினும் அதிக மகிழ்ச்சியை அடைந்தாள்" என்பது அவர் பாட்டின் கருத்து. இதனால் அக்காலத்தே வீரத்தாயரான பெண்டிர், தம் புதல்வரைப் பெறுவது ஓர் அற்புத வீரச்செயலையேனும் அவரிடம் கண்டு மகிழ்தற்கே என்று கருதினவரென்பதும் அவர் வீரச் சாவில் அப்பெண்டிற்கு மன மகிழ்ச்சியேயன்றித் துக்கமில்லை என்பதும் நன்கு விளங்கும். இப்பாட்டில், தாய் கண்ட அதிசய வீரச்செயலாவது, தன் சிறுவன் ஒரு பெருங்களிற்றைக் குத்திக் கொன்றதாகும். "வானரை கூந்தல் முதியோள் சிறுவன்" என்பதனால், நெடுங்காலத்திற்குப் பின்

* புறத்திரட்டு.

ஒரே புத்திரனைப் பெற்றவள் அவள் என்பது பெறப்படும். 'தன் புத்திரன் மூடனாகவே பல்லாண்டு உயிரோடு இருந்தாற் போதும்' என்று கருதும் இக்காலத்து மடவாரியல்பும் மேற்குறித்த வீரத்தாயர் இயல்பும் எவ்வளவு மாறுபட்டுள்ளன! இனி, வீரத்தாய் ஒருத்தி தன் ஒரு மகனையே போர்க்கு விடுகின்ற மாட்சியை, ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண் புலவர் வியந்தும் இரங்கியும் அடியில் வருமாறு கூறுகின்றார்:—

"கெடுக சிந்தை: கடிதிவள் துணிவே!
மூதிற்பெண்டி ராதல் தகுமே.
மேனாள் உற்ற செருவிற்கிவள் தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே;
நெருநெல் உற்ற செருவிற்கிவள் கொழுநன்
பொருநரை விலங்கி ஆண்டுப்பட் டனனே;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇ
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."*

இதன் கருத்து;— (ஒரு தாய்) முன்பு அவள் தமையன் யுத்த களத்தில் யானையை யெறிந்து இறந்து போயிருப்பவும், சமீபத்தில் நடந்த போரில் தன் கணவன் எதிரிகளைக் கொன்று தானும் மடிந்து ஒழியவும், இவற்றிற்காக மனத் தளர்ச்சியின்றி, எதிரிகளின் யுத்தப்பறை ஒலிப்பதைக் கேட்டு மகிழ்ச்சி மிகுந்து, சிறுவனைத் தழுவி, அவற்கு ஆடையணிவித்து, அவன் குடுமியை எண்ணெயிட்டுச் சீவி முடித்து, தான்

* புறம்.

ஒரே மகனை உடையளாயிருந்தும் சிறிதும் மனங் கவலாது, 'போர்க்கள நோக்கிச் செல்க' என்று அவனை அனுப்புகின்றாள். இச் செய்கையைக் கண்ட என் மனம் கெடுவதாக. இவள் துணிவு கடுமையானது. பழைய வீரக்குடியிற் பிறந்தவ ளென்பது இவட்கே தகும். என்னே வீரம்! இதனினும் வியத்தகு செய்தி கேட்டதுண்டோ!

இனி, காவற்பெண்டு என்னும் பெண்புலவரை நோக்கி ஒருவன் "நும் மகன் யாண்டுளான்?" என்று கேட்ப, அதற்கு அவர் கூறிய அழகிய பாடலாகப் புறநானூற்றிற் காணப்படுவது பின் வருமாறு:—

"சிற்றில் நற்றூண் பற்றி நிம்மகன்
யாண்டுள னோவென வினவுதி; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்; ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே."

இதன் பொருள்:— சிறிய வீட்டிலே நல்ல தூணைப் பிடித்துக்கொண்டு, உன் மகன் எங்குள் ளான் என்று கேட்கின்றாய்; என்னுடைய மகன் எவ்விடத்திருப்பினும் யான் அறியேன். புலி தங்கிப் போன மலைக்குகையே போல அவனைப் பெற்ற வயிறோ இது; அவன் யுத்தகளத்திலே தோன்றுவான்; ஆண்டுச்சென்று காண்பாயாக- என்பது. இதனால், இப்பாட்டுப் பாடியவர் மறக் குடிப் பெண்டிராதல் வேண்டுமென்பதும், புலி யொத்த போர் வீரனை மகனாக உடையவர் என்ப தும், அத்தகைய வீரமகனைப் போர்க்களத்தே போக்கிய பின் அவனைப் பெற்ற தம் வயிற்றைப் புலிகுடைந்துபோன கன் முழையாகக் கருதினா ரென்பதும் விளங்கும். இது பாடியவர் மனநிலை

எவ்வளவு அருமை பெருமை வாய்ந்துளது! வீர மக்களைப் பெறுவதில், பழைய காலத்துப் பெண்டிர் அடையும் மகிழ்ச்சியும் பெருமிதமும் இத்தன்மையன என்பது இதனால் நன்கு விளங்கும்.

இனி, தம் வீரமக்கள் போர்க்குச்சென்று அங்கே சிறிது மானத்தாழ்வான செயலைச் செய்ததாகத் தெரியவரின், அவர் தாயார் அம் மக்களை மிகச் சினந்து வெறுப்பர். ஒரு தாய், தன் மகன், பகைக்களிற்றின் மேலே வேலை யெறிந்து, அவ்வேலைத் திரும்பப்பெறும் ஆற்றலில்லாது வெறுங்கையனாய்ப் புறங்கொடுத்து மீண்டது கண்டு, "வாதுவல் வயிறே" என வரும் பாட்டைக் கூறி மிகவும் வெறுத்தனள்.

இப்பாட்டின் கருத்தாவது: பகையரசரைப் போரில வென்று அக்களத்திலே தானும் இறந்துபடாமல், யானைமுகத்தெறிந்த தன் வேலை அதனோடே போகவிட்டு நீ புறங்கொடுத்துத் திரும்பினை; இதனால் எமது முன்னோர் செய்யாத பெரும் பழியை விளைத்த மூடனாகிய உன்னைப் பெற்ற என் வயிற்றை அறுப்பேன், அறுப்பேன் என்பது. இவ்வாறு நிகழும் வீரத்தாயர் கூற்றுத் தொல்காப்பியத்தில் "தாய் தப வந்த தலைப்பெயனிலை" என்று கூறப்பட்டுள்ளது. அஃதாவது: "போர்க்களத்துப் பொருதுமாயும் சிறப்பிற்றீர்ந்து தன் மகன் புறங்கொடுத்தானாக அது கேட்டுத் தாய் சாக்காடு துணிந்து சென்ற மகனைக்கூடும் கூட்டம்" என்பர் நச்சினார்க்கினியர். இவ்வாறு, தமிழ்நாட்டு வீரப் பெண்டிர் செயல் பழங்காலத்தே புகழ்ச்சிக்குரியதாக இருந்ததாலன்றோ, அவர்களைப்பற்றிப் பழைய இலக்கண நூல்களும் விதி கூறு முகத்தாற் பெருமை கூறத் தலைப்பட்-

டன? போர்க்களத்தே தங் குடிக்குச் சிறிது மானங்கெடவரும்போதும் அக்காலத்துப் பெண்டிரியல்பு இத்தன்மையதாயின், வேறு கெட்ட வழியால் தம் குடிக்கு வரும் இழிவை அவர்கள் எவ்வாறு கருதியவராதல் வேண்டும்? சோழவரசன் ஒருவனது ஒரே மகனுகிய உதயகுமரன் என்பான், மணிமேகலைமேல் வைத்த கழிபெருங் காமத்தனுகி, அவள் தனியே சோலையிலிருந்தபோது அவளிடம் செல்ல, அங்கே ஒரு விஞ்சையனுல் அவ்வரச குமாரன் கொலையுண்டனன். இச் செய்தியைக் கேள்வியுற்ற சோழன், அம்மகன் தன் பெருங்குடிக்கு ஓரே வழித்தோன்றலா யிருப்பவும், அவனது இழிவான செய்கையை வெறுத்து அவன் இறப்பைப் பொருட்படுத்தாது.

"மகனை முறை செய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம்செவி உறுவதன் முன்னம்
ஈங்கிவன் தன்னையு மீமத் தேற்றி

கொளுத்திவிடுக" என்று ஆணையிட்டனன் என்று சொல்லப்படுகின்றது. அன்றியும், அச்சோழன் மனைவிக்கு, அவள் மகனது இறப்பை ஒருத்தி கூறும்போது,

"தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்று
என்னெனப்படுமோ நின்மக னிறந்தது
மன்பதை காக்கும் மன்னவன் தன்முன்
துன்பங் கொள்ளேல்"

என்று இறந்த மகன் செயலை இழிவுபடுத்தி, அவளைத் தேற்றுவாளாயினள். இவற்றுல் ஒழுக்கங் கெட்ட மக்களை, அவர்கள் எத்தனை உயர் பதவி

யிலிருப்பினும், அரசரும் குடிகளும் பெரிதும் வெறுத்து வந்தமை புலப்படும்.

இவ்வாறு, தமிழகம், முன்னாளில் அறிவாற்றல் மிக்க வீரத் தாய்மார்களை உடையதாகி, அருமையும் பெருமையுங்கொண்ட செயல்களுக்குரிய நிலைக்களமாயிருந்தது. அவர்கள் பெற்ற வீரர்கள் குடிகளின் நலத்தின் பொருட்டும் அந்நாட்டு அரசன் பொருட்டும் உயிரை விடுவதில் பயிற்சி மிக்கவர்களாய், சமய நேர்ந்த போதெல்லாம் அவ்வாறு செய்து, தமிழகத்தின் பெருமையை மலைமேலிட்ட விளக்கைப் போல் விளக்கி வந்தனர். சங்கநாளில் தமிழ் நாட்டின்மேல் வடவரசர் படையெடுத்து வென்ற செய்தி கேட்கப் படுதலே அரிது, ஆனால் தமிழரசர் வடவருடன் போர் புரிந்து வெற்றி பூண்ட விஷயம் காணலாம். இதன் காரணம், அக்காலத்து விளங்கிய தமிழர் வீரத்தின் மாட்சிமையேயாம். அத்தகைய வீரத்தை வளர்த்து வந்தவர் யாவர்? தமிழ்த் தாயர்களே என்க. அச்சங்ககாலத்துக்குப் பின்பு வீரத்தாயர்களும் உயிரை இழக்கவல்ல வீர மக்களும் குறைந்து வந்தமையால் வட வேந்தர் பலர் தமிழகத்தில் பிரவேசிக்கத் தொடங்கிய செய்திகள் கேட்கப்படுகின்றன. அக்காலத்துக்குப் பின்பு வடவர் தமிழர்க்குள் நிகழ்ந்து வந்த போர்கள் அளவு படுவன அல்ல. களப்பிரர் என்றும் பல்லவரென்றும் இரட்டரென்றும் சளுக்கரென்றும் கூறப்படும் வட வரசர் கூட்டம் தமிழகத்தைக் கைப்பற்றலாயின. அதனால் தமிழ் வேந்தராகிய சேர சோழ பாண்டியரும் பிறரும் தம் பழம் பெருமை குன்றினர். முடிவில், ஆண்மையும் தியாகமுமாகிய பயிற்சிகள் குறையத் தமிழர் வீரம் முற்றும் தலை கவிழ்ந்தது. இக்காலத்தவராகிய நமக்கோ, மேலே கூறி வந்த அற்புத வீரச் செயல்களெல்லாம் வெறுங் கற்பனைக் கதை

களாகவே தோற்றும் என்பது திண்ணம். ஏனெனில், நம்மவரது மன நிலை அவ்வளவு குன்றியொழிந்தது. கால சக்கரத்தின் சுழற்சியால் உலகத்தில் ஓரிடத்திற்குள்ளே உண்டாம் அற்புத மாறுதல்கள் இவை.

---

# 7. தமிழர் வாணிபம்

## (ஒன்பதாம் நூற்ருண்டு முதல் பதினுன்காம் நூற்ருண்டு வரை)

[ச. க. கோவிந்தசாமிப் பிள்ளை]

### தோற்றுவாய்

இக்கட்டுரை, பழந்தமிழ் நாட்டின் வாணிபத்தைப்பற்றி ஆராய எழுந்தது. 'தென்னிந்தியா' என்ற சொற்ருெடர், வடுக கன்னட நாடுகளையும் தன்னகத்தேயுடையதாயினும், இவண் அதன்கண் அடங்கிய தமிழகம் ஒன்றனையே குறிக்கும். இம் மூன்றும் ஒழிந்த மலையாளத்தைச் சொல்லாது விடுத்தது, பண்டைக காலத்தில் மலையாளம் தமிழகத்துக்குப் புறம்பல்லவென்பது கொண்டேயாகும்.

தமிழகத்தின் வணிக வரலாறு மிகப் பழமை உடைத்து. இந்தியப் பெருங்கடலில் கலஞ் செலுத்தி எகிப்து, பாபிலான், சால்டியா முதலான நாகரிக முயர்ந்த நாடுகளோடு பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழர் பண்டம் மாற்றி வாநதனர்.[1] அதற்கறிகுறியாக எகிப்து நாட்டிலும், சிற்ருசியாவிலும் (Asiaminor) மெசபடோமியாவிலும் மண்ணினுள் புதைந்திருந்தெடுக்கப்பட்ட பல சான்றுகள் இப்பொழுது நமக்குக் கிடைக்கின்றன. கி. பி. முதலாம் நூற்ருண்டிலிருந்து நான்காம் நூற்ருண்டுவரை, தமிழர் உரோமப் பேரரசோடு

1. P. T. S. Ayyangar's "History of the Tamils"

வர்த்தகம் செய்து வந்தனர்[1]. அதனால் தமிழர் அடைந்த செல்வம் கணக்கிட முடியாது. கிரேக்கரும், உரோமரும் பண்டைத் தமிழ் நூல்களில் எவனர் எனப்படுவோர். அவர்களுடைய வணிகத்தைப் பற்றி யெழுந்த நூல்கள் மூன்றுள. அவை யாவன, ஒரு கிரேக்க வர்த்தகன் எழுதிய "செங்கடற் செலவும்[2]" டாலிமி என்பான் எழுதிய "உலக நூலும்[3]", பிளினி என்பான் எழுதின "இயற்கைநூலு" மாம்[4]. இவ்வர்த்தகத்தைப் பற்றிய குறிப்புகளைச் சங்க இலக்கியங்களில் நாம் காணலாம். யவனருக்குப் பின்னர் இந்தியப் பெருங் கடல் வர்த்தகம் அராபி நாட்டார்க்குச் சொந்த மாயிற்று.

நாம் இவண் எடுத்துக்கொண்ட காலவரைக்கு முன்னர், பல்லவர் என்ற ஓர் அரசகுடியினர் தமிழகத்தை ஆண்டனர். அவர்கள் அரசாட்சியில் தமிழர் கீழ்த்திசையில் பர்மா, மலையம், சாவகம், சுமத்திரா, சீயம் முதலிய நாடுகளோடு வாணிகஞ் செய்து வந்தனர். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில், தமிழரின் பெருங்கலங்களும், காற்றைப் போல் வேகமுடைய அரபியரின் கப்பல்களும், சீனர்களின் "சங்" என்ற பெயரிய குன்றமன்ன நாவாய்களும் இந்தியப் பெருங்கடலிற் கூட்டங் கூட்டமாகக் கீழ்மேற்றிசைகளில் பாய்களை விரித்து அங்கு மிங்கும் சென்று கொண்டிருந்தன.

1. See Wsrmingtons' account of the Roman trade with India and Rawlingson's "Intercourse of India with the Western World"

2. "Periplus ot the Erythrean Sea"ed, Pehoff.

3. Ptolemy was an Alexandrian geogrpher.

4. Pliny's "Natural History".

## இக்கட்டுரையின் மூலங்கள்

இனி, நாம் எடுத்துக்கொண்ட ஐந்நூறு ஆண்டுகளில் தமிழர் நடத்திய வர்த்தகத்தைப் பற்றி எழுதுமுன், அதை யறிதற்கு இன்றியமை யாத மூலங்களை நாம் ஆராய வேண்டும். தமிழகத் தாரோடு வாணிகஞ் செய்த பல நாட்டாருள், அரபியரும் சீனரும் அவ்வணிகத்தைப்பற்றி நூல் கள் பல எழுதியுள்ளார். மற்றும், தென்னிந்தியா வில் யாத்திரை செய்த இருவர் தாம் கண்டவற்றை யும் கேட்டவற்றையும் தொகுத்துச் சிறந்த நூல் கள் இயற்றியுள்ளார். அவற்றை யொத்த நூல் கள் தமிழகத்தில் இதுகாறும் கிடைக்காது போயினும், அக்குறையைத் தீர்க்கச் சிறந்த கல் வெட்டுகளும், செப்புப்பட்டயங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

## தமிழகத்தின் வர்த்தகக் குழுக்கள்

நாம் கருதுகின்ற காலவரையறையில் வர்த்த கம் எவ்வண்ணம் நடந்தது; அது யார் கையில் இருந்தது என்ற வினாக்கள் ஒருவருக்கு எழலாம். அக்காலத்தில் ஒவ்வொரு வர்த்தகனும் தனித்த முறையில் தன் தொழிலை நடத்திவரவில்லை. வெளிநாட்டு வர்த்தகத்துக்கு முக்கியமாக விரிந்த முதலும், ஆட் கூட்டமும் இன்றியமையாதவை. வர்த்தகம் ஒருவரோ, இருவரோ பெரும் பொரு ளைச் செலவிட்டுச் செய்யக் கூடிய செயலன்று. அரபியா முதல் சீனம் வரையில் செய்யக்கூடிய வர்த்தக முறைகளில் தேர்ச்சி பெற்றோர் பலர் கூடி வர்த்தக நிமித்தமாகக் குழுக்கள் பல ஏற்படுத்தி யிருந்தனர். இக்குழுக்களை, ஐரோப்பிய நாடுகளில் மத்திய காலத்தில் நின்று நிலவிய 'கில்டு'

**Guild** என்று சொல்லப்பட்ட குழுக்களோடு ஒப்பிடலாம்.

## வர்த்தகக் குழுக்களும் பொதுமக்கள் சேவையும்

வர்த்தகமே பெருந்தனம் ஈட்டுவதற்குத் தக்க வழியென்பதும், எந்நாட்டிலும் வர்த்தகரே பெருந்தன மக்கள் என்பதும் யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடியதோர் உண்மை. பொருளைத்தேடி வறிதே புதைத்து வைக்காமலும், பயனற்ற தந்நலத் துறைகளில் செலவிடாமலும், பொதுமக்களின் நன்மைக்கே அவர்கள் செலவிடுவதை ஐரோப்பா, அமெரிக்கா தேயங்களில் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அது போலவே தென்னிந்தியாவில் அன்றும், சிறிதளவு இன்றும் பெரும்பணக் காரரான வர்த்தகர்கள் தாம் அரிதில் ஈட்டிய செல்வத்தைப் பொது நன்மைக்கே பயன்படுத்தினர்; பயன்படுத்துகின்றனர். நாம் மேலே அடிக் கடி யெடுத்தாண்ட கன்னடக் கல்வெட்டினின்றும் நாம் அறிவது என்னவெனின், அவர்கள் பலயோக பீடங்கள் சமைத்ததும், நான்கு சமயமும் ஆறு தர்சனங்களும் அறிந்த "முனி ஜனங்களுக்கு" உதவினதுமே. நாடாள் கோவுக்குப் பொன்னும் மணியும் குவியல் குவியலாய் ஈந்து அவர்கள், ஏழைமக்களின் வரிச்சுமையைத் தணித்தனர். பிற நாடுகளிலும் இந்துசமய முறைப்படி கடவுளை வணங்குவதற்குச் சாதனமாக பர்மா, சீயம் முதலான நாடுகளில் திருமாலுக்குக் கோயிலும் எடுத்து, குளமுந் தொட்டு தென்னிந்திய நாகரிகத் தைச் சென்றவிடமெல்லாம் பரவச்செய்தனர். அவர்களுக்கு எல்லாச் சமயங்களும் ஒன்றே என்

பது தானுரவி பட்டயத்தில் சபீர்இசோ[1] எடுத்த தெரசா பள்ளியைப் பாதுகாக்கும் தொழிலை[2] மணிக் கிராமத்தார் மேற்கொண்டதிலிருந்து நாம் அறியலாம்.

## அரசர்களும் வர்த்தகக் குழுக்களும்

தம் நாட்டு வர்த்தகர்கள் பிற நாட்டுக்குச் சென்று, அங்குள்ள அரசரின் பாதுகாப்பில் வர்த்தகஞ் செய்ய வேண்டுமானால், தாமும் அயல் நாட்டிலிருந்து தம் நாட்டைச் சேர்ந்து வர்த்தகஞ் செய்வோர்க்கு அடைக்கலம் அளித்தல் வேண்டும். அவ்விதம் வந்தடைந்த வர்த்தகர்கள் தத்தம் சமயநெறி பிறழாது ஒழுகுதற்கு, அரசர்களின் ஆதரவு வேண்டும். இத்தகைய உரிமைகளை நம் தமிழ் நாட்டரசர்கள் அவர்கட்குக் குறையாது கொடுத்தனர் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் தானுரவி சபீர் இசோவுக்கு கிறித்துவப்பள்ளி ஒன்றைக் கொல்லத்தில் எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுத்ததுமன்றி, பல இந்துத் தொழிலாளர்களின் குடும்பங்களையும் அப்பள்ளிக்குப் பணிசெய்யக்கொடுத்ததுவும் இவண் கூறத்தக்கது. கொச்சின் பட்டயத்தில் காணப்படும் சோசப்ரப்பான் என்ற யூதனுக்குச் சேரமான் பாஸ்கர ரவிவர்மன் கொடுத்த சலுகையும் இங்கே நோக்கத்தக்கது. இபன்—பதூதாவின் யாத்திரை நூலிலிருந்து, கோழிக்கோடு, கொல்லம் முதலான இடங்களில் முகம்மதியர்கள் மசூதிகள் இருந்தனவென்று நாம் அறிகிறோம்[3]. ஸ்ரீவிஷயம், ஸ்ரீவிஜயம், பாலம்பங்க்

1. இவண் ஒரு கிறிஸ்தவ வர்த்தகன்.
2. மணிக்கிராமம்—வர்த்தகக் கூட்டத்தார்க்கு அரசர்கள் கொடுக்கும் சிறப்புப் பெயர்.
3. 'Ibn-Batuta' (Broadway Travellers) pp 234, 235, 236

என்ற வேறுபட்ட பெயர்களையுடைய பேரரசு[1] ஒன்று, மலையம், சுமத்ரா, சாவகம் முதலான நாடுகளில் நிலவிய காலத்தில் அப்பேரரசில் தலைமை வகித்த சைலேந்திர குலத்தினரில் ஒருவனை மாறவிசயோத்துங்க வர்மன், சோழ நாட்டுத் துறைமுகமாகிய நாகபட்டினத்தில் தன்னாட்டு வர்த்தகர்களுக்காகப் புத்தப் பள்ளியொன்று கட்டுவதற்கு வயங்குபுகழ்வளவன், முதலாம் இராசஇராசனை வேண்டிக் கொள்ள, அவ்வேண்டுகோளுக்கு இணங்கினதும் அன்றி, இராசராசன் ஆனைமங்கலம் என்ற ஊரின் பெரிய வருவாயையும் அப்பள்ளிக்கு அளித்தனன்[2].

பிறநாடுகளுக்கு வர்த்தகத்தின் பொருட்டுச் சென்ற வணிகர்க்கு, அவற்றின் அரசரால் துன்பம் விளைந்த காலத்து அவர்களையும் அவர்கள் தொழிலையும் நிலைநிறுத்துவதற்காக தமிழ் நாட்டரசர்கள் படையெடுத்துச் செல்லுதல் உண்டு. முதலாம் இராசேந்திரன் ஸ்ரீவிஷய நாட்டை யாண்ட சங்கராம விசயோத்துங்கன் மேல் போர் தொடுத்தது, இடர்ப்படும் தன்னாட்டு வணிகரைக் காப்பாற்றுதற்கே என்று எண்ண இடமிருக்கிறது[3].

தமிழ்நாட்டின் வர்த்தகத்தைப் பரப்புவதற்கு, நந்தமிழ் அரசர் பிறநாடுகளுக்குத் தூதனுப்புதல்

1. "The Greater India Society Journal" Vol I pp 15 ff

2. South Indian Archaeology vol IV for Larger and Smaller Leiden grants-Edited by Burgess and Natesa Sastry

3. See Professor K. A. N. Sastri's "Colas" Vol. 1.

உண்டு. கி பி. முதல் நூற்றாண்டிலேயே பாண்டிய மன்னன் ஒருவன் உரோமப் பேரரசனை அகஸ்டஸ் என்பானுக்குத் தூது அனுப்பினதாகக் கிரேக்க நூலொன்று உரைக்கின்றது. அதுபோலவே சோழர்கள் பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் சீனத்துக்குத் தூது விடுத்தனர் என்று சீன நூல்கள் புகலும். கி. பி. 1015, 1020, 1033, 1077-ஆம் ஆண்டுகளில் சோழர்கள் தம் தூதர்கள் மூலம் விலையுயர்ந்த பரிசுகளைச் சீன அரசவைக்கு அனுப்பினர்.[1] இதிலிருந்து சோழர்கள் சீனப்பேரரசுக்குக் கட்டுப்பட்டவர் என்று முடிவு செய்தல் பொருந்தாத உரையாகும்; ஏனெனில், வர்த்தகத்தின் பொருட்டும் தூதர்களை விடுத்தல் உண்டு.

## தென்னிந்திய வர்த்தகரும் அரபியரும்

இந்தியப் பெருங்கடலில் வாணிபம் செய்தவர்களில் தலை சிறந்தவர் அரபியராம். அவர்களுடைய விரிந்த வர்த்தகத்திற்கு ஏற்றவண்ணம் அவர்கள் நாடும் இரண்டு பெரும் பூப்பகுதிகளுக்கு இடையே இயற்கையாக அமைந்திருக்கிறது[2]. யவனர் தமிழகத்தோடு வர்த்தகம் செய்யத் தொடங்கு முன்னரே அரபியர் நம் நாட்டோடு வர்த்தகம் செய்து வந்தனர். பருவக்காற்றுகளின் பயனை உலகில் முதல் முதல் அறிந்தவர்கள் அரபியரே. தென்மேற்குப் பருவக்காற்று வீசும் போது அரபியாவில் இருந்து புறப்பட்டுத் தென்னிந்தியாவை அடைந்து வர்த்தகம் செய்து பின் வட கிழக்குப்

1. Chaw-Jw-kua" pp 96 and f. n. 12 of p. 101.
2. "An Arab Account of India in the 14th-Century" by Otto. Spies, p 1.

பருவக்காற்ருேடு அவர்கள் தம் நாடு போய்ச் சேர்வர். முகம்மது நபி பிறக்கு முன்னரே அரபிய வர்த்தகம் மேற்கே ஸ்பெயினிலிருந்து கிழக்கே சீனம்வரை விரிந்தது. கி. பி. 300-ல் அரபியர்கள் கான்டன் என்ற சீனத் தலைநகரில் குடியேறி இருந்தனர் என்று சீன நூல்களிலிருந்து நாம் அறிகிருேம்[1].

முகமது நபி நிறுவின மதத்தைப் பரப்பின பின்னர் அரபிய வர்த்தகம் முன்னிலும் பன்மடங்கு தழைத்தோங்கிற்று. சர்-டி-ஆர்ஞல்டு என்பார் அரபியரின் வர்த்தக முன்னேற்றத்திற்குக் கீழ்க் கண்ட காரணங்களைச் சொல்லுகின்றனர்[2]:—

(1) முகமதுக்குப் பின் தோன்றின கலீப் என்ற பட்டம் பெற்ற அரசர்களின் கீழ் அரபியரின் ஆட்சி கிழக்கே சிந்து நதிக்கரையிலிருந்து மேற்கே அட்லான்டிக் பெருங்கடலின் கரை வரை அகன்றிருந்தது. அரசியலின் பொருட்டு அதிகாரிகள் அவ்விரிந்த நிலப்பகுதியில் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அதனுல் அரபிய வர்த்தகம் கடல் போல் பரந்தது. "வர்த்தகம் கொடியைப் பின் பற்றுகிறது" என்ற ஆங்கிலப் பழமொழியின் உண்மை இவண் காணலாம்.

(2) முகம்மதிய மதமும் இவ்விதச் சிறப்புக்கும் பிரிவுக்கும் தூண்டுகோலாய் இருந்தது. அம்மதத்திற்கு அதன் புறம்பாய் உள்ளோரைக் கொண்டுவர வேண்டும் என்ற கட்டளையை முகமது பிறப்பித்த

---

1. "Chaw-Jw-kua" p. 4.
2. pp 90—93 of Arnold's chapter on "Arab-Travelers and Merchants" in "Travel and Travellers of the Middle Ages" edited dy A. F. Newton.

வுடன், முகமதிய அரசர்களும், சாதாரண மக்களும் தம் மதத்தைப் பரப்பினர். மதம் விரிந்ததனுல் வர்த்தகமும் விரிந்தது.

(3) மேற்சொன்ன இரண்டிலும் சிறந்த காரணமாவது முகம்மதிய மக்களிடத்து வர்த்தகர் களுக்கு இருக்கும் சீரும் செல்வாக்குமே. "தலை சிறந்த மதாசாரியர்க்கு ஒப்பானவர் வர்த்தகர்கள்" என்றும், "அல்லாவின் உண்மைத் தொண்டர்" என்றும் முகமது நபியே கூறியுள்ளார். "ஒருவன் நல்ல நெறியுடையனு அல்லவா என்றறிதற்கு வர்த்தகமே உண்மையான சோதனை. பண்ட மாற்றுச் செய்யும் போதே ஒருவனின் அன்பும், சமயதிட்பமும் வெளியாகும்" என்றும். "நான் இறக்கவேண்டி இருந்தால், அங்காடித்தெருவில் உவகையுடன் இறப்பேன்" என்றும் **காலிப் ஒமார்** கூறுமிடத்து, அரசர்கட்கும் வர்த்தகத்தில் பெரு மதிப்பு இருந்தது என்று நாம் சொல்லாமலே விளங்கும்.

இவையன்றி, அராபியர்நாடு பாலைவனமாய். இயற்கையில் அமைந்திருந்ததும் இவ்வர்த்தக மேன்மைக்குத் தக்க காரணமாகும்.

அரபியரின் முக்கிய துறைமுகப் பட்டினம், செங்கடலுள் நுழையும் வாயிலில் அமைக்கப் பட்டிருந்த ஏடன்; இவ்வூரில் பல நாட்டினர் குழுமி இருந்தனர் என்றும், தென்னிந்திய வர்த்தகரும் அவண் இருந்தனர் என்றும் அறியக்கிடக் கின்றது[1]. அராபியர் அங்கிருந்து புறப்பட்டு,

1. " Ibn-Batuta" p. **110**. Otto spies says that there were large coionies of Indian merchants at Cairo and Alexandria (op-cit -p 5.

சிற்றுசியா, பாக்தாது, மோசல், டமாஸ்கஸ், பஸ்ரா சோமாலி முதலிய இடங்களில் கிடைக்கும் பொன்னிழையால் புனைந்த விலை யுயர்ந்த ஆடைகள், டமாஸ்கஸ் நகரத்தில் செய்யும் புகழ்பெற்ற பட்டுத்துணி, வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள், ரோசாப் பூவிலிருந்து எடுத்த பனிநீர் அத்தர் போன்ற நறுமணப் பொருளகள், நறு நாற்றம் பொருந்திய மரப் பிசின்கள், பெருங்காயம் காண்டா மிருகத்தின் கொம்பு இவை போன்ற விலையுயர்ந்த பொருள்களையும் தம் கலங்களில் ஏற்றிக்கொண்டு, "மிளகு நாடு"[1] என்று அரபிய நூலாசிரியர்கள் எல்லோராலும் புகழ்ந்து கூறப் பட்ட சேரநாட்டுக் கடற்கரைப் பட்டினங்களான கொல்லம், கோழிக்கோடு, முதலியவைகளை அடைந்து, பின் பாண்டி நாட்டுத் துறைமுகமாகிய காயலுக்குச் சென்று, அவணிருந்து சோழநாட்டுத் துறைமுகங்களான தொண்டி, பாசி, நாகபட்டினம் காரைக்கால், காவிரிப்பூம்பட்டினம் முதலிய வற்றைச் சேர்வார்கள். பின், வடகிழக்குப் பருவக் காற்று வீசுகின்ற காலத்து, மலைபடு பொருள்களான மிளகு, ஏலம், இலவங்கம், இஞ்சி, சந்தனம், அகில், சப்பான் மரம், தேக்கு மரம் முதலியவைகளாலும், கடல்படு பொருள்களான முத்து, 'பூனைக்கண்' என்ற மணிகளாலும், சோழநாட்டில் நெய்த நூலும் பட்டும் விரவிய பூந்துகில்களாலும்[2] தம் கலங்களை நிரப்பிக் கொண்டு, அரபியாவை அடைந்து, அவணிருந்து,

---

1. Sulaiman an Ialqashandi (History of India vol 1. p. 7 and Otta Spies) p. 35.

2. The seeond part of 'Chaw-Ju-Kua', Contains an excellent and useful account of various articles of commerce obtainable in different countries.

எகிப்து நாட்டில் சிறந்து விளங்கிய அலக்சாண்டிரியா துறைமுகத்துக்கும். பாஸ்ரா, மோசல், இராக், பாக்தாது, சிற்ருசியா முதலான இடங்களுக்கும் அப்பொருள்களை அனுப்புவர்.

## தென்னிந்தியாவோடு அரபியர் நடத்திய குதிரை வர்த்தகம்

அரபியர் நம் முன்னோருடன் நடத்திய வர்த்தகத்தில் அவர்கட்குப் பெரிய வருவாயைக் கொடுத்தது குதிரை வர்த்தகமே. நம் நாட்டரசர்களான சேர, சோழ, பாண்டியர்கள் எக்காலத்தும் போர் மேற் செல்லுதலில் விருப்ப முடையவராய் இருந்ததால், படைக்குக் குதிரைகள் வாங்க வேண்டியிருந்தன. இக் குதிரை வர்த்தகத்தைப்பற்றி மார்க்கோ போலோவும் அப்துல் வாசாபும் தத்தம் நூல்களில் விரித்து எழுதியுள்ளார். அவர்கள் கூற்றுககளை அப்படியே இவண் எடுத்து எழுதுவாம்.

மார்க்கோ போலோ சொல்லுவதாவது[1]: "இந்நாட்டினர் குதிரை வளர்ப்பதில்லை; ஆகையால் ஆண்டுதோறும் குதிரைகளை இறக்குமதி செய்வதில் கணக்கில்லாத பொருளைச் செலவிடுகின்றனர். சிஷ், ஹார்மூஸ், டோபிர், சோபிர், ஏடன் முதலான பட்டினங்களில உள்ள பெருந்தொகையான குதிரைகளைத் தொகுத்து, சுந்தர பாண்டியனும், அவன் தம்பிகளும் ஆள்கின்ற நாட்டுக்கு அவைகளை அராபியர் கொணர்கின்றனர்; அங்கு ஒரு குதிரைக்கு 500 'சாகி' பொன் கொடுத்து அதை (தென்னிந்தியர்) வாங்குகின்ற-

1. "Marco Polo" vol II p 385 ff.

னர். ஐந்து அரசர்களும் ஆளுக்கு 2000 குதிரைகள் ஆண்டு தோறும் வாங்குகின்றனர். அவ்வளவு குதிரைகள் அவர்கள் வாங்குதற்குக் காரணம் என்னவெனின் ஆண்டு முடிவுக்குள் நூறு குதிரைகள் கூட மீந்திருப்பதில்லை. அவை யெல்லாம் இறந்துவிடுகின்றன. குதிரையை எவ்வண்ணம் நடத்துவது என்று அவர்கள் அறியார்; அவர்கள் நாட்டில் இலாடம் அடிப்பவர் இல்லை. அரபிய குதிரை வர்த்தகரும் தம் நாட்டு இலாடக்காரர் தென்னிந்தியாவிற்குச் செல்லாமல் பார்த்துக் கொண்டனர்."

அப்துல் வாசாப் எழுதியாவது:[1] "மல்லிக் இஸ்லாம் ஜலாலுடினுக்கும், அராபிய குதிரை வர்த்தகருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ஆண்டுதோறும் கீழ்த் தீவிலிருந்து 1400 குதிரைகள் மாபாருக்குக்[2] கொணர்ந்து இறக்கவேண்டும். ஒரு குதிரையின் விலையாவன 220 செம்பொன் டினார் எனத் திட்டம் செய்துள்ளார். அபுபக்கர் அரசாண்ட காலத்தில் ஆண்டுதோறும் 10,000 குதிரைகள் மாபார், கம்பாயத் முதலான இடங்களுக்கு ஏற்றுமதியாயின வென்றும், அவற்றின் விலை 2,200,000 என்றும் அரபிய நூலாசிரியர்கள் கூறுகின்றனர்."

"குதிரைகள் அவண் அடைந்தவுடன், அவைகட்குப் பச்சையாய் உள்ள பார்லி அரிசியை அருத்தாமல் நெய்யளைந்த பார்லியையும், காய்ச்சின பசுவின் பாலையும் கொடுக்கின்றனர்.

1. Elliot and Dowsen, "History of India" vol III p 33 ff.

2. மாபார்-தமிழ்நாடு.

'யாரே கன்னலேக் காக்கைக் களிப்பர்?
யாரே பிணந்தனேக் கிள்ளேக் களிப்பர்?
பிணத்தைக் காக்கைக் கிடல் வேண்டும்
கன்னலேக் கிள்ளேச் கிடல் வேண்டும்.

"அவர்கள், குதிரைகளே நாற்பது நாள் கொட்டிலில் கயிறுகளினுல் கட்டிக் கொழுக்கும்படி செய்கின்றனர். அதற்குப் பின்னுல் அவற்றை வெளியிற் கொணர்ந்து பழக்காமலும், சேணம் இடாமலும், தென்னிந்தியப் போர்வீரர்கள் பைசாசங்கள் போல் சவாரி செய்கின்றனர். சில நாட்களில் வலிமையும், வேகமும், சுறுசுறுப்பும் உடைய குதிரைகள் மெலிவடைந்து, தளர்ந்து, பயனற்றனவாகின்றன.....ஆகையால், குதிரைகளே அடிக்கடி இறக்குமதி செய்ய வேண்டிய காரணம் ஏற்படுகிறது."

## சீன வர்த்தகம்

தென்னிந்தியாவுக்கும் சீன தேயத்துக்கும் இடையே நடந்த வர்த்தகம் பல நூற்றுண்டுகளாக அரபியரிடம் இழிந்தது. ஏழாவது நூற்றுண்டின் தொடக்கத்திலேதான் சீனர் ஆண்டுக்கொரு முறையாவது தூரதேயங்களுக்குக் கப்பல்களே அனுப்ப ஆரம்பித்ததனர்[1]. சீனர் புத்த சமயத்தினர் ஆனபடியாலும், அவாகட்கு இந்தியா புண்ணிய பூமியானபடியாலும், அவர்களில் சிலர் அடிக்கடி இந்தியாவுக்குப் போந்து புத்தரின் பிறப்பிடம் முதலான தலங்களேக் கண்டு செல்வது வழக்கம். ஏழாவது நூற்றுண்டுக்கு முன் இந்தியாவுக்கு வந்தவர்கள் தரைவழியாக வந்து கொண்டிருந்தாலும், அதற்குப்பின் வந்தவர்கள் நீர்வழியாய் வரத்

1. "Chaw-Ju-kua" p 8

தலைப்பட்டனர். அவர்கள், கான்டன் பட்டினத்திலிருந்து புறப்பட்டுச் சுமத்ராவை யடைந்து, அங்கிருந்து நேர் மேற்கே சென்று ஈழத்தீவை யடைந்து மலையாளத்திலுள்ள கொல்லத்துக்கும், வட இந்தியாவிலுள்ள தம்மலுக்கும் செல்வது வழக்கம்[1]. சீனத்திலிருந்து இந்தியாவுக்கு நீர் வழியாய் வருதற்கு மூன்று திங்களாகும்.

சீன வர்த்தகம் தழைக்கத் தழைக்க கான்டன் பட்டினத்துக்குப் பல நாட்டுக் கலங்கள் வர ஆரம்பித்தன. அதனால் சீன அரசியலுக்குப் பெருத்த வருவாய் கிடைத்தது. இவ்வருவாயைப் பாதுகாக்கவும், சுங்கம் வாங்கவும், வெளிநாட்டு வர்த்தகரைக் கண்காணிக்கவும், கப்பல் வர்த்தகச் சோதனையாளர் என்ற ஓர் அதிகாரியை அரசாங்கத்தார் நியமித்தனர்[2].

சீனக் கப்பல்கள் "சங்" எனப்படும். அவை பிறநாட்டுக் கலங்களைக் காட்டிலும் உருவத்தில் பெரியவை. சீனவர்த்தகர், கான்டனிலிருந்தோ, செயிட்டனிலிருந்தோ புறப்படும்போது, அழகிய சித்திர வேலைப்பாடமைந்த சீனக் கோப்பைகளையும், விலையுயர்ந்த பட்டாடைகளையும் தம் கலங்களில் ஏற்றிக் கொண்டு, வரும்வழியிலுள்ள சம்பா சீயம், மலையம், சுமத்ரா, சாவகம் முதலான இடங்களில் சிறப்பாகக் கிடைக்கக்கூடிய ஈயம், செம்பு, ஆமையோடு, பவளம், அகில், கரிக்கோடு, நறுமணங் கமழும் மரப் பிசின்கள் முதலிய பொருள்களையும் ஏற்றிக்கொண்டு, தென்னிந்தியாவிலுள்ள நாகபட்டினம், கொல்லம், கோழிக்கோடு,

1. Op-cit p. 9.
2. ibid p. 9.

மங்களூர் முதலான துறைமுகங்களைச் சேர்வார்கள். வடகிழக்குப் பருவக்காற்று வீசுங்காலத்தில் சீனர் இந்தியாவுக்குப் போந்து, மழைக்காலத்தைத் தமிழகத் துறைமுகங்களில் கழித்துப் பின் தென்மேற்குப் பருவக்காற்றுடன் தம் கலங்களைச் செலுத்திச் சீனத்தையடைவர்.

சீனதேயத்துக்கு நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் முக்கியமானவை முத்தும் மிளகுமே. மிளகு ஏற்றுமதியைப் பற்றிச் சொல்லுமிடத்து. 'அலக்சாண்டிரியா துறை முகத்துக்கு ஒரு கப்பல் மிளகு போகுமானால், சீனத்துக்கு அது போல் நூறுமிளகுக் கப்பல்கள் சீனத்திலுள்ள செயிட்டன் துறைமுகத்துக்குச் செல்லும்'' என்று ஓர் ஆசிரியர் கூறுகிறார்[1]. மேற்சொன்ன பொருள்களைத் தவிர மலையாளத்தின் விரை பொருளும், நீலமும், உறையூரில் செய்யப்பட்ட பூந்துகிலும், சோழ நாட்டில் சில இடங்களில் செய்யப்பட்ட கண்ணாடிச் சாமான்களும். பாக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. ''சோழநாட்டுத் துறைமுகங்களில் இறக்குமதியாகும் பொருள்கள்மேல் அதிகமான சுங்கம் போடப்படுவதால் பிறநாட்டு வர்த்தகர்கள் அங்கே போவதில்லை" என்று

1. 235 of "Marco polo" vol II.

2. p. 375 of "Marco Polo" vol II. Marco Polo observes, "They (the people of Malabar) have also abundance of very fine Indigo." On a foot-note on this on page 382, Yule says, "Indig had been introduced by the Jews into Sicily in the early of the 12th century. The day is often mentioned in Pegolottis book; the finest quailty being termed "Indigo Baccadeo", a corruption of Bagdadi. Probably it came from India by way of Bagdad."

சௌ-சு-குவா கூறுகிறார்[1]. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சோழப் பேரரசு வீழ்ந்து போனதினால், நாடு சீர்கேடுற்ற காலை, பல்வேறு சிற்றரசர்கள் தலைக்குத்தலை அதிகாரம் செய்ய ஆரம்பித்ததினால் இவ்வாறு நேர்ந்திருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

சோழ நாட்டுத் துறைமுகப் பட்டினங்களில் பண்டைக்காலத்தில் தலை சிறந்து விளங்கிய புகார், கடல் வெள்ளத்தால் சிதைக்கப்பட்டுப் புகழ் குன்றி மயங்கிக் கிடைந்தது. ஆகையால், மார்க்கோ போலோ தன் நூலில் "பட்டினம்" என்று கூறுமிடத்தும், இபன் பதூதர் "பட்டினம்" என்று சொல்லுமிடத்தும், அவர்கள் புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிப்பிடாமல், நாகபட்டினத்தையே குறிப்பிடுகின்றனர். நாகபட்டினம் சோழர் காலத்தில் சிறப்புற்றிருந்தது என்பதைச் சேக்கிழார், பெரிய புராணத்திலிருந்தும் அறியலாகும். இயற்பகை நாயனார் புராணத்தைக் கூறுமிடத்துப் புகார் நகரின் சிறப்பைச் சுருக்கிச் சொல்லி, அதிபத்த நாயனார் புராணத்தில் நாகபட்டினத்தின் சிறப்பைக் கீழ்வருமாறு விதந்துரைக்கின்றார்:—

"பெருமை யிற்செறி பேரொலி பிறங்கலின் நிறைந்து
திருமகட்குவாழ் சேர்விட மாதலின் யாவும்
தருதலிற்கடல் தன்னினும் பெரிதெனத் திரைபோல்
கரி பரித்தொகை மணிதுகில் சொரிவதாங் கலத்தால்."

"நீடு தொல்புகழ் நிலம்பதி னெட்டினும் நிறைந்த
பீடு தங்கிய பொருள் மாந்தர்கள் பெருகிக்
கோடி நீள்தனக் குடியுடன் குவலயம் காணும்
ஆடி மண்டலம் போல்வதவ் வணிகிளர் மூதூர்."

1. "Chaw-Ju-kua" p. 95.

நாகபட்டினத்தில் சீனர்கள் வதிந்தனர் என்பதற்குப் பதினைன்காம் நூற்றாண்டின் இடையில் எழுதப்பட்ட "தாவோயி-சிலியோ" என்ற சீன நூல், சீனமொழியில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று நாகபட்டினத்துப் புத்தப் பள்ளியில் இருந்ததாகக் கூறுவதே சான்றாம். அக்கல்வெட்டுக் கீழ்வருமாறு:— "இந்தத் திருப்பணி, ஹியான் சுவானுடைய மூன்றாவது ஆண்டின் எட்டாவது திங்களில் முடிவு பெற்றது."[1] இன்னும், சீன நாட்டின் நாணயங்களும், சீன பீங்கானில் அழகு பெற அமைக்கப்பட்ட படிமங்களும் நாகபட்டினத்தில் கண்டெடுக்கப்பட்டிருத்தலும் இதையே வலியுறுத்தும்.

---

1. Additional Notes by Cordier to Yuel'stwo volumes of "Marco Polo." P 114.

# 8. தமிழகமும் சோழரும்

(வி. ரா. இராமச்சந்திர தீக்ஷிதர், எம். ஏ.)

நம் பாரத தேசத்தில், வடக்கில் வேங்கடமும் தெற்கில் குமரியும் கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் எல்லைகளாகவுடைய தென் கோடிப் பகுதியில் தமிழ்மொழி வழங்குகின்றது. அதனால், இதனைத் 'தமிழ்கூறும் நல்லுலகம்,' தமிழகம் என்று முன்னோர் வழங்கினர். இந் நிலப்பகுதிக்கு வடக்கே பெரும்பாலும் வடமொழி பயின்று வந்தமையால், அதினின்றும் வேறுபாடு அறிய, இந்நிலத்து மொழி தென்மொழி என்று வழங்கப் பட்டது. இத்தமிழகத்தை அநாதி காலமாக ஆண்டு வந்த அரசர்கள் சேரர் சோழர் பாண்டியர் என்னு மூவராவர். இம்மூவருடைய ஆட்சிக்கு உட்பட்ட தேசங்கள், தலைகீழான ஆய்த வெழுத்தின் வடுவில்(ஃ) மூன்று மண்டலங்களாய்ச் சேர நாடு, சோணாடு, பாண்டி நாடு என வழங்கின. இவற்றை முறையே குடபுலம். குணபுலம், தென்புலம் என்று கூறுவது பண்டை வழக்கு.[1] சேரநாடு மேல் நாடாகியதனால் குடபுலம் என்றும், சோழநாடு அதற்குக் கிழக்கே உள்ளமையால் குணபுலம் என்றும், அவ்விரண்டுக்கும் தெற்கில் அமைந்தமையால் பாண்டிநாடு தென்புலம் என்றும் கூறப்பட்டன.

தமிழகத்தின் இம்மூன்று இராஜ்யங்களும் எந்தக் காலத்தில் நிறுவப்பெற்றவை என்பது தெரியவில்லை. அதனால் இந்த மூன்று நாடுகளின் அரசர்களையும் படைப்புக்காலந் தொட்டு மேம்

1. சிறுபாணாற்றுப்படை, 47, 49, 63.

பட்டு வரும் பழங்குடியினர் என்று முன்னோர் கூறலாயினர்.[1] ஆதி இதிகாசங்களான இராமாயண மகாபாரதங்களில் இந்நாடுகளின் இயல்புகளும் அரசர்களைப் பற்றிய செய்திகளும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. புத்தபகவானது முற்பிறவிகளைப் பற்றிக் கூறும் ஜாதகக் கதை[2] யொன்றில், சோழரது 'தமிழ ராஜ்ய'மும் அதன் தலைநகரான காவிரிப்பூம் பட்டினமும் குறிக்கப் பட்டிருக்கின்றன. மௌரிய சக்கரவர்த்தியாய் இப்பரத கண்டத்தின் பெரும் பகுதியைத் தன் ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட அசோகனது காலத்தில், இத்தமிழகம் அவன் ஆட்சிக்கு உட்படாமல் மூவேந்தர்க்கே உரிய தனிநாடாய் விளங்கிய செய்தி அவனது கல்லெழுத்துக்களால் தெரியவருகின்றது. இவ்வாறான உரிமை பற்றியே தமிழ் கூறும் நல்லுலகமான இதனை "வண்புகழ் மூவர் தண்பொழில் வரப்பு" என்று தொல்காப்பியனார் கூறுவாராயினர்.[3]

தென்னாட்டின் முடியுடை வேந்தரான இம் மூவருள் நடுநாயகமாய் விளங்கியவர்கள் சோழ மன்னர்களாவர். இவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட குணபுலமானது, வானம் பொய்யாமற் பெய்து காலத்திற் பெருக்கெடுக்குங் காவிரியாற்றின் நீர்ப் பாய்ச்சலால் பெருவளம் படைத்த பிரதேசமாகும். நீர்வளம் பற்றியே 'புன்னாடு' எனவும் இது பெயர் பெற்றது.

"வேலி ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு"

---

1. குறள், குடிமை, 5 பரிமேலழகருரை.
2. The Jatakas, Vol. V, p. 150.
3. பொருளதி, செய். 79.

"சோழவளநாடு சோறுடைத்து"

என்று இவ்வாறு முன்னோரும் பின்னோரும் புகழ்ந்துள்ள நாட்டுச் சிறப்பெல்லாம் இக்காவிரியின் மாட்சியால் உண்டானதே. காந்தமன் என்னுஞ் சோழன் வேண்ட, "அமர முனிவன் அகத்தியன் தனாது, கரகங்கவிழ்த்த காவிரிப்பாவை"[1] யைக் கங்கா தேவியிடம் சென்று வாங்கிவந்து அம் முனிவர் தென்னாட்டில் பெருகவிட்டார் என்பது புராண வரலாறு.[2] இதனால் கங்கைப் பேராற்றின் புனிதமும் பெருமையும் உடையது காவிரிப் பேராறு என்பது தெளியலாகும். பொன் போன்ற வண்டலொடு கூடிய காவிரி நீர்வளத்தால், அழகும் செல்வமும் அறிவும் பொங்கி இன்று வரையும் நின்று செழித்து வருகின்றது சோழ வளநாடு. இந்நாட்டை அநாதிகாலமாக ஆண்டு வந்த சோழ வேந்தர் எண்ணிறந்தவர்கள். இவ் வேந்தர்களைச் சங்க காலத்துக்கு முற்பட்ட சோழர், சங்க காலத்துச் சோழர். பிற்காலத்துச் சோழர் என்று மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

## சங்க காலத்துக்கு முற்பட்ட சோழர்

நம் பரத கண்டத்து அரசர்கள் சோமகுலம், சூரிய குலம். அக்கினி குலம் என்னும் மூன்று மரபுகளுள் ஒன்றுக்கு உரியவராகப் பெரும்பாலும் கூறப்படுவர். அம்முறையில், சோழ வேந்தர் சூரிய குலத்தைச் சேர்ந்தவராவர். பாண்டியர் சந்திர குலத்தவராகவும், சேரர் அக்கினி குலத்தவராகவும்[1] கூறப்படுகின்றனர். சூரிய குலத்து

1. மணிமேகலை, பதிகம்.

2. "தங்கையாறுழைச் சென்று காவிரியாறை வாங்கி" என்பர் நச்சினார்க்கினியர் (தொல் பாயிரம்)

ஆதிவேந்தர்களான மனு, இக்ஷ்வாகு, மாந்தாதா, சிபி, முசுகுந்தன் முதலியோரே இச்சோழர்க்குங் குலமுன்னோர்கள். கலிங்கத்துப்பரணி, மூவருலா முதலிய தமிழ்நூல்களிலும், அன்பில், திருவாலங் காடு, கன்யாகுமரி முதலிய இடங்களில் அகப்பட்ட சிலாதாமிர சாஸனங்களிலும் இம்முன்னோர்களின் வமிசாவளியும் வரலாறுகளும் சுருங்கக் கூறப் பட்டுள்ளன. இவருள், மனு சிபிகளின் சரித்திரங் களைப் புராணங்களிலன்றிச் சங்க நூல்களிலும் காணலாம். பசுவின் கன்றைக் கொன்ற பழிக்காகத் தன் ஒரு மகனையே தேர்க்காலிலிட்டு முறை செய்த மனுவின் கதையும், புறுவின் துக்கம் நீங்கத் தன்னுடலையே அரிந்து வைத்துத் துலையேறிய சிபியின் கதையும் பிரசித்தமானவை. இவரன்றிப் புகார் நகரில் இந்திரவிழா வெடுத்த முசுகுந்தன் வரலாறும், ஆகாயத்தில் பறந்து உலகத்துக்குத் துன்பம் விளைவித்து வந்த அரசர்களின் கோட்டை களை அழித்த சோழன் ஒருவன் செய்தியும், பரசுராமன் காலத்தில் புகார் நகரில் இருந்து அரசாண்ட காந்தமன் சரிததிரமும் சிலப்பதிகாரம் மணிமேகலைகளிற் கூறப்படுகின்றன. பண்டைக் காலத்தே இவர்களைப் போலப் பிரபலரான சோழர் கள் வேறு சிலரும் உளர். இவர்கள் வரலாறுகள் இங்கு விரிப்பிற் பெருகும்.

## சங்க காலத்துச் சோழர்

இனி, பண்டைச் சோழரின் சரித்திரங்களில் மனித ஆற்றலுக் கடங்காதனவாகக் காணப்படுஞ் செய்திகள் பலவுள்ளன. அவைகளுள். சரித்திர

---

1. வில்லிபாரதம், திரௌபதி மாலை 45.

வுண்மைகளாக இக்காலத்து அறிஞராற் கொள்ளப்படுவன சிலவே. ஆனால் முதற்காலத்துச் சோழர்க்குப் பல நூற்றாண்டுகளின் பின்னர், சிறந்தவராய் வாழ்ந்த சோழர்களின் வரலாறுகள் பழைய இலக்கியங்களி லிருந்து தெரியவருகின்றன. இவர்களே சங்க காலத்தில் விளங்கிய சோழ மன்னர்கள். ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்கு முன் இவர்களும் புராண காலத்துச் சோழர் போலவே கருதப்பட்டனர். ஆனால், முன்னூல்களும் சாஸனங்களும் கண்டுபிடிக்கப்பட்டு வெளிவரத் தொடங்கிய பின், அவற்றின் ஆராய்ச்சி பெருக, இச்சோழருள் பலருடைய வரலாறுகள் உண்மையானவை என்றே அறிஞர்களால் கருதப்படலாயின. சங்க காலத்துச் சோழர்களாகப் பண்டைத் தமிழ் நூல்களால் அறியப்படுவோர் பலர். இவர்களுள் பெரும்புகழ் படைத்தவர் சிலர். கரிகாற் சோழன், கோச்செங்கணான், கிள்ளிவளவன் போன்றவர்கள் முதன்மையானவர்கள். இவர்களுக்குள் முன்னவனான கரிகாலன், காரிகாற் பெருவளத்தான் எனவும் திருமாவளவன் கரிகாலன் எனவும், வழங்கப்படுவான். தன் தந்தை இறந்ததும், நாட்டில் அரசுரிமைபற்றி நேர்ந்த பெருங் குழப்பத்தில், பிள்ளைப் பருவத்தனான இக் கரிகாலனைப் பகைவர்கள் சிறைப்படுத்தியதோடு, அச்சிறையில் கொள்ளியும் இட்டனர். அதிலிருந்து இவன் தப்பியோடியபோது காலொன்று அததீயால் கரிந்துவிட்டது[1]. இக்காரணத்தால் கரிகாலன் என்னும் பெயர் இவனுக்கு வழங்கலாயிற்று.

---

1. 'முச்சககரமும் அளப்பதற்கு நீட்டியகால், இச்சக்கரமே யளந்ததால்.........கரிகாலன் கால்நெருப் புற்று'' [பொருந. இறுதி வெண்பா.]

இவ்வாறு இவன் சிறையினின்றும் தப்பி ஐந்து பிராயத்தில் முடிசூடித் தன் இளமைப் பருவத்திலேயே பகைவரை யெல்லாம் வென்று ஆட்சி புரிந்தான். அக்காலத்தில், இவனுக்குப் பேருதவி புரிந்தவர் இவன் மாமனாகிய இரும்பிடர்த் தலையார் என்னும் பெரும் புலவர்.[1] ஆண்டில் இளையனாய் இருந்தும் அறிவில் முதியவனாய் நீதி வழுவாது ஆண்ட இவனது செங்கோற் சிறப்பால் தமிழகம் பலவகையிலும் செழிக்கலாயிற்று. இவனது அரிய செயல்களுள் காவிரிக்குக் கரை கட்டிச் சோழ நாட்டை வளம்படுத்தியதும், தொண்டை நாட்டில் வேளாண்மக்களைக் குடியேற்றியதும், கஞ்சிமா நகரையும் காவிரிப்பூம் பட்டினத்தையும் பலவகைகளில் அழகுற அமைத்ததும் சிறந்தவை. இவன், மற்றைத் தமிழரசர்களை அடக்கி தன் ஒரு குடைக் கீழ் இத்தமிழகத்தை ஆண்டதோடு, வடநாடுகளிலும் படையெடுத்துச் சென்று, வச்சிரம், அவந்தி, மகதம் இத்தேசத்து மன்னர்களை வென்று இமயத்தில் தன் புலிக்கொடியை நாட்டி வந்தான். இவனைப் பாடிய புலவர்கள் பலர். இவன் அருமை பெருமைகளைப் பட்டினப்பாலை, பொருநராற்றுப் படை என்னும் பாட்டுக்களிலும், பிற சங்கச் செய்யுட்களிலும் விரிவாகக் காணலாம்.

இவனுக்குப் பின்பு ஆண்ட சோழர்கள், பதினறுவருக்கு மேற்பட்டோர் சங்க நூல்களால் அறியப்படுகின்றனர். அவருள் கிள்ளிவளவன், பெருநற்கிள்ளி என்னும் இருவரைப் பற்றிய செய்திகள் சிலவற்றை **மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும்** காணலாம். சோழரெல்லாரும் அறிவு

1. பழமொழி. 105.

ஆற்றல்களாலும் வள்ளன்மையாலும் மேம்பட்டு விளங்கியவர்கள் என்பது அவர்களைப் பண்டைப் புலவர்கள் பாடிய சங்கச் செய்யுட்களினால் அறியப்படுகின்றது.

இவ்வேந்தருள் கடைசியில் ஆண்ட சோழன் கோச்செங்கணானாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இவன் முற்பிறவியில் சிலந்தியாயிருந்து திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள சிவபிரானுக்கு வெயிற்படாமல் நூற்பந்தர் இழைத்துப் புரிந்த திருத்தொண்டால், மறுபிறவியில் பேரரசன் ஆனான் என்று தேவாரம்[1] முதலியவற்றில் புகழ்ந்து பாடப்பட்டுள்ளான். இவன், சிவபக்தியின் மிகுதியால் "எண்தோள் ஈசற்கு எழின்மாடம் எழுபது செய்த"வன்; அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக மதிக்கப்பட்டு விளங்கினவன். திருநறையூரில் எழுந்தருளியுள்ள திருமாலிடம் இவன் பக்தி பண்ணியவன் என்று புகழ்வர் திருமங்கையாழ்வார். இச்சோழன் பக்திச் சிறப்போடு வீரச் சிறப்பும் பிற உத்தம குணங்களும் உடையவனாயிருந்தான். கணைக்காலிரும் பொறை என்னுஞ் சேரமானுடன் இவன் கழுமலத்தில் பொருது பெற்ற வெற்றித் திறத்தைப் பொய்கையார் பாடிய களவழி நாற்பதிலும், ஏனைச் சங்கச் செய்யுட்களிலும் காணலாம். இச்சேரமான் படைத் தலைவனாகிய கணையன் என்பவன் சேரரது கொங்கு நாட்டைச் சேர்ந்திருந்த விளந்தை என்னும்

1. பட்டினப்பாலை, 276-7.

'பண்பேல சருகாற் பந்தர். பயின்றநூற் சிலந்திக்குப் பாராள் செல்வ மீந்தவன்காண்' [திருக்கச்சி திருத்தாண்] என்ற அப்பர் திருவாக்குக் காண்க.

ஊருக்குத் தலைவனானமையால் விளந்தைவேள் எனவும் வழங்கப்பட்டான். அவனது விளந்தையை அடுத்துள்ள கழுமலம் என்ற ஊரில் செங்கணானுக்கும் அவ்வேளுக்கும் பெரும் போர் மூண்டது. அதில் அவனை வென்று அவனுக்கு உரியதாயிருந்த கொங்கு நாட்டை இச் செங்கணான் தன் சோழ நாட்டோடு சேர்த்துக் கொண்டான்; இந்த வெற்றியே,

"மின்னாடு வேலேந்து விளந்தை வேளை
விண்ணேறத் தனிவேலுய்த் துலக மாண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன்"

என்று திருமங்கையாழ்வாரால் சிறப்பித்துப் பாடப் பட்டது என்பர்.[1] இஃதன்றி, வெண்ணி முதலிய இடத்தும் இவன் பகைவர்களை வென்ற செய்தி, அவ்வாழ்வாரது திருநறையூர்ப்பதிகத்தால் அறியப்படுகின்றது. இவனுக்கு நல்லடிக் கோன் என்ற மகன் ஒருவன் இருந்தான் என்று அன்பில்[2] சாஸனம் கூறுகின்றது. இந்நல்லடிக்கோனது ஆட்சிச் சிறப்பு சங்கச் செய்யுளான அகநானூற்றிலும் (356) குறிப்பிடப்பட்டுளது.

## பிற்காலத்துச் சோழர்

கோச்செங்கணானுக்குப்பின். அஃதாவது உத்தேசம் கி. பி. நான்கு ஐந்தாம் நூற்றாண்டு முதல், வடநாட்டரசர்கள் பெருவலி பெற்றவர் களாய்த் தமிழகத்திற் புகுந்து, அதன் பெரும் பாகத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அதனால், தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவருமே தங்கள் பழைய பெருமை குன்றி அவர்கள் கீழ் அடங்கவேண்டியதாயிற்று.

---

1. ஆராய்ச்சித் தொகுதி, பக். 245-7.
2. ஆழ்வார்கள் கால நிலை, பக், 125.

# 9. தமிழ்ப் புலமை*

(மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்)

அன்பர்களே!

இங்குத் திறந்துவைக்கப் பெறுவது தமிழ்ப் புலவர் மாநாடாகும். நம் அமிழ்தினுமினிய தமிழ் மொழி பண்டைக்காலத்தில் இற்றை ஞான்றினும் எத்துணையோ பன்மடங்கு அகன்ற நிலப்பரப்பைத் தனக்குரியதாகக் கொண்டு விளங்கிய தென்பதும், குமரியொடு வட விமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதனால் குமரிமுனை தொட்டு இமயமலை வரையும் இறை மொழியாக வழங்கப் பெற்ற தென்பதும், தொன்மையில் தனக்கு நிகராக இக்காலத்து வழங்கும் மொழிகளில் மிகச் சிலவன்றி இல்லையெனத் தக்க நிலையில் உள்ள தென்பதும் நீவிர் நன்றுணர்வீர்கள். ஆதலின், இவை பற்றி யான் விரித்தல் வேண்டா வென நினைக்கின்றேன்.

செப்பமிக்க இயலமைப்பும், அவ்விலக்கணங் களுள் வேறு எம் மொழிக்கும் இல்லாது தனக் கெனச் சிறப்பு முறையின் அமைந்த பொரு ளிலக்கண ஒழுங்கும், முதிர்நலச் சொற்களும் சிதை வில் நுண் பொருள்களும் தங்கி நின்றொளிருஞ் சங்கநூற் றொகையும், புன்னுனிப் பனியில் மன்னுமா மலையுருத் துன்னிநின் றொளிர்தரல் போலச் சிற்றள வினவான சொற்றொடர்களிற் சிறந்தமைந்தன வாகிய பெரும் பொருள்கள் தோன்றித் திகழும்

---

*துறையூரில் [6-8-1932] கூடிய திருச்சிராப்பள்ளி தஞ்சை மாகாணத் தமிழ்ப் புலவர் மாநாட்டில் நிகழ்த்திய திறப்புரை.

அறமுத னுதலிய திறமை நூல்களும், அன்பினைந்திணை அகவொழுக்க நேர்மையும், தொடர் நிலைச் செய்யுட் சுவைநலக் கனிவும், குறிக்கோள் பற்றிய அறிவியல் நூல்களின் திட்ப நுட்ப அமைவும், காதல் மிக்கு ஓது வார் கேட்பாரது கல்லினும் வலிய உள்ள நிலையையுங் கரைத்து அவர்தமை அன்புருவாக்கி இறை திருவருட்கு இனிதின் ஆளாக்கும் இசை நலந் தழீஇய அருட் பாசுரப் பகுதிகளும், இன்னும் பற்பல துறைகளைப் பற்றி நின்று திகழும் நூற்றொகைகளும் தன்பான் மிளிர, இனிமையாங் குணத்தை இயைந்து, தட்பமும் தகவும் ஒட்பமும் ஒருங்கமையப் பெற்று, எல்லாம் வல்ல இறை நிலை போல் என்றும் நின்று நிலவுவது நம் தென்றமிழ் மொழியேயாம். இத்தகைய தனித்த நந்தமிழின் சால் பினைப் பற்றிப் பெரியோர் பற்பலரும் அவ்வப் போது பல கல்விக்கழகங்களிற் பேசியும் எழுதியும் வெளியிட்டுள்ளனர். ஆதலின் அதனையே யானும் ஈண்டு விரித்துக் கூற முற்படுதல் வேண்டாத தொன்றெனக் அமைகின்றேன்.

## புலமையின் குறிக்கோள்

இனிப் புலமையாவது யாதென ஆராய்தல் இன்றியமையாத தாகும். ஒரு நூலை ஆசிரியர் முகமாகக் கற்ற அளவினானும், இயன்முறை தெரிக்கும் நூற்பாக்களையும் எடுத்துக்காட்டாஞ் செய்யுட் பகுதிகளையும் சொற்பொருள் அறிந்து கொள்ளும் அவ்வளவினானும புலமை நிரம்புவ தன்று. இவ் வெல்லாம், சிறந்த புலமையின் உறுப்புக்களாமன்றி உறுப்பியாகா. ஒன்றனை ஊன்றிப் படிக்குங்கால்; படிக்கப்படுஞ் சொற் குழுவினின்று உணரப்படும் பொருட்கண் உள்ளம் உறைத்து நிற்பச், சார்ந்ததன் வண்ணமாங்

தன்மைத்தாகிய உயிர், அவ்விழுமிய பொருட் கண் பிரிப்பின்றிக் கலந்து அப் பொருட் பயனை நுகர்தலும், நுகர்ச்சிக்குப் பின் வெளி யுலகத்து மீண்டு நினைவு கூர்தலும், தீர்ந்த உண்மைகளைக் கடைப்பிடித்துத் தங்குறிக்கோளாக ஒழுகியலின் மேற்கோடலும் மேற்காட்டிய உறுப்புக்களோ டியையுமாயின், ஒருவாறு புலமை நிரம்பியதாகக் கொள்ளலாம். புலமையின் குறிக்கோள் உலகியற் பொருளளவின் இருப்பின், அது சிறுமை யெய்தி மாசுடையதாகும். அறிவை ஒளி வலி யுடைய தாக்கி அகலமுறச் செய்து அவ் வகன்ற ஒளி விளக்கத்தின் கண்ணே முன்னர்க் காணப்படாதனவும் உலப்பிலா இன்பவிளைவிற் கேற்றனவுமாகிய அரிய பல நுண் பொருள்களை அகக்கண்ணுற் கண்டு இன்புறுதலாகிய வாழ்க்கையே புலமை வாழ்க்கையாகும்.

ஓரளவுட்பட்ட சில பல நூல்களை வினவு வார் கருத்துக்கியைய விடையிறுக்கு முகமாகக் கற்றுத் தகுதிச் சீட்டுப் பெறும் அவ்வளவில், புலமை தன் நிறைவை எய்தியதாக எண்ணிவிட லாகாது. பயிலுந்தோறும் பயிலுந்தோறும் பண் புடையாளர் தொடர்பு எங்ஙனம் இனிமை சான்று பயன் விளைக்குமோ, அங்ஙனமே மீண்டும் மீண்டுங் கற்குந்தோறும் கற்குந்தோறும் உயரிய நூல்களின் நுண்பொருள் நலங்கள் நம் உள்ளத்தை ஈர்த்துத் தம் பாற்படுத்துப் பேரின்புறுத்துவனவாம். மிக விரைந்தோடும் வெள்ளப் பெருக்கினை யுடைய ஆற்றின் நீர்ச்செலவாற்றலை ஒருவன் அளக்க நினையின், அதன்கண் அவன் எதிரேறிச் செல்ல வேண்டுவதே இன்றியமையாத தாகும். அவ்வா றின்றி அந் நீர்ச் செலவோடியைந்து அதனுன் ஈர்த்துச் செல்லப்படுவானாயின், அவ்வாற்றலின்

நிலை இற்றெறன உணரகில்லான். அங்ஙனமே உயர் நிலைப்பாவலர் மயர்வற ஆக்கிய விழுப் பொருள் நிறைந்த செய்யுட்களின் சொற்பொருளொழுக் கில், நும் நுண்ணறிவு எதிரேறிச் செல்லல் வேண் டும். அங்ஙனஞ் சென்று அச் சொற்பொருள்களின் வன்மை வனப்புக்களை ஆராய்ந்தளக்க முயலின். அச் செய்யுளாசிரியன் ஆழ்ந்து நினைவிற் கண்டு வைத்த அரும் பொருண் மணிகளின் இயலொளியை உண்மையாகக் கண்டு இன்புற லாம். ஆராய்ந்து தெளிதற்குமுன் அச் சொற் பொருள்களோடு எதிர்த்து நிற்றலே நன்றும்.

பொருணலத் தெளிவின் பின் அச் சொற் பொருள்களோடு நம் அறிவை இரண்டறக் கலப் பித்து, அவற்றின் வண்ணமாக நின்று அசைவறும் நிலையெய்தி இன்ப வெள்ளத்துள் திளைத்தல் வேண்டும். ஒரு சிறந்த நூலாசிரியன் குறிக்கோள் இன்னதெனத் துணிந்தாலன்றி அவன் பலவாறு பன்னிப்பன்னி உரைக்கும் உரைப் பொருளின் உண்மைக் கருத்து அறியப்பட்டதாகாது. சிறந்ததொரு முடி பொருளைச் செப்பனிட்டுத் திறம்பட உறைக்க முற்படும் புலவன், பருந்தின் வீழ்ச்சி போற் செய்மையினின்றே முடிபொருட்குரிய சார்வுப் பொருள்களில் மெல்ல மெல்லத் தலைப்பட்டுச் செல்லுவன். அச் செலவின் நிலையை அந் நெறி நின்றே உய்த்துணர்தல் வேண்டும். செலவழிக்கட் கண்டனவே தீர்ந்த பொருளென எண்ணி விட லாகாது. நூலுரையாசிரியர்களின் கருத்துப் பட்சியில் நம் அறிவுத் தொடர்ச்சி பின்னிடுதல் நன்றன்று. அயரா உழைப்பிற்கு அகப்படாத அரும்பொருள் யாதொன்றும் இன்று. தொடர்நிலைச் செய்யுட்களின் உயிரனைய சுவைநலம் விராய குறிப்புப் பொருளை உணர்தலில் நம் அவா முற்பட வேண்டும். சுவை நலங் கலந்து

அத்தொனிப் பொருள் தங்குதற்குரிய இடனமை யாப் பாடல்கள் உயிரற்ற வெற்றுடல் போல்வன வாம். வெற்றுடலை அணிகலன் புனைந்து காண்டல் பின்னர்க் காணலாகாத இறுதிக் காட்சி யாக முடியுமென்பது அறிந்த தொன்றே; அங்ஙனமே சுவை நலமளைந்த தொனிப்பொருள் விரவாப் பாடல்களை அணி நலனளவிற் காண்டல், மீண்டுங் காண வேண்டும் என்ற விழைவற்ற நிலையில் நிகழ்வ தொன்றாகும்.

மதிவலி மிக்க முது புலவனிடத்தினின்றுந் தோன்றிய பாடல் நங்கைக்குத் திட்ப நுட்பம், தெளிவு, விளக்கம், இனிமை முதலிய பண்புகளமைந்த சொற்பொருட் குழுவே அழகிய உடலும், சுவைநலந் துறும் தொனிப் பொருளே உயிருமாம். இந் நங்கைக்கு உவமை முதலிய அணிகளே அணிகலன்களாம். அழகுக்கு அழகு செய்தல் போல இவ் வணிகள் சேர்க்கப்படினும், இப் பாடன் மெல்லியற் பாவை நல்லாளின் இயற்கை வனப்பு மிக்க நல்லுடலைச் சார்ந்து உவமை முதலிய அணிகளே சிறந்த அழகு பெற்றுத் திகழ்வன வாம்.

இங்ஙனம் இயற்கை நலம் மிக்குச் செயற்கை நலனையுமேற்றுத் திகழும் இத்தகைய பாடல் நங்கையைக் கூடி நுகர்தற்குரிய இள நலஞ்சான்ற மணமகனியல்பை இயம்பவும் வேண்டுங்கொல்! அன்னான் இலக்கிய நூலறிவானும் மதி நுட்பத்தானுஞ் சிறந்து மலர்ந்து மணப்பருவம் வாய்க்கப் பெற்றுக், கட்டழகு வாய்ந்த பாடல் நங்கையைக் காண்டலிற் காதல் மிக்குடையனும் அப்பேறு குறித்துத் தவம் புரிந்த தனிப்பெருஞ் செல்வனு தல் வேண்டும். வேட்கை முயற்சியும் தவப் பயனும்

ஆசூழ்வலியும் ஒருங்கு கைவரப் பெற்றாலன்றி, அப் பாட்ல் தங்கையின் பரிசுணர்தல் அரிதாகும்.

இன்ன பாடல் நங்கையைப் பண்புடன் வேட்ட காதற் கொழுநனுங் கலைவல மணமகன். அந் நங்கை நலனெலாம் நன்னர் நுகர்ந்து புலன் நிரம்பின்பம் பொருந்திய வாழ்க்கையிற்றலைப் படுங்கால், அவ் விருவர்தம் இரண்டற்ற தன்மையி னெழுந்த இன்பநிலையே உருவெடுத்தாங்கு மழ விளம்பாடற் குழவிகள் தோன்றும். இந் நன்மக்கட் பேற்றினையுடைய நன்பல இல்லற வாழ்க்கையிற் றலைப்பட்டு நிரம்பினோரே உண் மைப் புலவராவர்.

கண் முதலிய அறிவுக் கருவிகளாற் காண்டற் கியலாத நுண்பொருள்களை யெல்லாம் நுண்மா ணுழை புலமாகிய உட்கருவியாற் செய்யுளுலகத் திற் கண்டு இன்புறுதல்கூடும். அவ்வளவின் அமையாது, அவ்வுட்புறக் கருவிகளுக்கும் எட்டாது அப்பாற்பட்ட திருவருளாற்றலினது சீரிய நிலையின் ஒரு சிறு கூற்றினையாதல் செவ்விய புலமை முயற்சியின் பயனாகிய மெய்யுணர்வின் கண்டு இன்புறுதற்கு முயலவேண்டும். அவ்வின்பப்பே றொன்றே நம் புலமை வாழ்க்கையில் அரிதின் முயன்று அடைதற்பாலதாகிய முடிந்த பயனாகும். முதன்கண் மன மொழி முதலிய உட்புறக் கருவி கள் செந்நிலையுறுதற் கமைந்த விழுமிய நூலறிவு, முடிவில் திருவருள் நிலையின் தெளிவு கைவரப் பெறுதற்குரிய சிறந்த கருவியாகிய மெய்யுணர் வைப் பயந்து நிற்கும். அம்மெய்யுணர் வொன்றே தன் பயனாகிய உயர்வொப்பில்லாப் பேரின்பத்தை விளைவிப்பதாகும்.

உலக வாழ்க்கைபோலப் புலமை வாழ்க்கையும், இல்நிலை துறவுநிலை என இருதிறப்பட்டு நிகழுமாறும் இக் குறிப்புக்களான் உணரலாம். கல்வியே கற்புடை மனைவியாகவும், செல்வப் புதல்வரே செழும் பாடலாகவும், கற்றதுணர விரித்துரைத்தலாகிய சொல்வளனே இந்நிலைக்கு வேண்டிய பொன்னிலையாகவுங் கொண்டு இல்லறப் புலமை வாழ்க்கையைச் செவ்வன் நடத்திய செம்புலச் செல்வனொருவன், முடிவில் மெய்யுணர்வு கைவரப்பெற்று அது வாயிலாகத் திருவருள் நிலையையுணர்ந்து அவ்வருள் நிலை இன்பததில் திளைப்பின், அந்நிலையே துறவறப் புலமை வாழ்க்கையாகும். உண்மைப் புலமையின் சிறந்த குறிக்கோள் இதுவேயாம்.

## புலவரும் புரவலரும்

மிகச் சிறந்த இந் நிலைக்கு நன்மை ஆளாக்கும் இப் புலமைச் செல்வத்தை இவ்விழுமிய நோக்குடையராகவே நம் பெரியார் மேற்கொண்டிருந்தனர். அன்னார் குறிக்கோள் அன்னதாக, அவருக்கு இம்மை நலம் முட்டின்றி நடைபெறுதற்கு வேண்டும் பொருள் முதலியன கொடுத்துப் போற்றுதற்கு, வரையாதளிக்கும் வள்ளன்மை மிக்கார் பலரை அவ்வப்போது திருவருளாற்றல் உதவி வந்தது.

சிறந்துயர்ந்த குறிக்கோளொன்றைக் கடைப்பிடித்துத் திருவருட் டுணைகொண்டு முயல்வார்க்கு, அதனை நிறைவேற்றுவிக்கும் இறையருள் இடைக்கண் வேண்டுவனவாகிய பிற

வெல்லாம் பல்லாற்றானும் உதவி அவரைத் தளர விடாது அளித்துக் காக்கும் என்பது நம் பெரியார் கண்ட உண்மை. புலமையின் குறிக்கோள் மிகச் சிறந்துயர்ந்த அறிவு வளர்ச்சியான் எய்தும் உலப்பிலா இன்பப் பேருகவும் அதனை மறந்து, அழிதன் மாலையதாகிய குறுகிய உலக வின்பமே அதுவெனக் கொள்ளப்படுமாயின், அது நிறை வேறுந் துணையும் அப் புலமை நின்று பின் வளர்த லின்றி ஒழியும் இயல்பினதாகும். அந் நிலையில் அமைந்த புலமையுஞ் சிறிதேயாம்.

இற்றை ஞான்று கல்வி பயிலும் மாண வர்கள் தொடக்கத்திற்கொள்ளும் நோக்கம், மேற்கொண்டு பயில்வோர் ஒரு வகையாகத் தேர்வில் வெற்றி பெற்ற பின்னர், அக் குறுகிய நோக்கமாகிய பொருட் பேறு நிறைவேறுதற் குரிய முயற்சியிற் றலைப்படுகின்றனரே யன்றிக் கற்ற கல்வியின் விழுமிய பயனைப் பெறுதலில் வேட்கையுடையராகக் காணப்பட்டிலர். ஆசிரியனை அடுத்துக் கற்றது அவன் தன் புலமை யளவிற் காற்கூறும் அத்துணையே யல்லது முற்றும் நிரம்பியதாகா தென்பது நம் பெரியார் கண்ட உண்மை. காணுதனவெல்லாங் காண்டற் கும் கேளாதனவெல்லாங் கேட்டற்கும் அறி வுலகத்து நிகழும் வியத்தகு அருஞ் செயல்களை உணர்ந்து இன்புறுதற்கும், நிரம்பிய புலமையே சிறந்த கருவியாகும். இவ் வுயரிய நோக்கங்களை நிறைவேற்றுதற்குரிய புலமையை உடலோம்பற்கு வேண்டிய பொருளளவிற் பயன்படுத்த எண்ணுதல் பொற்கொழுக்கொண்டு வரகுக்கு உழ எண்ணுவதனோடு ஒக்கும் என்ப. சிறந்துயர்ந்த நோக்கங்களை மேற்

கொண்டு திருவரு ளுணர்ச்சியிற் றலைப்படும் புலமைச் செல்வம் வாய்ந்து விளங்கிய நம் பண்டைத் தமிழ்ப்புலவர் பெருமக்களைப் பண்டைத் தமிழ் நில வேந்தர்கள் எத்துணைப் பெருமை பாராட்டிப் போற்றியொழுகினர் என்பதற்குப் புறநானூறு முதலிய நம் அரிய தமிழ் நூல்களே தக்க சான்றாக மிளிர்கின்றன.

தமிழ் நில மன்னர்கள் தமிழ்ப் புலவர்களைத் தம் உயிரினுஞ் சிறந்தாராக மதித் தொழுகிய செய்திகள் பற்பல உள்ளன. அம்மன்னர்க்கு அரசியற் சூழ்ச்சிக்குரிய அமைச்சராகவும், அறிவுரை கூறி நன்று தீதுணர்த்தி நல்லாற்றின் நிறுத்தும் ஆசிரியராகவும், அவர் குடிக்கண் உடன் றோன்றினார் முதலியவர்பாற் கலாம் விளை காலை நடுநின்று அறவுரை கூறி அதனைத் தீர்த்து அவரை அன்புநிலைப் படுத்தும் அக் குல முதியோராகவும் விளங்கினார் நம் தமிழ்ப் பெரும் புலவரே யாவர். முதுமையின் தளர்ச்சியிற் கருதுமென நேரும் இறப்பு முதலியவை பற்றிய அச்சம் நிகழா வண்ணம், உடல் இளமை பொருள் முதலிய வற்றின் நிலையாமைகளை நெஞ்சத்திற் பதியுமாறு எடுத்துரைத்து மெய்யுணர்விற் றலைப்படுத்தும் அறவோராகவும், காதலிகந்து கைவிடப்பட்ட கற்பரசியரை அவர்தங் கணவரோ டியைத்து நீதிபல கூறி நெறிபிறழா வண்ணம் வாழ்க்கை நிலைப் படுத்தும் நல்லுறவினராகவும் விளங்கிய பெருமை நம் தமிழ் புலவர்பாலதேயாம். தந்தை தாயர் முதலியோரை இழந்து வருந்தும் இளம்பருவத் துப் பெண்மக்கட்கு அத் தந்தை தாயார் முதலிய உறவாக நின்று நீதி வழாத நிலையிற் பாதுகாத்து நட்புக்கட் டூற்றிய பெரியாரும் புலனழுக்கற்ற நம்

தமிழ்ப் புலவர் பெருமானே யாவர். புணர்ச்சி பழகுதலின்றி உணர்ச்சி வாயிலாகவே நட்பு முதிரப் பெற்றும் அந் நாட்டார்க்கு இறுதிநேர்ந் துழி அதனைத் தம் உணர்ச்சிச் சிறப்பான் இயல் பில் தெரிந்து தம் உயிரையும் உடன் உய்த்து அன்புக் கடனாற்றிய ஆன்றவிடந்தங்கிய கொள் கைச் சான்றோரும் நம் தமிழ்ப் புலவரே யாவர்.

இங்ஙனம் அரசர்பாற் புலவரும், புலவர்பால் அரசரும் அன்பு வழிப்பட்டு ஒழுகிய சிறந்த வரலாற்றுப் பகுதிகள் பலவாம். தன்னைப் பாடி வந்த ஒரு புலவர்கு ஏதுங் கொடுக்கும் நிலை யில்லாத ஒரு வள்ளல் தலையினைக் கொடுபோய்த் தம்பி கைக் கொடுத்து விலையினைப் பெறுக எனச் சொல்லியதும், அவ்வள்ளற் பெருமான் உள்ள மறிந்த புலவர் பெருமான், மறுப்பேனாயின் மற்றொருவர்க்கு இங்ஙனங் கூறிக்கொடுக்க நேரின் மன்னர் பெருமானை இழக்க நேருமே என்று அஞ்சி அத்தலை தன் உடைமை எனவும், அதனை 'யான் வேண்டுங்காற் பெருவே' னெனவும் 'பெறுங் காறும் யார்க்கும் இதைக் கொடுத்தலாகாது' எனவுங் கூறி அவ் வள்ளலோடு பகைகொண்டிருந்த தம்பியின் மனத்தைக் குழைவித்து அன்புரிமைப் படுத்து ஒன்றுபடச் செய்து இன்புற்றதும் நினை யுங்கால், செந்நெறிப் படரும் மன்னவருள்ளமும், சொன்னெறிப் புலவர் தூய உள்ளமும் எத்துணைச் சிறந்துயர்ந்த நிலையில் உள்ளன என்பது நன்று புலனாகும். இந் நிகழ்ச்சி அறிவுடையா ரகத்தை உருக்கும் பான்மையதென்பதை யாவரும் உணர் வர். புலனழுக்கற்ற தூய பெரும் புலவர்களையும் அருண்மிகு நெஞ்சத்தினராகிய புரவலர்களையும் இரு கண்ணெனப் பெற்றுத் திகழ்ந்த நம் தமிழ்

நிலம் இற்றை ஞான்று ஒற்றைக் கண்ணிழந்து மற்றொரு கண்ணும் ஒளி நலங் குன்றப் பெற்று ஒடுங்கிக் கிடத்தலை உன்னுங்கால், எத்தகைய தமிழ் மனிதனும் வருந்தாமலிருக்க முடியாது.

அன்பர்களே !

பண்டை அரசர்பாற் புலவர் பெற்ற பரிசிலை உன்னுங்கால் அது மிக்க வியப்பைத் தருவதாகும்.

நூறாயிரக் கணக்கான பொற்காசுகளையும், முற்றூட்டாகப் பல நிலத் தொகுதிகளையும், விலையுயர்ந்த ஆடை அணிகலன்களையும், யானை தேர் முதலியவைகளையும் வரையாது வழங்கப் பெற்று மகிழ்கூர்ந்த செய்தியைப் பண்டை நூல்களான் உணர்தலோடு, இன்னும் அப் பரிசில் நிலங்களைப் பற்றிய ஆவணங்களானும் அப் புலவர் வழித்தோன்றல்களின் ஆட்சியானும் கண்கூடாகவும் காண்கின்றேம்.

புலவர் பாடும் புகழுடையா ரன்றே, தானே இயங்கும் வானவூர்திக்கண் இவர்ந்து செல்லும் நல் வினையாளர் என எண்ணப்பட்டனர்! புலவராற் பாடப்பெறுவது ஒன்றே தம் வாழ்க்கையின் பயனெனக் கொண்டு மகிழும் முன்னை வேந்தர் நன்ன ருள்ளம் எத்துணைச் சிறந்த தென்பதை விரித்துரைக்கவும் வேண்டுங்கொல்! “குறித்த பகைவனை வென்று வெற்றிமாலை புனையேனாயின் உயர்ந்த கல்வி கேள்விகளையுடைய மாங்குடி மருதன் தலைவனாகவுள்ள பலர் புகழுஞ் சிறப்பு வாய்ந்த புலவராற் பாடப் பெறாது என் நில

வெல்லே நீங்குக" என்று கூஞரை பகர்ந்த தமிழ்ப் புல வேந்தன் உள்ளப் பாங்கை உள்ளிப் பார்மின்! குறித்தாங்கு இன்னது செய்யேனுயின், இன்ன தீவினையாளனுவேன் என்னுஞ் சூளுரையிற் புல வராற் பாடப் பெருத தொன்று பெருந் தீவினைப் பயனெனக் கொள்ளப்படின், அன்னுர் பாடற் பேறு அரசர்தம் வாழ்க்கைக்கு எத்துணை விழுமிய தெனக் கருதப்பட்ட தென்பதை உற்று நோக்கு மின்கள்.

இத்தகைய சிறந்த நிலையிலிருந்த நம்முன்னைத் தமிழ்ப் புலவர் வழித்தோன்றல்களாகிய இக் காலத்துப் புலவர் பெருமக்கள் நிலை சிறிது வருந்தத் தக்கதாக உள்ளது, புலவர்க்குரிய உயரிய நோக்கங்களும் வரவரக் குறுகி வருகின்றன. அவரைப் புரக்கும் இயல்பினராகிய திருவுடை யார் நிலையும் புலமைக்கு மதிப்பளிப்பதாக இல்லே. எதற்கு எது காரணமென்பதை ஈண்டு ஆராய வேண்டா. அவரவர் கடமையை அறிந்து மேற் கோடலே சிறந்ததாகும். கல்வி, அறிவின்பத்தை அளித்து வாழ்க்கையைத் தூய்மைப் படுத்தற்குரியதாம் என்னும் நம் புலமையின் விழுமிய நோக்கத்தைத் தளரவிடாது மேற்கொள்ளுவோமாயின், நம்மைப் புரத்தற்குப் புரவலரும் கடவுளரும் நம் பக்கலில் தாமே அணுகித் தம் கடமையைப் புரிய முற்படு வர். இவ்வுண்மையை நம் புலவர் பெருமக்கள் உறுதியாகக் கடைப் பிடித்தல் வேண்டும்.

## தவிர்தற் குரியன

இனிப் பழங்கதை பேசிக்கொண்டிருத்தலிற் பயனின்று. செய்வன இன்ன தவிர்வன இன்ன என்னுஞ் சூழ்ச்சியிற்றலைப்பட்டு நல்லன காண்ட

லும் அவற்றைத் தாழாது செயலின் மேற்கோட லும் வேண்டும். விலக்கியன ஒழிதலும் அறமென்ப வாகலின், முதலில் நம் புலவர் பெருமக்கள் தம் வாழ்க்கையில் தீயகுணஞ்செயல்கள் நெருங்க இடந்தராமல் அவற்றைக் களைதல் வேண்டும். தீயன களைந்தாலன்றி நல்லன செய்தற்கு இடனமைதல் அரிது.

தவிர் னவற்றுள் ஒரு சிலவற்றை ஈங்குக் குறிப்பிடல் மிகையாகாதென் றெண்ணுகிறேன். ஒருவரை யொருவர் புறங்கூறல், இல்லன கூறி எள்ளி நகையாடல், தம் அறிவினும் மற்றையோ ரறிவு தாழ்ந்ததென வாய்ப்பறை யறைதல், ஆகூழால் ஒருவர்க்குக் கிடைக்கும் ஊதியங்கண்டு நெஞ்சம் புழுங்கல், பிறர் அறிவிற் கண்டுரைத்த சுவைநலமிக்க சொற் பொருள் நலங்களைக் கேட்டுணர்ந்து உவகை யுறாமை, ஒருகால் தம் புலமை யுள்ளம் தன்னை அறியாது உவகையுறத் தொடங்கின், அதனைச் சினந்து மேலெழ விடாது அடக்கி விடுதல், மொழியறிவுத் துறையில் தாம் மேம்பட்டதாக எண்ணிக் கடவுணிலை யுணர்ச்சி யிற் றலைப்படாதிருத்தலே புலமை மாண்பெனக் கருதல், கடவுள் கலையுருவினன் என்பதை மறந்து கலவிக்கும் கடவுட் கொள்கைக்கும் இயைபின் றென எண்ணல், 'கற்ற கல்விக்குத் தக நிற்க' என் னும் பொருளுரையைப் பொருட்படுத்தாமல் கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பின்றெனக் கோடல், இகலிலர் எஃகுடையராய்த் தம்மிற் குழீஇ இன்புறுதலை விடுத்துப் பல்பிறப்பினுந் தொடர்ந்த பகைஞர் எனக் கொண்டு ஒருவரை ஒருவர் வெறுத்தல், தமக்கே பிறர் உதவி புரியற் பாலர் தாம் பிறர்க்கு ஒல்லும் வகையானும் உதவி புரிய முற்படல் தம் புலமை மாண்புக்கு

ஏலாதெனை நினைத்தல், பிறர் கூறும் நல்லன கொண்டு இன்புறுதற்கு உள்ளம் ஒருப்பாடமை யோடு அந்நல்லனவற்றையும் தீயனவாகத் திரித்துக்கூறமுற்படுதல், உண்மை தெளிதற்கு நடு நின்றாராய்ந்து தங்கொள்கை மறுக்கப்படுமாயின், அதனைப் புலமைக்கு அழகென ஏலாது மறுத் தாரை முனிந்து வருத்தமுறுதல் முதலிய இன்னோ ரன்ன தீய குணஞ் செயல்களை அறவே ஒழித்தல் நன்று.

பண்டைப் பிறப்பின் தொடர்பால் ஒரோவழி அவை முற்படினுந் தம் மதிவலியால் இயன்றாங்கு விலக்க முயலல் வேண்டும். அவ் விலக்கு முயற்சி பயன்பட்டில தெனினும் தம்பால் நிகழ்ந்த இவை தீயன என்றுணர்ந்த அவ்வளவிற் பயன் உண் டென்ப ஒருசாரார். இத்தீய குணங்களில் ஒரோ வொன்றுடையாரும் சிலபல உடையாருமாகப் பலரும், அறவே இலராகச் சிலரும் உலகத்துக் காணப்படுவர், ஏதேனும் இருப்பிற் களைதல் வேண்டும் என்பதை நினைவுறுத்தற்குக் கூறியதே யன்றிப் புலவரெல்லோரும் இத்தீய குணஞ் செயல்கள் உடையரெனக் கொண்டு கூறியதன்று. ஒரு பிழையுமில்லாத தூயதன்மை கடவுளிடத் தன்றி மக்களுட் காண்டலரிது. ஆயினும் மக்கட் பொதுவாக உள்ள பிழைகளைப் புலமைச் சிறப் பாற் களைதற்கு முற்படவேண்டுவதே புலமைப் பேற்றின் கடமை யாகும்.

ஒராராய்ச்சியில் ஒரு காலத்தில் தமக்குக் கிடைத்த சான்றுகளைக் கொண்டு ஒரு வகையாக முடிக்கப்பட்டதொன்று பிறிதொரு காலத்திற் பிற சான்றுகளால் தவறுடைய தெனத் தாமே கண்டாதல் பிறர் கூறக்கேட்டாதல் உண்மை

தெளிய வரின், அப்பொழுது தம் பிழைபட்ட முன்னைக் கொள்கையைக் கை விட்டு உண்மைக் கொள்கையைத் தழீஇக் கோடலே புலமையின் சிறப்பாகும். பின்னர் எத்துணைத் திட்ப நுட்ப மான சான்றுகள் கிடைப்பினும் மாறுபட முன்னர்க் கண்ட முடிவினின்றும் வேறுபடேம் என்னுங் கொள்கை தவறுடையதாகும். உண்மை நிலைகாண்டற்குப் பலவாறு சூழ்ந்து ஒரு முடிபுக்கு வருதலும், பின்னர் அது தவறுடைத்தெனக் கண்டவழி அதனை மாற்றிக் கோடலும் நடு நிலைப் புலமையுடையார்க்கு இயல்பேயாம்.

புலவரில் ஒரு சிலர் தம்மைச் சிறந்த ஆராய்ச்சியாளரென உலகம் மதிக்க வேண்டும் என்னும் வேட்கையுடையராய்ப் பண்டை நூலுரை வரலாற்று முறைகளில் தவறில் வழியுந் தவறுகளை ஏறிட்டுக் கூறி வருகின்றனர். அக் கூற்றுக்கள் அவர்தம் புலமைத் தவறுதலையே புலப்படுத்துவனவாம். அவர் அறியாமையால் அங்ஙனங் கூறின், அஃதொரு பெருந்தவறாகாது; அறிவுடையார் தேற்றத் தேறுவராகலின், அறிந்து கூறுவரேல், அது புலமைக்கு இழுக்காகும். பழை யன கழிதலினும் புதியன புகுதலினும் முறையே தீமையும் நன்மையும் அறிந்து கோடல் நன்று. கால நிகழ்ச்சிக்கு ஏற்பன என்பதை நெடிது சூழ்ந்து முடிவு செய்தல் வேண்டும்.

தம் மொழிக்கு ஏற்றங்கூற முற்பட்டுப் பிற மொழிகளைப் பழித்துரைத்தலுந் தவறாகும். தம் மொழிக்கண் இல்லாத சிறப்பொலி யெழுத்துக் கள் வேற்று மொழிக்கண் இருத்தல் கண்டு 'அவை எதற்கு?' என ஒரு புலவர் ஒரு பேரவை யில் எள்ளி நகுவரேல், அவர் புலமையினியல்பை

எவ்வாறு கருதலாம்! ஒருவன்பாலுள்ள பொருளளவினும் மற்றொருவன்பால் மிகுதியான பொருள் இருப்பின் அது பற்றின் அவண் எள்ளப் படுதல் யாண்டுங் காணுந்தொன்று. ஒரு குழுவில் உரைக்கப்படும் பொருளுரை அவ்வளவின்றிப் பரந்த அறிவுலகத்துக்கும் ஏற்ப விளங்குதலன்றோ நலமாகும்.

அன்பர்களே!

இன்னோரன்ன இழுக்கு நெறிகளில் நம் புலமை வாழ்க்கையை நடத்தலாகாது. ஒருவரைப் புனைந்து பாடுங்கால், "அவர் செய்யாதனவற்றைச் சொல்லி அவர் குணங்களைக் கூறுதலை யறியாத தாகும் எம்முடைய சிறிய செவ்விய நா" என்ற புலவர் பெருமான் அறிவுரையை நினையுங்கால், நம் தேனினுமினிய செந்தமிழ்ச் சுவையை யுணர்ந்த நாவானது ஒன்று கூற முற்படுங்கால் எவ்வளவு நடு நிலையுடன் சீர் தூக்கி யறியும் உளத்தொடு கூடியெழ வேண்டும் என்பது நன்கு புலனாகும்.

கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறாமை யும், பிறர்க்கு இன்னல் விளைக்கும் பொய்ம்மொழி புகலாமையும், இடறினுந் தளரினுங் கடவுட் கொள்கைக்கு மாறுபடப் பேசாமையும், நடுநிலை பிகந்து நவிலாமையும். பயனில்லன பகராமையும் ஆகிய இன்னோரன்ன செயல்களே நம் தமிழ்ச் சுவையுணர்ந்த நாவிற்கு உரியனவாம் என்பதை உணர்ந்து கடைப்பிடித்தல் வேண்டும்.

## செய்தற்குரியன

புலத்துறை முற்றிய நலத்துறையும் அன்பரீர் !

இனி நாம் செயற்பாலன இன்ன வென்பதைப் பற்றிச் சிறிது நினைவு கூர்வோம். பண்டு மிகப்பரந்த நிலப் பகுதிகளைத் தனதாகக் கொண்டிருந்த நம் பால்வாய்ப் பசுந்தமிழ், தன்னைப்புரப்பார் துணை சுருங்கி வந்தமை யானும், பிற மொழிகள் அம்மொழியாளர் பேருக்கத்தால் வளர்ச்சி யெய்தித் தன் நில வெல்லையைக் கூறுகொள்ளக் கொடுத்துத் தன் இடம் சுருங்கப் பெற்றமை யானும். கற்பார் நோக்கம் வரவரக் குறுகி வந்தமை யானும், திருவருளுணர்ச்சி முதலிய உயரிய நோக்கங்கள் சிறிது சிறிதாகக் கைவிடப் பெற்று வருகின்றமையானும், தன்னிடத்துள்ள சிறந்த பல முது நூல்களைக் கால மாறுபாட்டால் நீருண்ண, நெருப்புண்ண, நில முண்ணக் கொடுத்து இழந்தமையானும், தன்னைப் பயில்வார்க்கு இம்மை இன்புதவும் பொருட்பேற்றுக்கு இக்காலத்து அரசியல் இடந்தராமையானும், பிறவாற்றானும் தன் ஆக்கங்குன்றி நிற்கின்றது.

ஒரு நாடு தனக்குரிய மொழியை ஆக்கமுற ஓம்பிப் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலை எய்துதல் அரிதாம். மொழி வளர்ச்சி கொண்டே அது வழங்கும் நாட்டின் நலத்தை யுணரலாம். எந்த நாடு தன் மொழிச்சுவையை உணர்தலிற் பின்னடைகின்றதோ அது மற்றை யெல்லா வளங்களானும் பிற்பட்டதாகும். ஆதலின் தமிழ்ச்செல்வர்களும் தமிழ்ப்புலவர் களும் விழிப்புடையராய் நின்று நம் உடைமையை

விளக்கமுறப் பேணல் வேண்டும். நம்மொழி வளர்ச்சியில் நாம் செயற்பாலன பலவாகும்.

முதலாவது இற்றை நாள் தமிழ் வழங்கும் நிலம் எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரு சிறந்த கல்லூரி தமிழ் நாட்டின் நடுவண் நீர் நில வளங்கள் நிறைந்த அகன்ற இடத்தில், ஆசிரியர்களும் மாண வர்களும் ஒருங்கிருந்து, கல்வியை உயரிய நோக்கங் களோடு பயிற்றவும் பயிலவுந் தக்க முறையில் நிலை பெறல் வேண்டும். இம்மை நலம் பெறற்குரிய மருத்துவம் தொழிற் கல்வி முதலிய பயிற்சிகளும் உடன் நிகழ்தல் இன்றியமையாததாகும். அக் கல்லூரியின் உறுப்புக்களாகப் பல நிலையங்க ளமைந்து அவற்றுல் தமிழ்க்கு வேண்டற்பாலன வாகிய பிறமொழி நூல்கள் மொழி பெயர்க்கப் பட்டும், புதிய உண்மையாராய்ச்சிகள் செய்யப் பட்டும், பல நூலுரைகள் வெளி வரல்வேண்டும். தமிழ் நாடு முழுதும் இதுகாறும் நிறுவப்பட்டன வும், இனி நிறுவப் பெறுவனவுமாகிய பல கல்வி நிலையங்களெல்லாம் அத் தமிழ்ப் பெருங் கல்லூரிக் குக் கிளைகளாக அமைதல் வேண்டும்.

சிறந்த நூலுரைகளை ஆக்கிப் புலமை யரங்கேறினூர்க்குத் தகுதியான பட்டங்களும் பரிசுகளும் வழங்கி அவரைப் பெருமைப் படுத்தல் வேண்டும். தமிழினியல்பை நன்குணராது ஆரவார நீர்மையராய்ப் போலி நூலுரைகளை வெளிப் படுத்தித் தமிழகத்திற்கும் தமிழ் மொழிக் கும் இழுக்குண்டாக்கும் போலிப் புலவர்களை அறிந்து அறிவுறுத்தி அவரை நல்லியற் புலவராக்க முயல வேண்டும். உண்மைத் தமிழறிஞரை ஒடுங்கி யிருக்க விடாது சிறப்பிடனளித்து உவகையுறுத்தல் வேண்டும். இயல் வரம்புடைய நம் மொழிக்கண்

அவ் வரம்பிகந்து வெளிப்படும் புலத்துறைக் கொல்லாப் போலி நூலுரைகள், செவ்விதின் ஆக்கப்பட்ட சீரிய நூல்களுக்குக் களைகளாக நெருங்கிப் படர்ந்து தீங்கு புரிகின்றனவாதலின் அக் களை கட்டல் சொல்லேருழவராகிய தமிழ்ப் புலவர் கடனாகும். அக் களை களையப்பட்டாலன்றி நம் செழுந் தமிழ்ப் பைங்கூழ் வளர்தற்கு இடமின்றாகும். தீஞ்சுவை மிக்க திருவருட் கனியை நமக்கு உதவத் தோன்றிய செழுந் தமிழ்ப் பைங்கூழைப் பல்லாற்றானும் போற்றிக் காத்தாலன்றோ அந் நற்பயனை நன்கு பெறமுடியும்.

ஆங்கிலம், வடமொழி முதலிய வேற்று மொழிகளிலுள்ள பல துறைப்பட்ட அரிய நூல்களை அவ்வம் மொழியோடு தமிழ் கற்ற மதி நுட்பமுடைய புலவர்களைக் கொண்டு விளக்கமான சிறந்த முறையில் மொழி பெயர்ப்பித்து வெளிப்படுத்தல் வேண்டும். இத துறை தமிழ் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்ற தொன்றாம். வேற்று மொழிகளிலுள்ள ஒரு திறப்பட்ட பல நூல்களை நன்கு பயின்று அவற்றின் திரண்ட கருத்துக்களைத் தொகுத்துத் தனித்தமிழ் நூலாக வெளிப்படுத்தல் சாலச் சிறந்ததாகும். இத் துறையில் தமிழ்ப் புலவர் முற்படுவராயின், 'மேல் வகுப்புப் பயிற்சிக்குரிய பல திறப்பட்ட நூல்கள் தமிழில் இல்லையே' என்னுங் குறை ஒழிந்துவிடும். இக் குறை கொண்டு பல்கலைக் கழகத்தார் தமிழ் வளர்ச்சிக்குத் தடைகூறும் குறையும் ஒழியும் மொழி பெயர்ப்பால் ஒரு மொழி நூல் வளர்ச்சி பெறுதல், அம் மொழிப் புலவர் இயன்மதி யாற்றக்கு அத் துணைச் சிறப்பின்றென்பது உண்மையெனினும், இயற்கையாகப் பல் புதிய சிறந்த நூல்களை மதிவலியால் ஆக்கும் ஆற்றல் வளர்ச்சி யெய்துங்காறும் மொழி பெயர்ப்

புச் செயலை மேற்கோடலால் இழுக்கின்று என்பது என் கருத்து. இது கருதியே மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தலையும் நூல் யாப்பு வகையுள் ஒன்றெனக் கண்டனர் தொல்காப்பியனாரும் என்க.

சென்னைப் பல்கலைக் கழகத்தையும், அதனினும் தமிழ் வளர்ச்சிக்கு மிக நெருங்கிய இயைபுடைய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும், தெய்வத் தமிழுஞ் சைவத் துறையுஞ் செழித் தோங்க எழுந்த திருவாவடுதுறை 'திருப்பனந்தாள், தருமபுரம் முதலிய செல்வமலி சைவ மடங்களில் விளங்குந் தலைவர்களையும், தமிழ் நிலத்துச் சிற்றரசர்களையும், தமிழன்பர்க்களாகிய மற்றைத் திருவுடையாரையும் மேற் காட்டிய தமிழ் வளர்ச்சிகளுக்கு வேண்டுவன செய்யும் வண்ணம் இன்னோரன்ன புலவர் மாநாடுகள் கேட்டுக்கொள்ள வேண்டும். சற்றுக் காலத் தாழ்விற பயன்பெறுவதாக இருப்பினும் அதுபற்றி வெறுத்துப் பேசாமல் மீண்டும் மீண்டும் வேண்டிக் கோடல் நன்றும். அன்போடு பன்னாள் அழைத்தால் இறைவனும் வெளிப்பட்டு அருளாமலிருக்க முடியாது. ஆதலின் சைவாதீனத்துத் தலைவர்களையும் அன்பர்கள் பிறரையும் அன்புக் கயிற்றாற் பிணிக்க முயல்வதே அறிவுடைமை யாகும்.

## இறுவாய்

இம் மாநாடு புலவர் பெருமக்கள் வாழ்ந்த சோழ வளநாட்டில் தஞ்சை திருச்சிராப்பள்ளித் தலை நகர்களுக்குரியதாக இத்துறையூரில் முதலில் தொடங்கப் பெறினும், திருவருட் பாங்கால் இது வரும் ஆண்டு முதல் தமிழ் வழங்கும் நிலங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவெனக் கொள்ளப்பட்டு,

ஒவ்வோராண்டினும் ஒவ்வொரு தலை நகரினும் கூடித் தமிழ் மொழிக்கும் தமிழ்ப் புலவர் முதலிய மக்களுக்கும் நலம் பயக்கும் வண்ணம் திருவருட் டுணைகொண்டு தமிழன்பர்கள் செய்தல் வேண்டும். செல்வரும் புலவருமாகிய தமிழ் மக்கள் தம்மில் வேறுபாடின்றி ஒற்றுமையுடன் ஒருங்கியைந்து தமிழன்னையைப் பேண முன்வரின் அவ் வன்னை தன் மக்களின் நலம்வளர வாழ்த்துவள். அன்னை யர் வெறுப்புக்கு மக்கள் ஆளாதல் நலமன்று. தமிழன்னை தன் மக்களாகிய நம்மை உளங் குளிர்ந்து வாழ்த்துவளாயின் நம் வாழ்க்கை சிறந்த இன்பப் பேறுடையதாகும் என்பதை உறுதியாகக் கடைப் பிடிப்பீர்களாக.

செந்தமிழ்ப் புலவர்காள் !

இனிப் புலமை வாழ்க்கைக்கு வேண்டுவன பலவுள வெனினும், புலவர் மாநாட்டைத் திறந்து வைக்கும் ஒருவன் கடமை இதனினும் நீண்டு சேறல் முறையன்றாதலின், இம்மட்டில் அமைகின் றேன். நுங் கட்டளைப்படியே திருவருட்டுணை கொண்டு இம் மாநாடு திறக்கப்பெறுகின்றது. இதனுட் புகுமின் ! புகுதுங்கால் முதற்கண் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை நெஞ்சார நினைமின் ! தமிழ்த்தாயை வாழ்த்துமின் ! யான் கூறியவற்றுட் கொள்ளுவன கொண்டுமின் ! இன் னும் புலமை வாழ்க்கைக்கு வேண்டுவன சூழ்மின் ! சூழ்ச்சி முடிவில் துணிவு எய்துமின் ! அத் துணி

பொருளைத் தாழாது செயலின் மேற்கொண்மின்! நாகரிகமிக்க உலகங்களால் நம் தமிழ்ப்புலமை பாராட்டப் பெறும் வண்ணம் ஒழுகுமின்! புலமை வாழ்க்கையின் சிறந்த நோக்கங்கள் நிறைவேறப் பெற்று நல்லின்பம் எய்துமின்! இருகாறும் என் சிற்றுரையைச் செவியேற்று உளங்கொண்ட நும் பொறுமைக்கு என் வணக்கம் உரியதாகுக.

---